அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் முழுமையான சுகாதார பாதுகாப்புத்தன்மை கொண்டது.

பிரத்தியேகமான விசேட கிருமி எதிர்ப்புத் தன்மை கொண்ட இரசாயன கலவை மற்றும் இயற்கை மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட நறுமணம் மிக்க சிறப்பு நிறப்பூச்சைக் (பேயின்ட்) கொண்டு நமது பத்திரிகை அச்சிடப்படுகின்றது என்பதை வாசகர்கள் அனைவருக்கும் அன்புடன் அறியத்தருகின்றோம்.

Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்




மலர் : 01, இதழ் : 26 சார்வரி வருடம், ஆடி மாதம் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (28.07.2020) ஹிஜ்ரி - 1441 துல்ஹஜ் பிறை-06, 0115886187 பக்கங்கள் 12 விலை ரூ.20




# 5ஆம் திகதி தேர்தல் - 6ஆம் திகதி வாக்கெண்ணல் வாக்குப்பெட்டிகள் இரவில் மாறலாம்!



## யாழில் சுவிஸ் தூதுவரிடம் அச்சம் வெளியிட்டார் விக்னேஸ்வரன்

• நமது நிருபர்

இலங்கைக்கான சுவிஸ் தூதுவர் ஹான்ஸ்பீட்டர் மொக் மற்றும் சிடோர்னியா கேபிறியல் (அரசியல் விடயங்களுக்குப் பொறுப்பானவர்) ஆகியோர் வடமாகாண முன்னாள் முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனை நேற்றுக்காலை யாழ்ப்பாணத்தில் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பில் விக்கினேஸ்வரன் சுவிஸ் தூதுவருக்கு நிலைமைகளை விளக்கும்போது கூறியதாவது, ஏ9 வீதியில் சுமார் 20 வீதித் தடைகள் இராணுவத்தினரால் போடப்பட்டிருப்பது எதற்காக என்று விளங்கவில்லை... 02

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.

## கடத்தப்பட்ட எமது பிள்ளைகளுக்கு என்னவாயிற்று? கருணா-பிள்ளையான் அணிகள் பதில்கூற வேண்டும்

### காணாமலாக்கப்பட்டவர்களின் தாய்மார் கதறல்!



வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினால் தமது உறவுகளைத் தேடி ஆர்ப்பாட்டம் நேற்று செங்கலடி சந்தியில் நடைபெறவிருந்த நிலையில், நீதிமன்ற கட்டளையை பெற்று போராட்டத்தை பொலிஸார் தடை செய்துள்ளனர்.

கொவிட் 19 நடைமுறைக்கமைய பொலிஸாரின் அனுமதியும் பெற்று, 100 பேருக்கும் குறைவானவர்கள் என்ற நிபந்தனைக்கு ஏற்பவே போராட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இதில் பெரும்பாலும் கருணா மாற்றும் பிள்ளையான் குழுவினரால் பாதிக்கப்பட்ட... 02

## போரால் நிறைவேற்றிக்கொள்ள முடியாதவற்றை ஜனநாயகத்தை காட்டிப் பெற கூட்டமைப்பு முயற்சி

### பிரதமர் மஹிந்த குருநாகலில் தெரிவிப்பு



'இந்நாட்டின் இளைஞர், யுவதிகள் வீதிகள் தோறும் கொலைசெய்யப்பட்ட யுகமொன்று மீண்டும் ஏற்படாதிருப்பதற்கு இம்முறை தேர்தலில் தெளிவான தீர்மானமொன்றை மேற்கொள்ளுமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைவர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

தம்பதெனிய, நாரம்மல திவிநெகும சந்தை வளாகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற சந்திப்பில் உரையாற்றிய பிரதமர்,.. 02

## உயிர்த்த ஞாயிறு தின விசாரணைக்குழு அழைப்பாணையை புறக்கணித்த வி.ஐ.பி.மார்!

உயிர்த்த ஞாயிறு தின விசாரணை ஆணைக்குழுவின் விசாரணைகளுக்கு அழைப்பாணை விடுக்கப்பட்ட 14 பேரில் பலர் உரிய பிரதிபலிப்பை வெளியிடவில்லையென விசாரணை ஆணைக்குழுவின் செயலாளர் புவனேக ஹேரத் நேற்று தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் அமைச்சர்களான ருவன் விஜேவர்தன, சாகல ரத்நாயக்க, ரஞ்சித் மத்துமபண்டார, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர்களான கபில வைத்தியரத்ன, கருணாசேன ஹெட்டியாராச்சி, ஹேமசிறி பெர்னாண்டோ, பதில் பொலிஸ்மா அதிபர் பூஜித்த, முன்னாள் புலனாய்வுத் தலைவர் சிசிர மெண்டிஸ், முன்னாள் இராணுவ புலனாய்வுப் பிரிவின் தலைவர் சூலா கொடிதுவக்கு, முன்னாள் பிரதிப் பொலிஸ்மா அதிபர்களான நாலக்க சில்வா ரவி செனவிரத்ன, சி.ஐ.டி. பணிப்பாளர் ஷானி ஆகியோருக்கு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டிருந்தன. 02

## ஈஸ்ரர் தின தாக்குதல்தாரிகள் குறித்து துருவித்துருவி ரிஷாட்டிடம் ஐந்து மணிநேரம் தீவிர விசாரணை!

### தாராளமாக தேடுங்கள் என்று கூறியதாக பதியுதீன் 'தமிழன்' செய்திகளிடம் கருத்து



முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் விசாரணை ஒன்றிற்காக வவுனியா ஈரற்பெரியகுளம் பொலிஸ்நிலையத்தில் நேற்றுக் காலை 10 மணிக்கு ஆஜராகியிருந்தார்.

அவரை நேற்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு விசாரணைக்கு ஆஜராகுமாறு, குற்றப் புலனாய்வுத் திணைக்களம் (சி.ஐ.டி.) கடந்த வாரம் அழைப்பாணை விடுத்திருந்தது.

ஈஸ்டர் குண்டுத்தாக்குதல் தொடர்பிலான விவகாரத்தில், வாக்குமூலம் வழங்குவதற்காக முன்னாள் அமைச்சர் ரிஷாட், ஆஜராக வேண்டுமென, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தைச் சேர்ந்த பொலிஸ் பொறுப்பதிகாரி இந்த அழைப்பாணையை விடுத்திருந்தார். அவரது தேர்தல் பணிகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில், குற்றப்புலனாய்வுத்... 02

## கொழும்பு நட்சத்திர ஹோட்டலில் கைதான சம்மாந்துறைவாசி தடுத்து வைப்பு! பொலிஸ் தீவிர விசாரணை


கொழும்பு மத்தியில் அமைந்துள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டலில் சந்தேகத்திற்கிடமான முறையில் நடமாடினார் எனக்கூறி 23 வயதுடைய சம்மாந்துறை இளைஞர் ஒருவரை கோட்டை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

ஹோட்டலின் மேல் மாடிவரை சென்று கொழும்பின் இடங்களை படமெடுத்த அந்த இளைஞர், என்ன காரணத்திற்காக ஹோட்டலுக்கு வந்தார் என்பதை நிரூபிக்காத காரணத்தினாலும் - முன்னுக்குப் பின் முரணாக தகவல்களை வழங்கியதாலும் அவரை கைதுசெய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

அவர் தற்போது தடுத்துவைக்கப்பட்டு கோட்டை பொலிஸாரால் விசாரிக்கப்பட்டு வருகிறார்.




## மூத்த தமிழ் ஊடகவியலாளர் காசி நவரத்தினம் காலமானார்!



இலங்கை தமிழ் ஊடகத்துறையின் மூத்த ஊடகவியலாளர் காசி நவரத்தினம் தனது 79 ஆவது வயதில் கொழும்பில் காலமானார்.

1965ஆம் ஆண்டு வீரகேசரி பத்திரிகையில் பணிக்குச் சேர்ந்த அவர் நீதிமன்ற செய்தியாளராகவும், உதவி ஆசிரியராகவும் பணியாற்றினார். 02

## தனிமைப்படுத்தப்பட்டோர் வாக்களிப்பதற்கு விசேட திகதியை தீர்மானிப்பதில் சிக்கல்!

### தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவிப்பு



கொரோனா வைரஸ் காரணமாக தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்கள் வாக்களிப்பதற்கென விசேட திகதியை அறிவிக்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்கள் காணப்படுகின்றன என தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

31ஆம் திகதி தனிமைப் படுத்தப்பட்டுள்ளவர்கள் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகளை செய்வதில் பிரச்சினைகளை எதிர்கொள்வதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய... 02

## வெளிநாடுகளிலுள்ளவர்களை நாட்டுக்கு அழைக்கும் நடவடிக்கை அடுத்த வாரம்!

வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்களை இலங்கைக்கு அழைத்துவரும் நடவடிக்கைகள் அடுத்தவாரம் மீண்டும் ஆரம்பமாகவுள்ளதாக இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். இதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்துள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கு புனர் வாழ்வளிக்கும் கந்தக்காடு மத்திய நிலையத்தில் கொரோனா நோய்த்தொற்றுக்குள்ளான நோயாளர்கள் அதிகளவில் இனங்காணப்பட்டமையை தொடர்ந்து வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவரும் நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தன. தனிமைப்படுத்தல் மத்திய நிலையங்களில் வசதிகள்... 02



## குற்றச் செயல்களை அறிவிக்க விசேட தொலைபேசி இலக்கங்கள்!

போதைப்பொருள் மற்றும் திட்டமிடப்பட்ட குற்றச்செயல்கள் தொடர்பில் முறையிட 1997 மற்றும் 1917 என்ற தொலைபேசி இலக்கங்களை பொலிஸ் அறிமுகப்படுத்தியுள்ளது. இன்று முதல் இந்த தொலைபேசி இலக்கங்கள் ஊடாக முறைப்பாடுகளை தெரிவிக்கலாம்.

| லொத்தர் | வாரம் | திகதி | ஆங்கில எழுத்து | இலக்கங்கள் |
|---|---|---|---|---|
| அத கோட்டிபதி | 985ஆவது வாரம் | 2020 ஜூலை 19ஆம் திகதி | W | 36 44 53 64 |
| அத கோட்டிபதி | 986 ஆவது வாரம் | 2020 ஜூலை 20ஆம் திகதி | X | 10 17 24 34 |
| சுப்பர் போல் | 1179 ஆவது வாரம் | 2020 ஜூலை 20ஆம் திகதி | T | 17 22 25 58 |
| சனிதா வாசனா | 3340 ஆவது வாரம் | 2020 ஜூலை 20ஆம் திகதி | W | 01 11 50 63 |
| கோட்டிபதி கப்ருக | 601 ஆவது வாரம் | 2020 ஜூலை 21ஆம் திகதி | K | 08 32 33 61 |
| அத கோட்டிபதி | 987 ஆவது வாரம் | 2020 ஜூலை 21ஆம் திகதி | U | 06 27 36 60 |
| சனிதா வாசனா | 3341 ஆவது வாரம் | 2020 ஜூலை 22ஆம் திகதி | X | 15 26 30 68 |
| அத கோட்டிபதி | 988 ஆவது வாரம் | 2020 ஜூலை 22ஆம் திகதி | E | 10 40 50 51 |
| சனிதா வாசனா | 3342 ஆவது வாரம் | 2020 ஜூலை 25ஆம் திகதி | Y | 14 26 59 66 |
| கோட்டிபதி கப்ருக | 603 ஆவது வாரம் | 2020 ஜூலை 26ஆம் திகதி | W | 35 38 61 70 |
| அத கோட்டிபதி | 991 ஆவது வாரம் | 2020 ஜூலை 2ஆம் திகதி | N | 15 32 50 55 |
| சுப்பர் போல் | 1181 ஆவது வாரம் | 2020 ஜூலை 25ஆம் திகதி | D | 03 53 59 77 |
| அத கோட்டிபதி | 992 ஆவது வாரம் | 2020 ஜூலை 26ஆம் திகதி | I | 15 37 61 72 |
| சுப்பர் போல் | 1182 ஆவது வாரம் | 2020 ஜூலை 26ஆம் திகதி | C | 27 54 73 74 |

# ஆயரிடம் ஆசிபெற்றனர் விக்னேஸ்வரன் தலைமையிலான த.ம.தே.கூ. வேட்பாளர்கள்



[மன்னார் நகர்]

தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் மன்னார் நகர சபை உறுப்பினர் எஸ்.ஆர்.குமரேஸ் தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது மன்னாருக்கு வருகை தந்த வட மாகாண முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தலைமையிலான குழுவினர் மன்னார் ஆயர் இல்லத்திற்குச் சென்று மன்னார் மறைமாவட்ட ஆயரிடம் ஆசி பெற்றனர்.

# குத்தகை கட்டணங்களை செலுத்த மேலும் 6 மாதகால அவகாசம்

பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்களுக்கான மாதாந்த குத்தகை கட்டணங்களை செலுத்துவதற்கு மேலும் கால அவகாசம் ஒன்றை வழங்க ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தீர்மானித்துள்ளார்.

இதன்படி மாதாந்த குத்தகை கட்டணங்களை செலுத்துவதற்கு மேலும் 6 மாத கால அவகாசத்தினை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அகில இலங்கை பாடசாலை சேவை வான் உரிமையாளர் சங்கத்தின் வேண்டுகோளுக்கு பதிலளிக்கும்விதமாகவே ஜனாதிபதியின் இந்த தீர்மானம் அமைந்துள்ளது.

# போதைப்பொருள் ஒழிப்புப் பணியக லொறியின் ரயர்களை கழற்றி எடுத்துச் சென்ற பொலிஸ் சாரதி!



கொழும்பு கோட்டை பாரொன் ஜயதிலக மாவத்தையில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பணியகத்துக்கு சொந்தமான லொறியின் பின்பக்கத்திலுள்ள இரண்டு ரயர்களை கழற்றிக் கொண்டு சென்ற சம்பவம் தொடர்பாக பொலிஸ் தலைமையகத்தில் கடமையிலிருந்த பொலிஸ் கான்ஸ்ரபிள் (வாகன சாரதி) கடந்த சனிக்கிழமை கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஒரு இலட்சம் ரூபாவுக்கு அதிக விலையுடைய இவ்விரு ரயர்களும், சந்தேகநபருக்கு சொந்தமான களனி கோணவல பிரதேசத்திலுள்ள வீடொன்றிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஒரு வருடமாக அந்த லொறி குறித்த இடத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்ததோடு அதற்கு எந்த பாதுகாப்பும் வழங்கப்பட்டிருக்கவில்லை என்றும் பொலிஸ் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய கோட்டை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்ததுடன் அந்த பிரதேசத்தில் உள்ள சீ.சீ.ரி.வி. கெமராக்களை பரிசோதித்தபோதே இந்த சந்தேகநபர் இனங்காணப்பட்டுள்ளார்.

பிரதான சந்தேகநபர் வழங்கிய தகவலுக்கமைய மற்றைய சந்தேகநபரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டுள்ள இந்த சந்தேகநபர்கள் இருவரும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டனர்.

# நாட்டின் இரு வேறு பிரதேசங்களில் துப்பாக்கி - ரவைகளுடன் இருவர் கைது





கடந்த சனிக்கிழமை தமன பொலிஸ் பிரிவு தீகவாபி பிரதேசத்தில் சம்மாந்துறை பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட துப்பாக்கிகள் 2, துப்பாக்கிக்குரிய சில பாகங்கள், 12 ரவைகளுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதேபோன்று கடந்த ஞாயிற்றக்கிழமை பதுரலிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருதுகஸ்மான பிரதேசத்தில் அழுத்கம பொலிஸ் விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப்பின் போது துப்பாக்கி ஒன்று மற்றும் ரவைகளுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## உயிர்த்த...

இவர்களில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால, பூஜித்த ஜயசுந்தர, கருணாசேன, சிசிர மெண்டிஸ், ஹேமசிறி பெர்னாண்டோ, ரவி செனவிரத்ன, ஷானி ஆகியோர் மட்டும் சட்டத்தரணிகளை பிரதிநித்துவப்படுத்தியுள்ளனர். நேற்றைய தினம் மட்டும் 30 ற்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் விசாரணைக்குழு முன் தோன்றியிருந்தனர். அரச புலனாய்வுச் சேவையின் பணிப்பாளராக பணியாற்றிய டீ ஐ ஜி நிலந்த ஜயவர்தன நேற்று சாட்சியமளித்தார்.ஆனால் அந்த சாட்சியத்தை பதிவு செய்ய பாதுகாப்புக் காரணங்களுக்காக நேற்று ஊடகங்களுக்கு இடமளிக்கப்படவில்லை.

## 5 ஆம் திகதி...

கொரோனாவைக் காட்டி இவ்வாறான செயற்பாடுகளில் அரசாங்கம் ஈடுபடுவது, வரும் தேர்தல் காலத்தில் மக்களைப் பயன்படுத்தி வாக்களிப்பிற்கு செல்லாமல் தடுப்பதற்கோ என்ற சந்தேகத்தை உண்டு பண்ணுகின்றது. பின்னர் மக்கள் போகாதது கொரோனாவிற்குப் பயந்தே என்று அவர்கள் கூறலாம். அத்துடன் பாதுகாப்பை ஒட்டி தேர்தல் காலத்தில் இராணுவத்தினரை வெளிக்கொண்டு வருவது ஜனநாயகத்திற்கு எதிரான ஒரு செயல்.

இம்முறை 5 ஆம் திகதி தேர்தல் நடத்தி 6 ஆம் திகதியே வாக்கெண்ணுதல் நடைபெறவிருக்கின்றது. இரு நாட்களுக்கும் இடையில் இரவிலே பெட்டிகளுக்கு என்ன நடக்குமோ என்று ஒரு சந்தேக நிலை எழுந்துள்ளது. இவற்றுக்கு இராணுவத்தினரைப் பாதுகாப்புக்கு அழைத்தால் கட்டாயம் ஜனநாயகத்திற்கு எதிரான நடவடிக்கைகள் நடைபெறும் என்று எண்ண இடமுண்டு.

ஆகவே, ஒரு காரணமும் இல்லாமல் வடக்கு மாகாணத்தில் மட்டும் இராணுவத்தினரை இறக்கியிருப்பது எதற்காக என்று அறிந்து கொள்வது முக்கியம். இராணுவத்தினரை தேர்தலுக்கு ஒரு வாரத்திற்கு முன்னர் வாபஸ் பெற்று அவர்களை இராணுவ முகாம்களில் முடக்கி வைக்குமாறு இராஜதந்திரிகள் அரசாங்கத்தை கோர வேண்டும். இராணுவத்தினரை வட மாகாணத்திற்குள் இதுவரை அழைத்திருப்பது கொரோனா காரணமாக என்று கூறப்பட்டாலும் இராணுவத்தினர் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவில்லை. மக்களைத் துன்புறுத்தும் நடவடிக்கைகளில்தான் ஈடுபட்டு வருகின்றார்கள். இதை நீங்கள் சர்வதேச உயர்ஸ்தானிகர்களுக்கும் மற்றயவர்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும்- என்றும் விக்னேஸ்வரன் கேட்டுக்கொண்டதாக அவரது ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

முன்னாள் முதல்வரின் கரிசனைகளை உரியவர்களுக்குத் தெரியப்படுத்துவதாக உயர்ஸ்தானிகர் இதன்போது தெரிவித்தார் என்றும் ஊடகப்பிரிவு மேலும் குறிப்பிட்டது.

## தனிமைப்படுத்தப்பட்டோர்...

தெரிவித்துள்ளார். தனிமைப்படுத்தலில் உள்ளவர்கள் வாக்களிப்பதற்கான விசேட நாளை அறிவிப்பதா என்பது குறித்து தேர்தல் ஆணைக்குழு குழப்பத்தில் உள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

விசேட வாக்களிப்பு நிலையங்களை அமைப்பது மற்றும் தேர்தலை முன்கூட்டியே நடத்துவது குறித்த பிரச்சினைகளை தேர்தல் ஆணைக்குழு எதிர்கொண்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார். முன்கூட்டியே தேர்தலை நடத்துவதற்கான சட்டம் நாட்டில் இல்லாததும் இந்த நெருக்கடி உருவாகுவதற்கு ஒரு காரணம் என மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

வீடுகளில் சுயதனிமைப்படுத்தல்களில் உள்ளவர்களின் வீடுகளுக்கு சென்று அவர்களின் வாக்குகளை சேகரிக்கும் திட்டத்தையும் தேர்தல் ஆணைக்குழு கைவிடவேண்டியுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

## போரால்...

அன்றைய பயங்கரவாத யுகத்தில் நாட்டில் சுமார் 60 ஆயிரம் படித்த, புத்திசாதுர்யம் மிக்க இளைஞர்களை நாடு இழக்க நேரிட்டதாக குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது,

பாரியளவிலான பட்டதாரிகள் இந்த பயங்கரவாதத்தின் போது கொலை செய்யப்பட்டதுடன், அதில் 4 ஆயிரத்து 210 பேர் குருநாகல் மாவட்டத்தை சேர்ந்தவர்கள்.

அன்று நாட்டில் நிலவிய நிலை தொடர்பில் ஜெனீவா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்வதற்கும், சாட்சி வழங்குவதற்கும் நான் உள்ளிட்ட குழுவினர் முன்வந்தது. எமது அரசாங்கத்தின் கீழ் ஒருபோதும் இவ்வாறானதொரு நிலை ஏற்படாது.

பின்னர் தமிழீழ விடுதலை புலிகள் அமைப்பு வடக்கு கிழக்கை பிரித்துக்கொண்டு தனி அரசாங்கமொன்றை கட்டியெழுப்புவதற்கு முயற்சித்தாலும் அந்த முயற்சியை தோற்கடிக்க எமது அரசாங்கத்திற்கு முடியுமானதாயிற்று.

அன்று யுத்தம் காரணமாக நிறைவேற்றிக் கொள்ள முடியாதவற்றை இன்று ஜனநாயகத்தின் முகத்தை காட்டி பெற்றுக் கொள்வதற்கு தமிழ் தேசிய கூட்டமைப்பு முயற்சித்தாலும் பிரபாகரன் கேட்டதை ஒருபோதும் பெற்றுக் கொடுக்கப் போவதில்லை.

பயங்கரவாதம், யுத்தம் என்பவற்றுக்கு மாறாக இளைஞர் யுவதிகளுக்கு புதிய கல்வி வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கும் தொழில் பயிற்சி மற்றும் தொழில்நுட்ப கல்விக்கான வாய்ப்பை அதிகப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்து அவர்களது எதிர்காலத்தை வெற்றிகரமான நிலைக்கு கொண்டு செல்வதற்கு அரசாங்கம் என்ற ரீதியில் செய்யக்கூடிய அனைத்து விடயங்களையும் நிறைவேற்றுவதாக பிரதமர் மேலும் குறிப்பிட்டார்.

## மூத்த...

பின்னர் இலங்கை தேசிய வானொலியிலும், தினக்குரல், சூரியன் செய்திப் பிரிவுகளிலும் கடமையாற்றியிருந்தார். வீரகேசரியின் யாழ்ப்பாண செய்தியாளராகவும் அவர் பணிபுரிந்துள்ளார்.

பல முக்கியமான வழக்குகளின் செய்திகளை வழங்கிய செய்தியாளர் என அவர் தமிழ் மக்கள் மத்தியில் பிரபல்யமானவர். திடீர் சுகயீனமுற்ற நிலையில் உயிரிழந்த அன்னாரின் பூதவுடல் கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. இறுதிக்கிரியை இன்று பிற்பகல் 2 மணிக்கு கல்கிசையில் நடைபெறும்.

## ஈஸ்ரர் தின....



திணைக்களத்தினர் விசாரணைக்கு அழைப்பதை, தேர்தல் முடியும் வரை இடைநிறுத்துமாறு பொலிஸ்மா அதிபருக்கு தேர்தல் ஆணையாளர் எழுத்துமூலம் அறிவித்திருந்த நிலையிலும், இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, குறித்த விசாரணையை வவுனியாவில் முன்னெடுக்குமாறு ரிசாட் தரப்பு தனது சட்டத்தரணிகளூடாக கோட்டை நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்தனர். அதனை ஆராய்ந்த கோட்டை நீதவான், வவுனியா ஈரற்பெரியகுளம் பொலிஸ் நிலையத்தில் அமைந்துள்ள குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் பிரிவில் நேற்று ஆஜராகி வாக்குமூலம் வழங்குமாறு பணித்திருந்தார்.

அதற்கமைய நேற்றையதினம் காலை10 மணிக்கு ஈரற்பெரியகுளம் பொலிஸ் நிலையத்தில் அமைச்சர் ரிசாட் பதியூதீன் ஆஜராகியிருந்தார். சுமார் ஐந்து மணி நேரம் விசாரணைகள் நடந்தன. இந்த விசாரணைகளின் பின்னர் எமது செய்தியாளரிடம் கருத்து வெளியிட்ட முன்னாள் அமைச்சர் கூறியதாவது,

எனது முந்திய அமைச்சின் கீழ் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் குறித்து விசாரித்தனர். அதில் ஆயிரக்கணக்கானவர்கள் வேலை செய்கின்றனர். 300 நிறுவனங்கள் உள்ளன. அவற்றின் செயற்பாடுகளை கவனிக்க அதிகாரிகள் இருக்கின்றனர். எல்லாவற்றையும் என்னால் கவனிக்க முடியாத நிலை இருப்பதை சுட்டிக்காட்டினேன். ஆனாலும் விசாரணைகளை மேற்கொள்ளுங்கள். தாராளமாக ஆராயுங்கள் என்று நான் கூறினேன். ஏற்கனவே பல இடங்களில் நடத்தப்பட்ட விசாரணைகளில் நான் நிரபராதி என்றே கூறப்பட்டுள்ளது. மாறாக, நான் எந்த தீவிரவாத செயற்பாடுகளுடனும் தொடர்புபடாத காரணத்தினால் விசாரணைகளுக்கு அச்சப்படவுமில்லை. இதனை நான் விசாரணை நடத்தியவர்களிடம் கூறினேன் என்றார் ரிஷாட்.

# கடத்தப்பட்ட எமது பிள்ளைகளுக்கு என்னவாயிற்று...




தாய்மாரும் உறவுகளுமே கூடி தமது ஆதங்கங்களை வெளிப்படுத்திக் கொண்டிருந்தனர். எனினும், போராட்டம் தொடங்கியதும், பொலிஸார் நீதிமன்ற கட்டளையுடன் வந்து போராட்டத்தை தடைசெய்தனர்.

இதனால் அங்கு பரபரப்பான நிலைமை உருவாகியது. பிள்ளைகளை தேடியும் போராட்டம் நடத்த அனுமதியில்லையா, தேர்தல் பிரசாரங்களில் அரசியல்வாதிகள் ஈடுபடுவதை அனுமதிக்கும் அரசு, எமது மனிதாபிமான பிரச்சினையை மூடிமறைக்க முயற்சிக்கிறது என குற்றம்சாட்டிய காணாமற் போனவர்களின் உறவுகள், எமது பிள்ளைகளுக்கு என்னவானது என்பதை தெரிவித்துவிட்டே கருணா, பிள்ளையான் அணிகள் அரசியல் செய்யவேண்டுமென கேட்டுக்கொண்டனர்.

அத்துடன், கருணா மற்றும் பிள்ளையான் அணியினர் தேர்தல் பிரசார மேடைகளில் நையாண்டி செய்து பேசி வருவதாகவும், தமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்பதை தெரிவித்து விட்டு, அரசியல் மேடையில் ஏறுங்கள் என்றும் வலியுறுத்தினர்.

## வெளிநாடுகளிலுள்ளவர்களை...

பற்றாக்குறை ஏற்பட்டமையின் காரணமாகவே வெளிநாடுகளிலுள்ளவர்களை இங்கு அழைக்கும் செயற்பாடுகளை தற்காலிகமாக இடைநிறுத்துமாறு அரசாங்கம் பணிப்புரை விடுத்திருந்தது.

கந்தக்காடு தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்தின் நிலைமைகள் தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதால் வெளிநாடுகளிலுள்ளவர்களை நாட்டுக்கு அழைத்துவரும் நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்கலாம் என்று சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது. அதற்கமைய நாட்டின் கொரோனா நோய்த்தொற்று தொடர்பான தற்போதைய நிலைமைகள் குறித்து கருத்து தெரிவித்த இராணுவத் தளபதி ஏப்ரல் 30ஆம் திகதிக்குப் பின்னர் சமூகத்துக்குள் கொரோனா நோய்த்தொற்றுக்குள்ளானவர்கள் எவரும் இனங்காணப்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

கொரோனா வைரஸ் சமூகத்தில் பரவலடைவதை தடுப்பதற்காக சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள இராணுவத் தளபதி கொரோனா நோய்த்தொற்று பரவலடைவதை தடுப்பதற்கு மக்கள் மேலும் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

# சஞ்சய் தத் விடுதலை: ஆர்.டி.ஐ.யில் கிடைக்காத தகவல்; மும்பை நீதிமன்றத்தை நாடிய பேரறிவாளன்



தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ், தான் கேட்ட தகவல்கள் கிடைக்கவில்லை என்பதால் மும்பை உயர் நீதிமன்றத்தில் பேரறிவாளன் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

மும்பையில் நடந்த வெடிகுண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக பொலிவுட் நடிகர் சஞ்சய் தத்துக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு அவர் மும்பை எரவாடா சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். 2013ஆம் ஆண்டு, தண்டனை முடிவதற்கு 8 மாதங்கள் முன்னதாகவே சஞ்சய் தத் சிறையிலிருந்து விடுதலைசெய்யப்பட்டதாகக் கூறப்பட்டது.

இதற்கிடையில் ராஜீவ் காந்தி வழக்கு தொடர்பாக பேரறிவாளன் உள்ளிட்ட 7 பேர் சுமார் 28 வருடங்களாக சிறையிலிருந்து வருகின்றனர். மனிதாபிமான அடிப்படையில் அவர்களை விடுதலைசெய்ய வேண்டும் என்ற கோரிக்கையை பலர் முன்வைத்து வருகின்றனர். இந்த விவகாரம் தொடர்பாக தமிழக ஆளுநரே முடிவெடுக்கலாம் என உச்ச நீதிமன்றம் தெரிவித்துவிட்டது.

இந்நிலையில், எந்த விதிமுறையைப் பயன்படுத்தி சஞ்சய் தத், சிறைக்காலம் முடியும் முன்னரே விடுதலை செய்யப்பட்டார் என்பதை அறிய தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மூலம் கோரியிருந்தார் பேரறிவாளன். ஆனால், சஞ்சய் தத் விவகாரத்தில் எந்த விடயத்தையும் தெரிவிக்க முடியாது என மகாராஷ்டிரா சிறைத்துறை, மாநில தகவல் ஆணையத்திடம் கூறிவிட்டது. மேலும், தகவல் அறியும் உரிமைச் சட்டம், தனிநபர் சார்ந்த விடயங்களை மற்றவர்களுக்கு தெரியப்படுத்துவதிலிருந்து விலக்களிக்கும் வகையில் உள்ளதாகவும் இதற்கு விளக்கம் அளிக்கப்பட்டது.

முன்னதாக எரவாடா சிறையில் தகவல் அதிகாரி, உரிய காலத்தில் தகவல் வழங்காததை எதிர்த்து புனே மாநில தகவல் ஆணையத்தில் மேன்முறையீடு செய்திருந்தார் பேரறிவாளன். அங்கும் உரிய தீர்வு கிடைக்காததால், எரவாடா சிறை தகவல் அதிகாரி மற்றும் அம்மாநில தகவல் ஆணையத்தின் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கக் கோரியும், தான் கேட்ட தகவல்களைப் பெற்றுத்தரக் கோரியும் மும்பை உயர் நீதிமன்றத்தில் பேரறிவாளன் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

## உலகச் செய்திகள்

# அன்பு ரஹ்மான் அஞ்ச வேண்டாம்



பொலிவுட்டில் தனக்கு வரும் பட வாய்ப்புகளை தடுக்க சதி நடப்பதாக ஏ.ஆர்.ரஹ்மான் கூறிய நிலையில், அவருக்கு ஆதரவாக வைரமுத்து டுவிட் செய்துள்ளார்.

இசைபுயல் ஏ.ஆர்.ரஹ்மான், "பொலிவுட்டில் தன்னை பணியாற்ற விடாமல் தடுக்க ஒரு கும்பல் வேலை செய்கிறது" எனத் தெரிவித்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஒஸ்கார் விருது பெறுவதற்கு முன்புவரை 11 வருடங்களில் 33 ஹிந்தி படங்களுக்கு இசையமைத்து வட இந்தியாவில் ஏ.ஆர்.ரஹ்மான் கொடி கட்டி பறந்தார்.

ஆனால், ஒஸ்கார் விருது பெற்ற பிறகு அவருக்கு பொலிவுட்டில் பட வாய்ப்புகள் குறைந்தன. பொலிவுட்டில் அவரது பட வாய்ப்புகளை தடுக்க சதி நடந்திருப்பது இப்போது அம்பலமாகியுள்ளது. சமூக வலைத்தளங்களில் ஏ.ஆர்.ரஹ்மானுக்கு ஆதரவாக ரசிகர்கள் ஹேஷ்டேக் உருவாக்கி டிரெண்ட் செய்து வருகிறார்கள்.

இந்நிலையில், கவிஞர் வைரமுத்து இதுகுறித்து டுவிட்டரில் பதிவிட்டுள்ளதாவது:

"அன்பு ரஹ்மான் அஞ்சற்க.


வட இந்திய கலையுலகம் தமிழ்நாட்டு பெண்மான்களை பேணுமளவுக்கு ஆண்மான்களை ஆதரிப்பதில்லை. இரண்டுக்கும் உயிர்வாழும் எடுத்துக்காட்டுகள் உண்டு.

ரஹ்மான் நீங்கள் ஆண்மான். அரியவகை மான். உங்கள் எல்லை வடக்கில் மட்டும் இல்லை" என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், சிறந்த ஒலிக் கலவைக்காக ஒஸ்கர் விருது வென்ற பின்னர் பொலிவுட்டில் தன்னை ஒதுக்கியதாக ரசூல் பூக்குட்டி பரபரப்பு புகார் தெரிவித்துள்ளார்.

"ஒஸ்கார் வென்ற பிறகு இந்தி சினிமா என்னையும் விலக்கிவைத்தது. யாரும் வாய்ப்புத் தரவில்லை. இதனால் நிலைகுலைந்துவிட்டேன். ஆனால், பிராந்திய மொழி படங்கள் என்னை கைவிட்டு விடவில்லை. சில பொலிவுட் தயாரிப்பு நிறுவனங்கள் , 'நீங்கள் தேவை இல்லை' என்று என் முகத்தில் அடித்தார்போல கூறின. ஆனாலும், நான் இந்தத் தொழிலை நேசிக்கிறேன். இந்தத் தொழில்தான் எனக்கு கனவு காண கற்றுக்கொடுத்தது. என்னை நம்பும் சிலர் எனக்கு வாய்ப்பு தருகிறார்கள்" என்று தெரிவித்துள்ளார்.

# ஜ•லை 29இல் ஹஜ் யாத்திரை ஆரம்பம்



சவூதியில் தற்போது கொரோனா பரவல் கட்டுப்படுத்தப்பட்ட நிலையில், ஹஜ் புனித யாத்திரை ஜ•லை 29ஆம் திகதி தொடங்கும் என்று சவூதி அறிவித்திருந்தது.

கடந்த ஐந்து மாதங்களாக மக்காவில் ஹஜ் பயணிகள் எவரும் அனுமதிக்கப்படவில்லை. ஐந்து மாதங்களுக்குப் பின்னர் தொடங்கும் மீண்டும் ஹஜ் பயணத்துக்குச் சவூதி அனுமதியளித்துள்ளது.

நாளொன்றுக்கு ஆயிரம் பேர் மட்டுமே மக்காவுக்குள் அனுமதிக்கப்படுவர் என்றும் இந்தப் புனிதப் பயணத்தில் சவூதி மக்களும், அங்குள்ள வெளிநாட்டவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படவுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளிருந்து ஹஜ் பயணம் மேற்கொள்ள தொடர்ந்து தடையுள்ளது.

# சீனாவின் மிதக்கும் விமானம்



சீனாவின் ஷான்டொங் மாகாண கடற் பகுதியில், நீரில் மிதந்து செல்லக்கூடிய விமானம் வெற்றிகரமாக சோதிக்கப்பட்டது.

முழுக்க முழுக்க சீன அரசின் விமானத் தொழில் கழகத்தால் இந்த விமானம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**Kunlong** என பெயரிடப்பட்டுள்ள இந்த **AG600** ரக விமானத்தை அதிக எண்ணிக்கையில் தயாரித்து, வருங்காலத்தில் தீயைக் கட்டுப்படுத்தவும், கடலில் சிக்கிக் கொண்டவர்களை மீட்கவும் பயன்படுத்த சீனா திட்டமிட்டுள்ளது.

## துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் பலி:

# அமெரிக்காவில் மீண்டும் வெடித்த கறுப்பின ஆதரவு போராட்டம்




அமெரிக்காவில் கறுப்பின மக்களுக்கு ஆதரவான போராட்டத்தில் மேலும் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதால் போராட்டம் மீண்டும் நாட்டின் பல பகுதிகளில் வேகமாகப் பரவி வருகிறது.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஜோர்ஜ் ப்ளாயிட் என்ற கறுப்பின இளைஞரை பொலிஸார் தாக்கியதில் அவர் உயிரிழந்தார். இதையடுத்து 'ப்ளொக் லைவ் மேட்டர்' என்ற பெயரில் கறுப்பின மக்களுக்கு நீதி கேட்கும் போராட்டம் நாடு முழுவதும் நடந்துவருகிறது.

கடந்த சில நாட்களாக குறைந்திருந்த இந்தப் போராட்டம் டெக்சாஸ் மாகாணத்தில் ஆஸ்டின் நகரில் மீண்டும் தொடங்கியது. அப்போது பொலிஸாருக்கும் பொது மக்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது. கல்வீச்சு தீ வைப்பு உள்ளிட்ட வன்முறைச் சம்பவங்கள் நடந்தன.





அப்போது கூட்டத்தை கட்டுப்படுத்த துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது. இந்த மோதலில் ஒருவர் சம்பவ இடத்திலேயே கொல்லப்பட்டார்.

இதனையடுத்து போர்ட்லேண்ட், சிக்காகோ, நியூயோர்க், சியாட்டில் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பொதுமக்கள் போராட்டத்தில் இறங்கியுள்ளனர்.

# "உங்கள் கனவில் நாங்கள்.. எங்கள் நினைவில் நீங்கள்.."

## கலாம் குறித்து விவேக் உருக்கம்

மறைந்த முன்னாள் இந்திய குடியரசுத் தலைவர் அப்துல் கலாமின் 5ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு நடிகர் விவேக் டுவிட்டரில் உருக்கமாக பதிவிட்டுள்ளார்.

விண்வெளி, அறிவியல், நிர்வாகம் மற்றும் கல்வி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இமாலய சாதனைகளை படைத்தவர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம். இவர் கடந்த 2015ஆம் ஆண்டு ஜ•லை 27ஆம் திகதி மேகாலயா மாநிலத் தலைநகரான ஷில்லாங்கில் இந்திய மேலாண்மை கல்வி நிறுவனத்தில் மாணவர்களிடையே உரையாற்றுகையில் திடீரென்று மயங்கி விழுந்து இறந்தார். நேற்று அவரது 5ஆம் ஆண்டு நினைவுத்தினம் கடைப்பிடிக்கப்பட்டது. இந்நிலையில்,



**இராமேசுவரம் அடுத்துள்ள பேய்கரும்பு கிராமத்தில் குடியரசு முன்னாள் தலைவர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் தேசிய நினைவிடத்தில் அவரது குடும்பத்தினர் மலர் தூவி அஞ்சலி செலுத்தியபோது....**

பலரும் அப்துல் கலாம் குறித்த தங்களின் நினைவுகளை பகிர்ந்து வருகின்றனர். அந்தவகையில் அப்துல் கலாம் மீது மிகுந்த மரியாதை கொண்டுள்ள நடிகர் விவேக், அவரது நினைவு நாளை முன்னிட்டு டுவிட்டரில் உருக்கமாக பதிவிட்டுள்ளார்.

"நீ கவிதைகள் எழுதி வைத்தது தாளில். ஆனால், கனவுகள் இறக்கி வைத்தது எங்கள் தோளில். அவ்வப்போது இடறுகின்றது ஆயினும் பயணம் தொடர்கின்றது. உங்கள் கனவில் நாங்கள்... எங்கள் நினைவில் நீங்கள்" என விவேக் குறிப்பிட்டுள்ளார்.

## எதிர்கால சந்ததிக்காக...

# அயோத்தி இராமர் கோயிலில் 2,000 அடி ஆழப் புதைக்கப்படும் 'டைம் கெப்சூல்'



அயோத்தி, இராமர் கோயில் மற்றும் இராம ஜென்ம பூமியின் வரலாற்றை எதிர்கால சந்ததி அறிந்துகொள்ளும் வகையில், அயோத்தியில் கட்டப்பட்டுவரும் இராமர் கோயிலுக்கு அடியில், 2000 அடி ஆழத்தில் 'டைம் கெப்சூல்' புதைக்கப்படும் என்று ஸ்ரீ இராமஜென்மபூமி தீர்த்த ஷேத்ரா அறக்கட்டளை நிர்வாகம் அறிவித்துள்ளது. டைம் கெப்சூல் புதைக்கப்படுவதால் எதிர்காலத்தில் இராமர் ஜென்ம பூமி குறித்து எந்தவித சர்ச்சையும் ஏற்படாமல் தடுக்க முடியும் என்று கருதப்படுகிறது.

முக்கியமான தகவல்களை எதிர்காலத் தேவைக்காகப் பாதுகாப்பதே டைம் கெப்சூலின் நோக்கமாகும். தற்கால நிகழ்வுகள், தகவல்கள், வரலாற்றுக் குறிப்புகள், ஆவணங்கள் மற்றும் புகைப்படங்கள் ஆகியவற்றை எதிர்கால சந்ததியினரும் தெரிந்துகொள்ள வேண்டும் எனும் நோக்கில், எளிதில் உடையாத வலிமையான குடுவைக்குள் வைத்து புதைத்து வைத்துவிடுவார்கள். இதன்மூலம் நிகழ்கால தகவல்களை எதிர்கால சந்ததியினர் அறிந்துகொள்ள முடியும்.

## செய்தித் துளிகள்

* சிங்கப்பூரில் பிரதமர் லீ சியென் லூங் தலைமையிலான அமைச்சரவை நேற்று பதவியேறற நிலையில், புதிய ஆட்சியில் 15 அமைச்சர்களில் ஆறு அமைச்சர்கள் புதியவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். இதில் ஐந்து பேர் தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

* பிலிப்பைன்ஸின் தென் பகுதியான டாவோ ஓரியண்டல் மாகாணத்தில் நேற்று 5.5 ரிச்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

* பாகிஸ்தானில் அல்–கய்தா, தெஹ்ரிக் இ தலிபான் பாகிஸ்தான், ஐ.எஸ்.ஐ.எஸ். ஆகிய பயங்கரவாத அமைப்புகளின் தலைவர்களின் பெயர்கள் இன்னும் தடைப் பட்டியலில் சேர்க்கப்படவில்லை என ஐ.நா. அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42, தொலைபேசி : 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilannews@yahoo.com
2020 ஜூலை 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை

# வரவேற்கப்படவேண்டிய த.ம.தே. கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனம்!

தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சினைக்கு இணைந்த வடக்கு - கிழக்கில் சமஷ்டி முறைமையிலான ஆட்சி முறையே நிரந்தரத் தீர்வாக அமையுமென முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி நேற்றுமுன்தினம் வவுனியாவில் வெளியிட்ட தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவித்துள்ளது.

**இனப்பிரச்சினைக்கான தீர்வு**

தமிழ் மக்கள் ஒரு தேசிய இனம். இலங்கையின் வடக்கு, கிழக்கு அவர்களின் மரபுவழித் தாயகம், சுயநிர்ணய உரிமைக்கு அவர்கள் உரித்துடையவர்கள் என்பவற்றின் அடிப்படையில் இணைந்த வடக்கு - கிழக்கில் இறைமையுடனான உயர்ந்தமட்ட சுயாட்சியை சமஷ்டி அடிப்படையில் வென்றெடுப்பது.

**நிரந்தரத் தீர்வுக்கான வழிமுறை**

தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சினைக்கு இணைந்த வடக்கு- கிழக்கில் சமஷ்டி முறைமையிலான ஆட்சி முறையே நிரந்தரத் தீர்வாக அமையும் என்பதைத் தெரிவிக்கும் வகையில், வடக்கு, கிழக்கு வாழ் தமிழ் மக்களிடம் சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடன் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படவேண்டும்.

ஐ.நா. சபையின் பாதுகாத்தலுக்கான பொறுப்பு மற்றும் முரண்பாடுகளுக்கான தீர்வு கோட்பாடுகளுக்கமைவாக சர்வதேச சமூகம் இலங்கையின் நீண்டகால இன முரண்பாட்டுக்கு நிரந்தரமான தீர்வொன்றை கொண்டுவருவதற்கு ஐ.நா., இந்தியா, பிரித்தானியா, அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகள் தமக்கிருக்கும் தார்மீகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு தாமதமின்றி தலையீடு செய்யவேண்டும்.

**இனப்படுகொலைக்கான பொறுப்புக்கூறல் மற்றும் பரிகார நீதி**

இலங்கையில் தமிழ் மக்களின் இருப்பை உறுதிசெய்யவும் இனப்படுகொலையிலிருந்து பாதுகாப்பதற்கும் அடுத்தகட்டமாக இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு கொண்டுசென்று நடவடிக்கை எடுப்பதற்கு சட்டரீதியானதும் அரசியல் ரீதியானதுமான எல்லாவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.

**வடக்கு, கிழக்கில் சிங்களக் குடியேற்றங்கள் மற்றும் பௌத்தமயமாக்கலை நிறுத்துதல்**

1. ஐ.நா. மனித உரிமைகள் சபையில் தமிழர் பகுதிகளில் நில ஆக்கிரமிப்பை நிறுத்தும் தீர்மானமொன்றை கொண்டுவருதல்,
2. தொடர்ச்சியாக எமது நிலங்கள் ஆக்கிரமிக்கப்படுவது தொடர்பிலும் இராணுவமயமாக்கல் நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆராய்ந்து நடவடிக்கைகள் எடுப்பதற்கு ஐ.நா.வின் விசேட பிரதிநிதியொருவர் நியமிக்க வலியுறுத்தல்,
3. நில ஆக்கிரமிப்புக்கு எதிராகச் செயற்படும் சர்வதேச அமைப்புகள், ஆய்வாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்களுடன் இணைந்து உலகளாவிய ரீதியில் கவனத்தை ஈர்ப்போம். தகவல் சேகரிப்பு மற்றும் ஆவண உருவாக்கம்,
4. தற்காலிக ஏற்பாடாக மாகாண சபையின் காணி பயன்பாட்டுக்காக ஏற்கனவே இருக்கும் அதிகாரத்தை முழுமையாகப் பெறுவதற்கு முயற்சிப்போம். அத்துடன், உள்ளகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு கிடைக்கவேண்டிய காவல்துறை அதிகாரங்களைப் பெற்றுக்கொள்ள முயற்சி

**வடக்கு, கிழக்கில் இராணுவமயமாக்கலை இல்லாமல்செய்தல்**

தனியார் காணிகளிலிருந்து மட்டுமன்றி, வடக்கு, கிழக்கிலிருந்து இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும்.

**தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை**

பல வருடங்களாக சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலைசெய்யும் பொருட்டு சட்ட வல்லுநர்கள் குழுவொன்றை அமைத்து அரசியல் கைதிகளின் விடுதலைக்கான எல்லா வழிமுறைகளையும் மேற்கொள்ளுதல்,

**வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் பிரச்சினைகள் தொடர்பாக**

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் பிரச்சினைகளைக் கையாளும் வகையிலும் சட்டவல்லுனர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மற்றும் காணாமலாக்கப்பட்டோரின் அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியோரை உள்ளடக்கிய குழுவொன்றை நாம் அமைக்க நடவடிக்கை.

தமிழ்த் தேசிய மக்கள் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்தின் மேற்சொன்ன விடயங்கள் தமிழர்கள் தற்போது எதிர்கொள்ளும் முக்கியமான பிரச்சினைகளை அடிப்படையாகக்கொண்டுள்ளன. கூட்டணியின் அரசியல் நிலைப்பாடுகள் விமர்சனங்களுக்குட்பட்டவை என்றாலும் மக்கள் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து, தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அவர்கள் குறிப்பிட்டிருப்பது வரவேற்கக்கூடிய ஒன்றாகும்.

முன்னாள் வடக்கு மாகாண முதலமைச்சர் மற்றும் அவருடன் இக்கட்சியில் இருப்போர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் கடந்த காலங்களில் முன்னணியில் நின்று செயற்பட்டவர்கள். தமிழ்க் கூட்டமைப்பினால் செய்யமுடியாமல்போன விடயங்கள் என்று இவர்கள் தேர்தல் மேடைகளில் பட்டியலிடும் பல விடயங்கள் இந்த விஞ்ஞாபனத்தில் இருப்பதால் மக்கள் மத்தியில் இவை பேசப்படும் விடயங்களாக இருக்கின்றன. மறுபக்கம் வெளிநாடுகள், இராஜதந்திரிகள் கவனத்திற்கொள்ளவேண்டிய பல விடயங்களும் இதில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன.

வடக்கு கிழக்கின் தேர்தல் நிலைமையை உற்றுநோக்குகையில், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு சவாலாக நிற்கும் ஓர் அரசியல் அணியாக எழும்பிநிற்கின்றது. எனவே, அது கூறியுள்ள விடயங்களை, தமிழருக்கு அரசியல் தீர்வு கிடைக்க வேண்டுமென விரும்பும் உலக நாடுகளும் குறிப்பாக, இலங்கையின் தமிழர் பிரச்சினைத் தீர்வில் நீண்ட அக்கறை கொண்டுள்ள சர்வதேச அமைப்புகளும் ஆழ்ந்த அக்கறை செலுத்தவேண்டுமென வலியுறுத்த விரும்புகிறோம்.

அதேபோல் முதற்றடவையாக நாடாளுமன்ற தேர்தலை எதிர்கொள்ளும் இந்த அரசியல் கூட்டணி எதிர்வரும் தேர்தலில் எந்த முடிவுகளை சந்தித்தாலும் இந்தத் தீர்மானங்களிலிருந்து மாறாமல், எவருடனும் சமரசம் செய்துகொள்ளாமல் உறுதியான நிலைப்பாட்டுடன் இருத்தலும் முக்கியம். தமிழர் பிரச்சினைத் தீர்வில் அது அழுத்தத்தைத் தரும். அப்போது விடியல் தொடர்பில் தமிழருக்கு ஓரளவாவது நம்பிக்கை பிறக்கும்.

தமிழ்த் தேசிய மக்கள் கூட்டணியின் பயணத்தை மக்கள் அவதானித்துக்கொண்டிருக்கின்றனர். அதற்கேற்ப அவர்களின் செயற்பாடுகளும் அமைய வேண்டும்!

# புலஸ்தினி தொடர்பான தகவல் உறுதிப்படுத்தும் வரையில் சஹ்ரானுடைய மனைவியை விடுதலைசெய்ய வேண்டாம்!

"புலஸ்தினி கடந்த 2019 பெப்ரவரி மாதம் முதல் ஏப்ரல் 26ஆம் திகதி வரை சஹ்ரானுடைய மனைவியுடனேயே இருந்தார். புலஸ்தினிக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் அவர் நன்கு அறிவார். ஆகையால், அது தொடர்பில் தகவல் கிடைக்கும் வரை சஹ்ரானுடைய மனைவியை விடுதலைசெய்ய வேண்டாமென்று பாதுகாப்புப் பிரிவினரிடம் கேட்கிறேன்" – என்று கட்டுவாப்பிட்டி தேவாலயத்தில் தற்கொலை குண்டுத்தாக்குதலை மேற்கொண்ட மொஹமது ஹஸ்துனின் மனைவியாகிய புலஸ்தினி மகேந்திரன் அல்லது சாரா ஜெஸ்மினின் தாயார் கவிதா ராஜரத்தினம் கடந்த சனிக்கிழமை தெரிவித்தார்.

2019 ஏப்ரல் 21ஆம் திகதி இடம்பெற்ற குண்டுத்தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைசெய்யும் ஆணைக்குழுவிடம் சாட்சி வழங்கியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார். கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டப வளாகத்தில் அமைந்துள்ள ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அலுவலகத்தில் ஆணைக்குழு கடந்த 25ஆம் திகதி ஒன்றுகூடியிருந்தது.

அதன்போது நீதிபதி திணைக்களத்தின் மேலதிக சொலிசிட்டர் ஜெனரலின் கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே புலஸ்தினியின் தாயார் இவ்வாறு சாட்சி வழங்கினார்.

**கேள்வி : புலஸ்தினி மகேந்திரன் என்பவர் உங்களின் மகளா?**

பதில் : ஆம்.

எனது மகளின் பெயரான புலஸ்தினி மகேந்திரன் என்பதை சாரா ஜெஸ்மின் என்று பெயர்மாற்றம் செய்திருந்தார்கள். இது தொடர்பாக நான் மாளிகாவத்தை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தபோது அது சட்டப்பூர்வமான திருமணம் என்பதால் எதுவும் செய்ய முடியாது என்றார்கள். தாங்கள் இவர்கள் இருவருக்கும் வீடொன்றையும் செலவுக்கான பணத்தையும் வழங்குவதாக கூறி அங்கிருந்து செல்லுமாறு ராசிக் என்னிடம் கூறினார்.

**கேள்வி : அவர்கள் திருமணம் செய்ததற்கான சாட்சிகள் ஏதாவது உங்களுக்கு வழங்கினார்களா?**

பதில் : இல்லை. அப்துல் ராசிக்கே எனது மகளை ஹஸ்தூனுக்கு பலவந்தமாக திருமணம் செய்துவைத்தார்.

**கேள்வி : அவர்கள் கூறியதுபோன்று இருவருக்கும் வீடொன்று வழங்கப்பட்டதா?**

பதில்: எனது மகள் ஹஸ்தூனுடன் நாரம்மலை பிரதேசத்தில் வீடொன்றில் வசித்து வருவதாக பின்னர் அறிவித்திருந்தார்கள். தொலைக்காட்சி பார்த்தல், ஆண்களுடன் பேசுவது, புகைப்படம் எடுத்தல் போன்ற விடயங்களில் ஹஸ்தூன் அவருக்கு தடைவிதித்திருந்ததாக பின்னர் எனக்குத் தகவல் கிடைத்தது.

**கேள்வி : மகளுக்கும் உங்களுக்கும் இடையில் தொடர்ச்சியாக தொடர்புகள் பேணப்பட்டதா? இல்லாவிட்டால் தொடர்பு இருக்கவில்லையா?**

பதில் : மகள் திருமணம் செய்ததன் பின்னர் 2016 ஜனவரி மாதம் 26ஆம் திகதி மீண்டும் வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டேன். இருந்தாலும் மகள் இடைக்கிடையே என்னுடன் பேசினார். ஹஸ்தூனுடன் இருக்கமுடியாதென்று மகள் என்னிடம் கூறினார்.

இந்த விசாரணைகளைத் தொடர்ந்து, மகள் அப்போது தொழிலுக்குச் சென்றாரா என்று ஆணைக்குழுவின் தலைவர் வினவினார். அதற்குப் பதிலளித்த கவிதா, புலஸ்தினி கணக்காளராக தொழில் புரிந்ததாக கூறினார்.

அதன் பின்னர் மேலதிக சொலிசிட்டர் ஜெனரலின் கேள்விகளுக்கு கவிதா இவ்வாறு பதிலளித்தார்.

**கேள்வி : இறுதியாக மகள் உங்களுடன் எப்போது பேசினார்?**

பதில் : 2019 பெப்ரவரி 19ஆம் திகதி எனக்கு அழைப்பு விடுத்து தொலைபேசியை திருத்தப்போவதாகவும் அதனால் குறுகிய நாட்களுக்கு தொலைபேசி அழைப்பு விடுக்க வேண்டாம் என்றும் கூறினார். அன்றைய தினத்துக்குப் பின்னர் இன்றுவரை மகளின் குரலை நான் கேட்கவில்லை.

**கேள்வி : நீங்கள் அதன் பின்னர் மகளை பற்றி தேடிப் பார்க்கவில்லையா?**

பதில்: மகள் தொடர்பாக எந்தத் தகவலும் கிடைக்காததால் நான் மீண்டும் இலங்கைக்குத் திரும்பினேன். நாட்டுக்கு வந்ததும் இரண்டு மாதமாக எனது மகள் தொடர்பாக எந்தத் தகவலும் இல்லை என்று ஏப்ரல் 6ஆம் திகதி நாரம்மலை பொலிஸாரிடம் முறைப்பாடு செய்தேன். அதன்பின்னர் ஏப்ரல் 7ஆம் திகதி குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திலுள்ளவர் என்று கூறிக்கொண்டு ரொஷான் என்பவர் என்னை சந்திக்க வந்திருந்தார். அப்துல் ராசிக்கே அவரை அனுப்பிவைத்துள்ளார் என்பதை நான் புரிந்துகொண்டேன்.

**கேள்வி : எங்கே உங்கள் மகளுடன் வசித்தீர்கள் ?**

பதில் : மட்டக்களப்பிலுள்ள தேத்தாதீவு கிராமத்தில்.

**கேள்வி : உங்களின் மகள் எந்த பாடசாலையில் கல்விக் கற்றார்? அவர் எந்தளவு கல்வியை பெற்றுள்ளார்?**

பதில் : அவர் தேத்தாதீவு மகாவித்தியாலயத்தில் கல்விக் கற்றார். அவர் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் எட்டு 'ஏ", ஒரு 'பீ" சித்தியை பெற்றுக்கொண்டார். உயர்தரத்தில் உயிரியல் விஞ்ஞானப் பிரிவில் கல்விக் கற்றார். உயர்தரக் கல்வி நடவடிக்கைகளுக்காக மேலதிக வகுப்புகளில் பங்குகொள்ள கல்முனைக்குச் சென்றார்.

**கேள்வி : எப்போது அவர் இஸ்லாம் சமயத்தைப் பின்பற்ற ஆரம்பித்தார்? எவ்வாறு? யாராவது அவருக்கு அச்சுறுத்தல் விடுத்தனரா?**

பதில்: புலஸ்தினி 2015ஆம் ஆண்டில் கல்முனையிலுள்ள தனியார் வகுப்புகளில் பங்குகொள்ள சென்றிருந்தார். அந்தக் காலப்பகுதியில் தொழிலுக்காக நான் அபுதாபிக்குச் சென்றிருந்தேன். புலஸ்தினியை காணவில்லை என்று எனது தாயார் 2015 ஜூலை 29ஆம் திகதி எனக்கு அறிவித்திருந்தார். விரைவாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யுமாறு எனது அம்மாவிடன் கூறினேன்.

**கேள்வி : அம்மா முறைப்பாடு செய்திருந்தாரா?**

பதில் : ஆம். களுவாஞ்சிக்குடி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்திருந்தார். ஆனால், புலஸ்தினியை தாங்கள் தடுத்துவைத்திருப்பதாகவும் ஒரு வாரத்தின் பிறகு அவரை அனுப்பிவைப்பதாகவும் எனது மகன் அதாவது புலஸ்தினியின் சகோதரருக்கு ஸ்ரீலங்கா தௌஹீத் ஜமாத் அமைப்பின் செய்லாளர் அப்துல் ராசிக் அறிவித்திருந்தார்.

**கேள்வி: அதன் பின்னர் என்ன நடந்தது ?**

பதில் : நான் உடனடியாக மீண்டும் இலங்கைக்கு திரும்பிவிட்டேன். வந்தவுடன் மாளிகாவத்தையில் அமைந்துள்ள ராஷிக்குடைய அலுவலகத்துக்குச் சென்றேன். அந்தச் சந்தர்ப்பத்தில் புலஸ்தினி அங்கு இருந்தார். முஸ்லிம் பெண்கள் அணியும் உடையை அணிந்துகொண்டே அவர் இருந்தார். அவ்விடத்தில் ராசிக்குடன் ஆண்கள் இருவரும் இன்னுமொரு பெண்ணும் இருந்தனர்.

**கேள்வி : உங்களின் மகளுடன் உங்களுக்கு உரையாட கிடைத்ததா? புலஸ்தினியுடன் கதைத்தன் பின்னர் நீங்கள் என்ன செய்தீர்கள் ?**

பதில்: நான் மகளுடன் பேசினேன். எனது சகல கேள்விகளுக்கும் ராசிக்கும் அவருடன் இருந்தவர்களுமே பதிலளித்தார்கள். அதன் பின்னர் மாளிகாவத்தை பொலிஸ் நிலையத்துக்குச் சென்று இந்த விடயம் தொடர்பில் முறைப்பாடு செய்தேன். அப்துல் ராசிக் புலஸ்தினியுடன் பொலிஸ் நிலையத்துக்கு வருகைதந்தார். 15 நாட்களுக்கு புலஸ்தினியை வீட்டுக்கு அழைத்துச் செல்லுமாறு பொலிஸார் என்னிடம் கூறினார்கள். இந்த குறித்த காலப்பகுதியில் இந்துசமயத்துக்கு அமைய புலஸ்தினி இருந்தால் அவரை தொடர்ந்து வைத்துக்கொள்ளலாம், அவ்வாறில்லாவிட்டால் 15 நாட்கள் முடிவடைந்ததும் மீண்டும் ராஷிக்கிடம் ஒப்படைக்குமாறு பொலிஸார் எனக்கு அறிவித்தார்கள். இதனடிப்படையில் செயற்படாவிட்டால் என்னை கைதுசெய்யவேண்டி ஏற்படும் என்றும் பொலிஸார் எச்சரித்தனர்.

**கேள்வி: அதன்பின்னர் உங்களுடன், உங்கள் மகள் வீட்டுக்கு வந்தாரா?**

பதில்: ஆம். தான் அணிந்திருந்த அபாயா உடையை நீக்கிவிட்டு என்னுடன் வந்தார். அவர் இந்து முறைப்படியே என்னுடன் இருந்தார்.

**கேள்வி : அதன் பின்னர் தொடர்ந்து உங்களின் மகள் உங்களுடன் இருந்தாரா? என்ன நடந்தது?**

பதில்: 15 நாட்கள் நிறைவடைந்ததும் அப்துல் ராஷிக் தொலைபேசி அழைப்பினூடாக எனக்கு அச்சுறுத்தல் விடுத்தார். 15 நாட்களுக்கு மாத்திரமே எனது மகளை என்னுடன் அனுப்பி வைத்துள்ளதாகவும் மீண்டும் அவரை அனுப்பாவிட்டால் எனக்கு எதிராக சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் அவர் என்னிடம் கூறினார்.

மகள் இந்து முறைப்படியே என்னுடன் இருப்பதாக நான் கூறினேன். அதற்கு அவர், புலஸ்தினியை தங்களின் தரப்புக்கு எடுப்பது எவ்வாறு என்பது தனக்கு தெரியமென்றும் ஆகையால் உடனடியாக மகளை ஒப்படைக்குமாறும் என்னை எச்சரித்தார்.

**கேள்வி: பின்னர் மகளை அவர்களிடம் ஒப்படைத்தீர்களா?**

பதில் : இல்லை. அதன் பின்னர் சில நாட்கள் கழித்து – அதாவது 2015 செப்டம்பர் 24ஆம் திகதி புலஸ்தினி சுகயீனமுற்றதால் மருந்து எடுப்பதற்காக வைத்தியசாலைக்குச் சென்றோம். அங்கு சென்றநேரத்தில் திடீரென்று புலஸ்தினியை காணவில்லை. அது தொடர்பாக அப்போதே மட்டக்களப்பு பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தேன்.

**கேள்வி : அதன் பின்னர் மகள் தொடர்பான தகவல்கள் கிடைத்ததா?**

பதில் : மறுநாள் ராசிக் தொலைபேசியினூடாக என்னை அழைத்து புலஸ்தினி அவர்களிடம் இருப்பதாகவும் அவரை ஹஸ்தூன் என்பவருக்கு திருமணம் செய்துவிட்டதாகவும் கூறினார். அதன் பின்னர் நான் மீண்டும் ராசிக்குடைய அலுவலகத்துக்குச் சென்றேன். அங்குச் சென்றபோது புலஸ்தினியுடன் ஹஸ்தூன் என்பவர் இருந்தார். அதேபோன்று ராசிக்கும் இன்னும் இரு ஆண்களும் இருந்தனர்.

**கேள்வி : அவர் என்ன கூறினார்?**

பதில்: நான் மகளை தேடி ஒவ்வொரு இடத்துக்கும் செல்வதால்தான் அவர் என்னை சந்திக்க வந்துள்ளார் என்பதை அவருடன் பேசியபோது புரிந்துகொண்டேன். அப்துல் ராசிக்கிடமிருந்து கிடைத்த தகவலுக்கமைய சஹ்ரானுடைய மனைவியுடன் சாரா இருப்பதாக அவர் கூறினார். அதனை உறுதிப்படுத்துவதற்கு அவர் புகைப்படமொன்றையும் எனக்குக் காட்டினார். ஆனால், சஹ்ரான் என்பவர் யார் என்பதை நான் அதுவரையில் அறிந்திருக்கவில்லை. அவர் தொலைபேசி இலக்கமொன்றை கொடுத்துவிட்டு மகள் பேசினால் தனக்கு அறிவிக்குமாறும் என்னிடம் கூறினார்.

**கேள்வி : நீங்கள் அதன்பின்னர் என்ன செய்தீர்கள்?**

பதில் : இரண்டு நாட்களுக்குப் பின்னர் களுவாஞ்சிக்குடி பொலிஸாரிடம் புலஸ்தினி காணாமல்போனது தொடர்பாக முறைப்பாடு செய்தேன். ஆனால், அவர்கள் அந்த முறைப்பாட்டை ஏற்றுக்கொள்ளவில்லை. காத்தான்குடியில் வைத்து புலஸ்தினியை ஹஸ்தூனிடம் பொறுப்பளித்துள்ளதால் காத்தான்குடி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யுமாறு களுவாஞ்சிக்குடி பொலிஸார் கூறினார்கள். ஆனால், காத்தான்குடி பொலிஸாரும் எனது முறைப்பாட்டை பொறுப்பேற்கவில்லை.

அதன்பின்னர் மட்டக்களப்பு மனித ஆணைக்குழுவின் அலுவலகத்துக்குச் சென்றேன். எனது மகள் காணாமல்போனது தொடர்பாகவும் அவர் சஹ்ரானுடன் இருப்பதாக எனக்குக் கிடைத்த தகவல் தொடர்பாகவும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கூறினேன். சஹ்ரான் என்பவர் சாதாரண ஒருவர். பிரச்சினை ஏற்படுவதற்கான வாய்ப்பில்லை, ஆகையால் முறைப்பாடு செய்வதற்கு எந்த அவசியமும் இல்லை என்று அங்கிருந்த அதிகாரி ஒருவர் எனக்குக் கூறினார். அதன்பின்னர் கல்முனையிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தேன். முறைப்பாட்டை பொறுப்பேற்றிருந்தாலும் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.



புலஸ்தினியின் தாயார் ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம்

**கேள்வி : அதன்பின்னர் மகள் தொடர்பாக தகவல் கிடைத்ததா?**

பதில்: 2019 ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவங்களின் பின்னர் அந்தச் சம்பங்களுடன் தொடர்புடைய நபர்கள் தொடர்பான புகைப்படங்கள் ஊடகங்களில் வெளியானபோது எனது மகளுடைய புகைப்படமும் அதில் இருந்ததை நான் அவதானித்தேன். உயிர்த்த ஞாயிறு தின தாக்குதலுக்குப் பின்னர் சாய்ந்தமருது பிரதேசத்தில் வீடொன்றில் வெடிப்புச்சம்பவமொன்று இடம்பெற்றது என்பதையும் நான் அறிந்துகொண்டேன். அந்த வீட்டில் சஹ்ரானுடைய மனைவி இருந்ததையும் தெரிந்துகொண்டேன். இந்த வருடம் ஜனவரி மாதம் 10ஆம் திகதி என்னை அம்பாறை பொலிஸார் அழைத்து சாய்ந்தமருதில் வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற வீட்டிலிருந்து கிடைக்கப்பெற்ற தங்க நகைகளின் புகைப்படங்களை காண்பித்தார்கள். ஆனால், அவற்றில் நான் புலஸ்தினிக்கு வழங்கிய தங்க ஆபரணம் எதுவும் இருக்கவில்லை.

**கேள்வி : அந்தச் சம்பவத்தில் உங்களது மகள் இறந்துவிட்டாரா என்பதை உறுதிசெய்துகொள்வதற்கு அவ்விடத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பெண் சடலங்களிலிந்து கிடைக்கப்பெற்ற உடற்பாகங்களுடன் உங்களுடைய டீ.என்.ஏ. பரிசோதனை செய்யப்பட்டதா?**

பதில்: ஆம். ஆனால் என்னுடைய டீ.என்.ஏ.வுடன் அங்கிருந்த யாருடைய உடற்பாகங்களும் ஒத்திருக்கவில்லை என்பதை நான் அறிந்துகொண்டேன்.


**கேள்வி : புலஸ்தினி இன்னும் உயிர்வாழ்வதாக நீங்கள் கருதுகிறீர்களா?**

பதில் : அது தொடர்பில் சரியாக என்னால் கூறமுடியாது. ஆனால், குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்குச் சென்றபோது சஹ்ரானுடைய மனைவியை சந்தித்திருந்தேன். அதன்போது, சாரா தன்னுடன் சாய்ந்தமருதுவிலுள்ள வீட்டுக்கு வந்ததாக அவர் கூறினார். மேலும் சாரா தன்னுடனே இருந்ததாகவும் அவர் என்னிடம் கூறினார். அதனால் மகளுக்கு என்ன நடந்தது என்பது அவருக்கே தெரியும். இது உறுதிப்படுத்தப்படும் வரையில் சஹ்ரானுடைய மனைவியை விடுதலைசெய்ய வேண்டாம் என்று நான் சகல பாதுகாப்புப் பிரிவினரிடம் கேட்டுக்கொள்கிறேன்.

எனக்கு மகள் தொடர்பான விபரங்கள் கிடைக்குமாக இருந்தால் அது தொடர்பில் நிச்சயமாக பாதுகாப்புப் பிரிவினருக்குத் தகவல் வழங்குவேன். அதேபோன்று, பாதுகாப்புப் பிரிவுக்கு புலஸ்தினி தொடர்பாக தகவல் கிடைத்து அவரை கண்டுபிடித்தால் ஒருமுறை அவருடன் கதைப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ராஜரத்னம் கவிதா ஆணைக்குழுவின் முன்னிலையில் வழங்கிய சாட்சிகளுக்கமைய, அவருக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதால் அவருக்கு பாதுகாப்பை வழங்குமாறு ஆணைக்குழுவின் தலைவர், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிதாரர்களை பாதுகாப்பதற்கான தேசிய அதிகாரசபைக்கு பணிப்பு விடுத்துள்ளார். மேலும், அது தொடர்பாக அறிக்கையொன்றை ஒருவாரத்துக்குள் சமர்ப்பிக்குமாறும் பணிக்கப்பட்டது.

## கண்டதும்... கேட்டதும்... பார்த்ததும்...!



தோட்டத் தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளர் ஆக்குவோம் என்று தேர்தல் மேடைகளில் முழங்கப்படுகிறது...

அப்போ இப்போதுள்ள தோட்ட உரிமையாளர்கள் என்ன செய்வார்கள்? கொழுந்து பறிப்பார்களா? தெரியவில்லை.

50ரூபா அதிகரிப்பு செய்ய முடியாத ஓர் அரசு... ஆயிரம் ரூபாவை காட்டியே அரசியல் நடத்தும் ஓர் அரசு... பாவம் ஏழை தோட்டத் தொழிலாளர்கள்...

கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவர்கள் வானம் ஏறி வைகுண்டம் போன கதையாக தொழிலாளர்களை வைத்து நல்லா நடத்துறாங்கள் நாடகத்தை...

இன்னும் எத்தின காலம்தான் ஏமாந்துவார் இந்த நாட்டிலே என்கிற தத்சை ராமையாதாஸின் பாடல் தான் நினைவுக்கு வருகுது போங்க...!

- சிவ் -

## 9 கடைகளில் கொள்ளை: பொலிஸார் வலைவீச்சு!

**மஸ்கெலியாவில் சம்பவம்**



மஸ்கெலியா நகரிலுள்ள சில வர்த்தக நிறுவனங்கள் நேற்று அதிகாலை உடைக்கப்பட்டு பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

காய்கறி கடை, உணவகம், பலசரக்குக் கடை உட்பட 9 கடைகள் இவ்வாறு உடைக்கப்பட்டு கொள்ளையடிக்கப்பட்டுள்ளன. சிசிரிவி கெமரா பதிவுகளின்படி திருடன் முகத்தை முழுமையாக மூடியிருப்பதையும் தனிநபர் ஒருவரே கொள்ளைச் சம்பவத்தில் ஈடுபட்டிருப்பதையும் காணக்கூடியதாக இருக்கின்றது.

மேலும், இதற்கு முன்னரும் பல தடவைகள் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்றிருப்பதாகவும் நகர பிரமுகர்கள் தெரிவிக்கின்றனர். குறித்த சம்பவம் தொடர்பில் மஸ்கெலிய பொலிஸார் தீவிர தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருகின்றனர்.

## போதைப்பொருளுடன் பெண் கைது!

(வவுனியா)

போதைப்பொருட்களை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில் வவுனியாவில் பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவ் விடயம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

வவுனியா மடுகந்தை விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலுக்கமைய, நேற்றையதினம் இரவு வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியில் சோதனைகளை மேற்கொண்ட விசேட அதிரடிப்படையினர் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த பெண்ணொருவரை (வயது – 25) கைதுசெய்துள்ளனர்.

அவரிடமிருந்து ஒரு கிலோ 5 கிராம் கேரள கஞ்சாவும், 2 கிராம் 60 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

## தலைமன்னார் தென் கடற்கரையில் உருக்குலைந்த நிலையில் சடலம் மீட்பு



(மன்னார்)

மன்னார் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தலைமன்னார் பொலிஸ் பிரிவிலுள்ள பழைய பாலம் தெற்கு கடற்கரையில் நேற்றுக் காலை உருக்குழைந்த நிலையில் கரையொதுங்கிய ஆணொருவரின் சடலத்தை தலைமன்னார் பொலிஸார் மீட்டுள்ளனர்.

தலைமன்னார் கடற்கரைப் பகுதியில் நேற்று ரோந்துப் பணியில் ஈடுபட்ட கடற்படையினர் கடற்கரையில் கரையொதுங்கிய சடலத்தை அவதானித்துள்ளனர்.

கடற்படையினர் உடனடியாக தலைமன்னார் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதையடுத்து தலைமன்னார் பொலிஸார் குறித்த பகுதிக்குச் சென்று சடலத்தை பார்வையிட்டு விசாரணைகளை முன்னெடுத்ததோடு, மன்னார் நீதவான் நீதிமன்றத்தின் கவனத்திற்கும் கொண்டுசென்றனர்.

மேலதிக விசாரணைகளை தலைமன்னார் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர்.

## இன்றைய ராசி பலன்கள்

**28.07.2020 (செவ்வாய்க்கிழமை)**

வித்வ கலாபூஷணம் ஜோதிட திலகம்
சிவஸ்ரீ வெங்கட சுப்ரமணிய குருக்கள்

| | |
|---|---|
| மேஷம் - | பயம் |
| ரிஷபம் - | சாந்தம் |
| மிதுனம்- | புகழ் |
| கடகம் - | மகிழ்ச்சி |
| சிம்மம் - | துக்கம் |
| கன்னி - | கடன் |
| துலாம் - | இன்பம் |
| விருச்சிகம் - | அமைதி |
| தனுசு - | அலைச்சல் |
| மகரம் - | பிரயாணம் |
| கும்பம் - | பக்தி |
| மீனம் - | உறவு |

**சுப நேரம்**
காலை: 10.32 - 12.02
மாலை: 03.02 - 05.15

**இராகு காலம்**
03.02
04.32

**எம கண்டம்**
09.02
10.32



ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட குத்தகைத் தவணை மற்றும் கடன் தவணை ஆகிய நிவாரணங்களை வழங்காமைக்கு எதிர்ப்பு தெரிவித்து சிங்கள ராவய தேசிய அமைப்பு உள்ளிட்ட இன்னும் பல அமைப்புகள் இணைந்து நேற்று கொழும்பு ஜனாதிபதி செயலகத்துக்கு அருகில் அமைந்துள்ள ஆர்ப்பாட்ட இடத்தில் எதிர்ப்பை வெளியிட்டபோது. (படப்பிடிப்பு : சமன் அபேசிரிவர்தன)

# புதிய நாடாளுமன்றத்தின் சகல தகவல்களையும் அமர்வு தினத்தன்றே மக்களுக்கு வழங்க நடவடிக்கை

**நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க**



பொதுத் தேர்தலின் பின்னர் அமையவிருக்கும் புதிய நாடாளுமன்றத்தின் சகல தகவல்களையும் நாடாளுமன்ற அமர்வு தினத்தன்றே பொது மக்களுக்கு வழங்குவதற்கான கட்டமைப்பொன்று உருவாக்கப்படும் - என நாடாளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க தெரிவித்தார்.

மேலும், நாடாளுமன்றக் குழுக்களின் செயற்பாடுகளை உடனடியாகவே பொது மக்களுக்கு வழங்குவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். நாடாளுமன்றம் தொடர்பில் பொதுமக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கையை அதிகரிக்கச்செய்வதே இதன் நோக்கம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்ற தொடர்பாடல் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட 'நாடாளுமன்ற வித்தி' செய்தி மடல் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே நாடாளுமன்ற செயலாளர் நாயகம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தினால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளை பொதுமக்களிடம் கொண்டுசேர்ப்பதற்கு வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருப்பதாகவும், நடமாடும் சேவையை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கையெடுக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாடாளுமன்ற சம்பிரதாயங்கள், நடைமுறைகள் பற்றிய விபரங்கள் பலவற்றைத் தாங்கியதாக நாடாளுமன்றத்தின் முதலாவது செய்திமடலாக இது வெளியாகியுள்ளது.

நாடாளுமன்றத்தின் உத்தியோகபூர்வ இணையதளம் கடந்த ஐந்து வருடங்களில் சிறந்த நிறுவனங்களுக்கான இணையதளத்துக்கான விருதுகளைப் பெற்றிருப்பதாகத் தெரிவித்த அவர், இதனை மேலும் மெருகூட்டுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தின் செயற்பாடுகள் பற்றிய பல்வேறு விடயங்களை உள்ளடக்கிய ஈ-செய்திமடலான "நாடாளுமன்ற வித்தி' அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதிச் செயலாளர் நாயகமும் பணியாட்தொகுதி பிரதானியுமான நீல் இத்தவல உள்ளிட்ட நாடாளுமன்றத் திணைக்கள தலைவர்கள் உள்ளிட்ட பலரும் இதில் கலந்துகொண்டனர்.



சர்வதேச நாணய நிதியத்தின் தேவைக்கு ஏற்ப கொண்டுவரப்பட்டுள்ள தேசிய வருமான மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தை தோற்கடிக்குமாறு கோரி தேசிய வருமான ஆணையாளர்களின் சங்கம் உள்ளிட்ட மேலும் சில தொழிற்சங்கங்கள் இணைந்து நேற்று கொழும்பு தேசிய வருமானவரித் திணைக்களத்தின் எதிரே தமது எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது... (படப்பிடிப்பு : சமன் அபேசிரிவர்தன)

## யாழ்/அராலிஓடைக்கரைகுளம் தடுப்புச்சுவர் கட்டுமானம்

**பிரதமரின் தலையீட்டுடன் தீர்வு**

அராலி ஓடைக்கரைகுளம் கட்டுமானப் பணிகளை மீண்டும் ஆரம்பிக்கத் தேவையான நிதியை விடுவிக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் யாழ். வட்டுக்கோட்டை கமக்காரர் அமைப்பினர் பிரதமரிடம் விடுத்த வேண்டுகோளுக்கமைய இந்தப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

ஓடைக்கரைகுளம் தடுப்புச்சுவர் கட்டுமானத்தை ஆரம்பிப்பதற்கு அனுமதியளிக்குமாறு கோரி, பிரதமருக்கு கடிதமொன்று அனுப்பிவைக்கப்பட்டது.

இதனை பரிசீலனைசெய்த பிரதமர், கட்டுமானப் பணிக்கான நிதியை விடுவிக்குமாறு, சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

பிரதமரின் கோரிக்கைக்கமைய அராலி ஓடைக்கரைகுளத்திற்கு தடுப்புச் சுவர் அமைப்பதற்கு ஒதுக்கப்பட்ட 6.705 மில்லியன் ரூபா ஒதுக்கீடு தொகை விடுவிக்கப்பட்டுள்ளது.

தடுப்புச்சுவர் கட்டுமானப் பணிகள் 2020 ஒகஸ்ட் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்திசெய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கம் ஈ.பி.டி.பி.க்கு ஆதரவு




(வவுனியா)

ஈழ மக்கள் ஜனநாயக கட்சிக்கு (ஈ.பி.டி.பி.) தமது ஆதரவை தெரிவிப்பதாக அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் வடமாகாண இணைத்தலைவர் ஆறுமுகம் புண்ணியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தில் நேற்று மாலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

எமது சங்கமானது 30 வருட அனுபவத்தைக்கொண்டு வடக்கு, கிழக்கை மையமாகக்கொண்ட பாரிய தொழிற்சங்கம். எமது தொழிற்சங்கமானது பாரிய திட்டங்களைக்கொண்டு தொழிற்சங்க ஊழியர்களினூடாக மக்களுக்கும் சேவையாற்றி வந்திருக்கிறது.

மக்களின் குறைநிறைகளைக் கேட்டறிந்திருக்கிறோம். அந்தவகையில் சுமார் முப்பது வருட காலமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஆதரித்துவந்தவர்கள் இம்முறை தேர்தலில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியை ஆதரிப்பதாக கடந்த மூன்று மாதத்திற்கு முன்னர் கல்முனையில் இடம்பெற்ற தலைமைப்பீட கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஏனெனில், வீர வசனங்களைப் பேசிப் பேசியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் காலத்தைக் கடத்திவிட்டனர். இனியும் நாங்கள் காலத்தைக் கடத்த விரும்பவில்லை. அந்தவகையில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சியை ஆதரித்து ஒத்துழைப்பு வழங்குவதற்காக ஒன்றுகூடியிருக்கிறோம்.

இதனைத் தொடர்ந்து கருத்து தெரிவித்த ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் வன்னி மாவட்ட வேட்பாளர் சி.கிரிதரன், இம்முறை 2020ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் போட்டியிடுகிறேன். எனக்கும் எமது கட்சிக்கும் பூரண ஆதரவு தெரிவுக்கும் முகமாக எம்முடன் இணைந்து செயலாற்றுவதற்காக அகில இலங்கை அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் மற்றும் அதன் உறுப்பினர்கள் வருகை தந்துள்ளார்கள். அவர்கள் இனிவரும் காலத்தில் எங்களுடன் இணைந்து செயற்படுவதற்கும், அரசியல் பயணத்தை மேற்கொள்வதற்கும் முன்வந்துள்ளார்கள்.

அதனடிப்படையில் எனக்கு இந்தத் தேர்தலில் ஆதரவளிப்பதற்காக நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன் – என்றார்.





# தோட்டத் தொழிலாளர் சம்பள அதிகரிப்பில் அரசாங்கம் கவனம்

## -பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஹட்டனில் தெரிவிப்பு

- தோட்டங்களில் வேலைசெய்வோர் போன்று பதிவு உள்ளவர்களுக்கும் வீடு
- போலியான அரசியல் உறுதிமொழிகளுக்கு தோட்ட மக்கள் இம்முறை ஏமாறமாட்டர்

(ஹட்டன்)

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு, வீட்டுப் பிரச்சினைக்குத் தீர்வை பெற்றுக் கொடுத்தல் உள்ளிட்டதாக தோட்ட மக்களின் வாழ்வை வளப்படுத்த சுபீட்சத்தின் நோக்கு கொள்கைத் திட்டத்தினூடாக விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைவர், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

ஹட்டன் நகரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சந்திப்பில் உரையாற்றும்போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த பிரதமர்,

“நான் இறுதியாக அமைச்சர் தொண்டமானை சந்தித்தது 2020.05.26ஆம் திகதி. அன்று அவர் என்னுடன் நிறைய விடயங்கள் பற்றி கலந்துரையாடினார். அமைச்சர் தொண்டமான் என்னுடன் இறுதித் தினத்தில் கலந்துரையாடியவற்றை நான் ஞாபகப்படுத்தவேண்டும். அவர் அந்த இறுதித் தருணத்தில் தோட்டத்திலுள்ள உங்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பது எப்படி என்பது பற்றிதான் கதைத்தார். நான் தொண்டமானின் மூன்று பரம்பரைகளுடன் பணியாற்றினேன். அவர்கள் ஒவ்வொருவரதும் உரிமைகளைப் பெற்றுக் கொள்ளும் முறைகள் ஒவ்வொருவருக்கும் வேறுபட்டது. பாட்டனார் மற்றும் தந்தையின் முறைகளைவிட மிகவும் வேறுபட்ட முறையொன்றுதான் ஜீவனிடம் உள்ளது.

அவர் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை உயர்த்துமாறே பெரிதும் கேட்டுக்கொண்டார். நாங்கள் மூன்று சந்தர்ப்பங்களில் தோட்ட உரிமையாளர்களுடன் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பில் விரிவான பேச்சுவார்த்தை நடத்தியுள்ளோம். அந்தப் பேச்சுவார்த்தைகளுக்கு ஜீவன் தொண்டமான் உள்ளிட்ட உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். தோட்ட உரிமையாளர்களுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் ஜீவன் பேசியது தோட்ட உரிமையாளர்களுக்கு சம்பளத்தை உயர்த்தாதிருக்க முடியாத வகையிலேயே. தேர்தல் காலத்தில் சம்பள உயர்வு தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு தேர்தல் சட்டங்கள் இடையூறாக காணப்படுவதால் நாங்கள் தேர்தலின் பின்னர் இது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தி தோட்டத் தொழிலாளர்களுக்கு நீதியை நிலைநாட்டுவோம்.

நல்லாட்சி அரசாங்கம் வந்தவுடன் அமைச்சர் தொண்டமான் அறிந்திருந்தார், அந்த அரசாங்கத்தினூடாக இந்தத் தோட்ட மக்களுக்கு எதுவும் நடைபெறாது என்று. அதனால் தோட்ட மக்களுக்காக எந்நாளும் அரசாங்கம் அமைக்கும் எந்தவொரு கட்சிக்கும் உதவிசெய்த அமைச்சர் தொண்டமான் முதல் முறையாக நல்லாட்சி அரசாங்கத்துடன் இணையாது எம்முடன் அரசாங்கமொன்றை அமைக்கும்வரை தோட்ட மக்களுக்காக முன்நின்றார். நல்லாட்சி அரசாங்கத்தினால் தோட்ட மக்களுக்கு எவ்வித நன்மையும் கிடைக்காது என அமைச்சர் தொண்டமான் தெரிந்திருந்ததனாலேயே நல்லாட்சி அரசாங்கத்துடன் இணையவில்லை.

இந்தத் தோட்ட மக்களை தோட்டங்களுக்குள்ளேயே வைத்திருப்பது எமது நோக்கமல்ல. அங்கிருந்து வெளியுலகிற்கு அழைத்துச் செல்லவேண்டும். நாங்கள் அந்த வெற்றியை தோட்ட மக்களுக்கு வழங்கியிருக்கிறோம். ஆனால், தோட்டங்களிலிருந்து வெளியே செல்லாதவர்களுக்கு, அங்கிருந்து வெளியே செல்பவர்களுக்குக் கிடைக்கும் வசதிகள், கிடைக்கும் வருமானத்திற்கு சமமான வருமானம் பெறும் நாட்டை உருவாக்கும் பொறுப்பு தற்போது எமக்கு எஞ்சியுள்ளது. அடுத்ததாக நாம் செய்வதற்கு தயாராக இருப்பது அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதே. தோட்ட மக்களை இவ்வளவுகாலமும் அவ்வப்போது வெவ்வேறு அரசியல் கட்சிகளின் வேண்டுகோளுக்கமைய அவர்கள் பக்கம் இழுத்துக் கொள்ள முயற்சித்தனர். ஆனால், அமைச்சர் தொண்டமான் ஒருநாளும் நாட்டை பிரிக்கும் அரசியல் நோக்கங்களுக்கு தோட்ட மக்களை ஈடுபட இடமளிக்கவில்லை. கொவிட் - 19 தொற்று காணப்படுகையில், அமைச்சர் தொண்டமானுக்கு மாத்திரம் சிறப்பு சலுகை செய்தது ஏன் என்று சிலர் கேட்கின்றனர். நாம் அவ்வாறு ஏதும் சிறப்பு சலுகை செய்யவில்லை, பயங்கரவாதத்தில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழக்கவிருந்த தோட்ட மக்களை பாதுகாத்தது, அந்த பயங்கரவாதிகளின் வழியில் செல்ல விடாது பார்த்துக்கொண்டதும் அமைச்சர் தொண்டமான்.

மிகவும் கடினமான தருணத்தில் நாடளாவிய ரீதியில் குற்றச்சாட்டுகள் எழுந்தாலும் தோட்ட மக்களுக்கு செய்யும் கௌரவமாக அவரது பூதவுடலுக்கு மரியாதை செலுத்த நாம் வாய்ப்பளித்தோம். சிறுபான்மையினரின் உரிமை தொடர்பில் எந்நேரத்திலும் பேசுகின்றவர்களும் இந்தக் காரணத்தை பெரிதுபடுத்தி எமக்கு எதிராக பேசுவது எனக்கு மனவருத்தம். அதுபோன்று போலி அரசியல் வாக்குறுதிகளுக்கு தோட்ட மக்கள் இம்முறை ஏமாறமாட்டார்கள் என்ற நம்பிக்கை எனக்குள்ளது.

அதுபோலவே தோட்ட வீடுகள் இதுவரை தோட்டங்களில் பணியாற்றியவர்களுக்கே வழங்கப்பட்டது. தோட்டத்தில் வசிக்கும் மற்றும் வாக்காளர் பட்டியலில் பெயர் பதியப்பட்டுள்ளவர்களுக்கும் வீடுகளை வழங்குமாறு தொண்டமான் எங்களிடம் கோரினார். நாங்கள் அதை நிறைவேற்றிக் கொண்டு செல்கிறோம். ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ‘சுபீட்சத்தின் நோக்கு’ கொள்கைத் திட்டத்தில் தோட்டங்களை அண்மித்த மக்களின் வாழ்க்கையை வளப்படுத்துவது தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதன்படி நடவடிக்கை எடுப்பதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம்.

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் தோட்ட மக்களுக்காக செய்த சேவையில் தற்போது அவரது மகன் ஜீவன் தொண்டமான் எங்களுடன் இணைந்துள்ளார். ஆறுமுகம் தொண்டமான் தலைமை வழங்கிய நுவரெலியா தோட்ட மக்களுக்கு தலைமைத்துவத்தை வழங்கி செயற்படும் பொறுப்பு தற்போது ஜீவன் தொண்டமானுக்கு சென்றுள்ளது. தோட்ட மக்களின் பிரச்சினைகள் குறித்து எதிர்காலத்தில் ஜீவன் தொண்டமான் பேசுவார். தோட்ட மக்களுக்காக அவர் ஒரு சிறந்த தலைமைத்துவமொன்றை வழங்குவாரென நான் நம்புகிறேன்” – என்றார்.




# ‘எஹலேபொல வளவ்வ’ கட்டடத்தொகுதி புனரமைப்பு

(கண்டி)

இலங்கை வரலாற்றில் இடம்பிடித்த எஹலேபொல குடும்பத்திற்குரிய கண்டி ‘எஹலேபொல வளவ்வ’ என்ற கட்டடத்தொகுதி ஒரு பாரிய கட்டடத் தொகுதியாகவும் புராதன கட்டடமாகவும் இருந்துவந்தது. கண்டி சிறைச்சாலையாகவும் அது நீண்டகாலம் பயன்படுத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.





குறித்த கட்டடம் தற்போது நகர அபிவிருத்தி அதிகாரசபையால் புனரமைக்கப்பட்டு வருகின்றது. இலங்கை கடற்படையின் சிவில் பொறியியல் பிரிவு அதனை மேற்கொண்டுவருகிறது. லெப்டினன் கொமாண்டர் கே.டி.ஏ.வை மிஹிரிபென்ன தலைமையில் 50 பேர் நிர்மாணப்பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

மேற்படி கட்டடம் இரண்டு பிரதான பிரிவுகளைக் கொண்டது. இவை புனரமைப்பின் பின் வினைத்திறன் கொண்ட பொருளாதார செயற்றிட்டம் ஒன்றுக்கு வழங்கப்படவுள்ளது. இதில் 40 அறைகளும் பல்வேறு பிரதான சாலைகளும் உள்ளன.

அண்மையில் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே புனரமைப்புப் பணிகளை நேரில் சென்று பார்வையிட்டார்.

# முஸ்லிம்களின் பெயரை விற்று அரசியல் புரிபவர்களின் மாயவலையில் சிக்க மக்கள் மடையர்கள் அல்ல

### மாத்தளை மாநகர சபையின் தேசிய மக்கள் சுதந்திர மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர் நிலாப்

(மாத்தளை)

இந்நாட்டை இன்னும் 20 - 30 வருடங்கள் ராஜபக்ஷ குடும்பத்தினரே ஆட்சி புரிவார்கள் எனவும் இந்நாட்டு முஸ்லிம்கள் அதுக்கு பக்கபலமாக செயற்பட வேண்டும் என ஆருடம் கூறும் சில முஸ்லிம் அரசியல்வாதிகளின் பசப்பு வார்த்தைகளில் புத்தியுள்ள எந்தவொரு முஸ்லிமும் சோரம் போகமாட்டார்கள் என மாத்தளை மாநகர சபையின் தேசிய மக்கள் சுதந்திர மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர் எம்.வை.எம்.நிலாப் தெரிவித்தார்.

மாத்தளை நகர் தேசிய மக்கள் சக்தி தேர்தல் காரியாலயத்தில் இடம்பெற்ற தேர்தல் விளக்கக் கூட்டத்தில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர்,

சுதந்திரத்திற்குபின் இந்நாட்டு முஸ்லிம்கள் தொகுதிவாரி மற்றும் விகிதாசாரத் தேர்தல்களுக்கு முகம் கொடுத்து அனுபவம் பெற்றவர்கள். சுதந்திரத்திற்கும் பின்னர் இடம்பெற்ற ஒவ்வொரு தேர்தல்களிலும் இந்த அரசியல் தலைமைத்துவங்கள் எவ்வாறு முஸ்லிம்களை வழிநடாத்தி அன்றைய ஆட்சியாளர்களான ஐக்கிய தேசியக் கட்சியிடமும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியிடமும் முஸ்லிம்களுக்குத் தேவையானதை பெற்றுக் கொடுத்தார்களென்பதை இந்நாட்டு முதிர்ச்சியுள்ள அரசியல் தலைமைத்துவங்கள் புரிந்துள்ள போதிலும், அரசியலில் பச்சிளங்குழந்தைகளுக்கு இது புரியாத காரியம்.

அன்றைய எமது அரசியல் தலைவர்கள் சுயநலன் கருதி அரசியல் புரியவில்லை. அவர்களது சொல்லும், செயலும் முஸ்லிம்களின் விமோசனத்திற்காகவே செயல்பட்டது.

அண்மைக் காலமாக அரசியலில் சில சுயநல விஷமிகள் களமிறங்கி அரசியலையே அசிங்கப்படுத்தி தமது குறிக்கோள்களை நிறைவேற்றிட முஸ்லிம் மக்களை குடும்ப அரசியலுக்கு அடகு வைக்க முயற்சிப்பது பற்றி இந்நாட்டு முஸ்லிம்கள் மிகவும் அவதானமாகவே செயற்பட வேண்டும்.

கொரோனா வைரஸின் காரணமாக இந்நாட்டில் நான்கு முஸ்லிம்கள் மரணமடைந்தார்கள். உலகில் சுமார் 180 நாடுகளில் கொரோனா மரணங்கள் ஏற்பட்டு மரணித்தனர். எல்லோரையும் அடக்கம் செய்தபோது நம் நாட்டில் மாத்திரம் அடக்கம் செய்யவிடாது நீதிக்கு புறம்பாக தீயிட்டு கொழுத்தி, எமது சமூகத்தில் அழியா ஒரு அசட்டுத் தன்மையை இந்த அரசு ஏற்படுத்தியபோது இந்த சுயநல அரசியல்வாதிகள் எங்கிருந்தார்கள்? எமது முஸ்லிம் சமூகம் மாத்திரமல்ல நாட்டின் சகல இனங்களும் இதை மறந்துவிடவில்லை. எனவே, முஸ்லிம்களின் பெயரை விற்று அரசியல் புரியும் இவர்களின் மாயவலையில் சிக்கிக்கொள்ள இந்நாட்டு முஸ்லிம்கள் வெறும் மடையர்கள் அல்ல - எனத் தெரிவித்தார்.

# முஸ்லிம்கள் படிப்படியாக தமிழை விட்டு சிங்களத்தை நோக்கி நகர்வது தமிழ்ப் பிரியர்களுக்கு கவலை தருகிறது

## -முத்தையாப்பிள்ளை ஸ்ரீகாந்தன்

(கண்டி)

தமிழ் வளர்த்த முஸ்லிம்கள் இன்று படிப்படியாக தமிழை விட்டு சிங்களத்தை நோக்கி நகர்வது தமிழ் பிரியர்களான எமக்கு கவலை தருகிறது. இலங்கையின் சமூக சந்தர்ப்ப சூழ்நிலையானது அவர்களை சிங்களத்தை நோக்கி நகரவைத்துள்ளது. இது முஸ்லிம்களைப் பொறுத்தவரை சரியாக இருந்தாலும் தமிழன் - என்றவகையில் நான் கவலைப்படுகிறேன் என்று கண்டி நெலும் பெசன் உரிமையாளரும் சமூக சமய பேச்சாளருமான முத்தையாப்பிள்ளை ஸ்ரீகாந்தன் தெரிவித்தார்.

மடவளை மதீனா மத்திய கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்ற மடவளை அன்சார் எம் சியாம் எழுதிய ‘வாசலுக்கு வரும் கோடை காலத்து தூறல்’ என்ற ஹைக்கூ கவிதைத் தொகுதி வெளியீட்டு விழாவில் சிறப்புப் பேச்சாளராகக் கலந்து உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

“மலையக முஸ்லிம் படைப்பாளிகளான கல்ஹின்னையைச் சேர்ந்த எஸ்.எம். ஹனிபா, உடதலவின்னையைச் சேர்ந்த பீ.எம்.புன்யாமீன் போன்றவர்கள் இலங்கை முஸ்லிம் எழுத்தாளர்கள் பற்றிப் புத்தகங்களே போட்டுள்ளனர். அந்தளவுக்கு முஸ்லிம்களில் இலக்கியவாதிகள் காணப்பட்ட நமது நாட்டில் தமிழ் வளர்க்க அவர்கள் பெரிதும் பங்களிப்புச் செய்துள்ளனர். ஆனால், அவ்வாறு பங்களிப்புச் செய்த முஸ்லிம்கள் இன்று படிப்படியாக தமிழை விட்டு சிங்களத்தை நோக்கி நகர்வது தமிழ் பிரியர்களான எமக்கு கவலை தருகிறது. இலங்கையின் சமூக சந்தர்ப்ப சூழ்நிலையானது அவர்களை சிங்களத்தை நோக்கி நகரவைத்துள்ளது. இது முஸ்லிம்களைப் பொறுத்தவரை சரியாக இருந்தாலும் தமிழன் என்றவகையில் நான் கவலைப்படுகிறேன்.



ஆனால், ஒன்று மட்டும் தேவை. எமது எதிர்கால சந்ததிக்கு நாம் சில பதிவுகளை விட்டுச்செல்லவேண்டும். அது புத்தகங்களாக இருக்கவேண்டும். அதனைக் கைவிடக்கூடாது. மதம் எம்மைப் பிரித்தாலும் மொழி எம்மை இணைத்துள்ளது. கவிக்கோ அப்துல் றஹ்மானின் ஆரம்பகால பேச்சு மூச்சு அனைத்தும் கவிதையாக இருந்தது. இறுதிக் காலத்தில் அவர் ஆன்மீகத்தில் கூடிய நாட்டம் காட்டினார். முஸ்லிம்களைப் பொறுத்தவரை அவர்கள் புத்தகத்துடன் வாழும் ஒரு சமூகம். வேறுவகையில் கூறினால் திருக்குர்ஆனை வாசிப்பது அதன்படி நடப்பது அவர்களது கடமையாக உள்ளது. எனவேஅ வாசிப்பு என்பது முஸ்லிம்களுக்கு புதியதொன்றல்ல.

இன்று எல்லாக் கோணங்களிலும் இனவாதம் வளர்க்கப்படுகிறது. எதை வளர்த்தோமோ எதிர்காலத்தில் அதனையே அறுவடை செய்யவும் வேண்டிவரும் என்பதே கவலை தரும் விடயமாக உள்ளது. அதனைவிட்டு நாம் உலகத்தில் நல்லது எதையாவது விட்டுச் செல்ல முயற்சிக்கவேண்டும்” - என்றார்.

இக்கவிதைத் தொகுதி வெளியீட்டு விழாவில் மாத்தளை இஸ்லாமிய இலக்கியப் பேரவைச் செயலாளர் எம்.எம்.பீர் முஹம்மத், முத்தையாப்பிள்ளை ஸ்ரீகாந்தன் ஆகியோரும் உரையாற்றினர். இந்நிகழ்வில் முதற்பிரதியை இளம் வர்த்தகர் நுஸ்ரி சௌபர்தீன் பெற்றுக்கொண்டதுடன் கண்டி தமிழ் இலக்கியப் பேரவை உறுப்பினர்களால் எழுத்தாளர் மடவளை அன்சார் எம். சியாம் கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# 20அடி பள்ளத்தில் வீழ்ந்த ஆட்டோ; டிக்கோயாவில் விபத்து



டிக்கோயா அளுத்தகல பகுதியில் நேற்றுக் காலை ஆட்டோவொன்று 20 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானது. எனினும், ஆட்டோ ஓட்டுனருக்கு காயம் எதுவும் ஏற்படவில்லை என சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பிலிருந்து டிக்கோயாவை நோக்கிவந்த ஓட்டோவே, அதிக வேகம் காரணமாக இவ்வாறு விபத்துக் குள்ளானது. விபத்து தொடர்பில் ஹட்டன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நோட்டன் - தியகல கல்கோரி வனப்பகுதியில் மான்குட்டியொன்று மீட்பு

(மஸ்கெலியா)

நோட்டன் - தியகல கல்கோரி வனப் பகுதியொன்றில் நேற்று முன்தினம் அதிகாலை மான்குட்டி ஒன்று காயங்களுக்குள்ளான நிலையில் மீட்கப்பட்டுள்ளது.



குறித்த வனப்பகுதியில் மான்குட்டி காயங்களுக்குள்ளான நிலையில் இருப்பதைக் கண்ட அப்பகுதி மக்கள் நல்லதண்ணி வனத்துறையினருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து அப்பகுதிக்குச் சென்ற வனத்துறை அதிகாரிகள் அந்த மான்குட்டியை மீட்டெடுத்துள்ளனர். குறித்த மான்குட்டிக்கு சிகிச்சையளிக்கும் முகமாக நல்லதண்ணி வனப்பகுதியிலுள்ள அவர்களது பாதுகாப்பு அறைக்கு கொண்டுசென்றுள்ளனர்.

மானின் கழுத்துப் பகுதி முறிந்துள்ளதாக சிகிச்சையளித்த வனத்துறை அதிகாரி தெரிவித்தார். மேலதிக சிகிச்சைகளை மேற்கொள்ள உள்ளதாகவும் அவர் கூறினார். திட்டொன்றில் இருந்து விழுந்ததாலேயே கழுத்துப் பகுதி முறிந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.



(தலவாக்கலை)

மஸ்கெலியா பிரவுன்லோ தோட்டத்தில் தொழிலாளர் தேசிய சங்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய 12 பேர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமானை நேற்று கொட்டகல சி.எல்.எவ். காரியாலயத்தில் நேரில் சந்தித்து அவருடன் இணைந்துகொண்டனர்.

# "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தில் வழங்கிய உறுதிமொழிகளை முழுமையாக நிறைவேற்றுவேன்...

## - ஜனாதிபதி குருணாகலையில் தெரிவிப்பு...





### * மக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டுமென ஜனாதிபதி வேண்டுகோள்...

### * குழுவொன்றை அமைத்து காணி பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை...

"சுபீட்சத்தின் நோக்கு" கொள்கைப் பிரகடனத்தில் வழங்கிய உறுதிமொழிகளை முழுமையாக நிறைவேற்றுவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

அதற்குத் தேவையான நாடாளுமன்ற அதிகாரத்தையும் நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிபெறச் செய்வதற்கான மக்கள் ஒத்துழைப்பையும் வழங்குமாறு ஜனாதிபதி மக்களிடம் வேண்டுகோள் விடுத்தார்.

பொதுஜன பெரமுனவில் பொதுத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர்களின் வெற்றியை உறுதிசெய்யும்வகையில் நேற்றுமுன்தினம் குருநாகல் மாவட்டத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நிக்கவரெட்டிய சந்தை வளாகத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் பங்குபற்றிய வேளையில் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவினால் இச்சந்திப்பு ஏற்பாடுசெய்யப்பட்டிருந்தது.

முன்பள்ளி பாடசாலை முறைமையை அமைச்சொன்றின்கீழ் கொண்டுவருவதற்கு ஜனாதிபதி மேற்கொண்ட தீர்மானத்தை பெரிதும் பாராட்டிய முன்பள்ளி பாடசாலை ஆசிரியர்கள் சிலர், அது பிள்ளைகளின் முன்பள்ளிப்பருவ வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்பட்ட முக்கிய நடவடிக்கையாகுமெனக் குறிப்பிட்டனர்.

நிக்கவரெட்டிய ஜயந்தி மத்திய மகா வித்தியாலய விளையாட்டரங்கை புனர்நிர்மாணம் செய்து தருமாறு மாணவர்கள் முன்வைத்த கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றுமாறு ஜனாதிபதி, இராணுவத் தளபதியிடம் தெரிவித்தார்.

பிரதேச மக்கள் முகங்கொடுத்திருக்கும் முக்கிய பிரச்சினையான காட்டு யானைகள் அச்சுறுத்தலுக்கு நிரந்தர தீர்வொன்றை வழங்க வேண்டியதன் தேவையை வேட்பாளர் டி.பி.ஏக்கநாயக்க, மகவ சந்தை வளாகத்தில் ஏற்பாடுசெய்திருந்த மக்கள் சந்திப்பில் பங்குபற்றிய ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். மகவ முச்சந்தியில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மேம்பாலம் காணி மற்றும் குடிநீர்ப் பிரச்சினைகள் குறித்தும் மக்கள் ஜனாதிபதியிடம் விளக்கினர்.

பாடசாலை பிள்ளையொன்று கொவிட் நிதியத்திற்கு உண்டியலொன்றை ஜனாதிபதியிடம் கையளித்தது.

வேட்பாளர் தாராநாத் பஸ்நாயக்க கல்கமுவ யு.பி.வன்னிநாயக்க விளையாட்டரங்கில் ஏற்பாடு செய்திருந்த மக்கள் சந்திப்பிலும் ஜனாதிபதி பங்குபற்றினார். காட்டுயானைகள் அச்சுறுத்தல், கல்கமுவ வைத்தியசாலையின் குறைபாடுகள் மற்றும் பஸ் போக்குவரத்து இல்லாத காரணத்தினால் பல கிராமங்களில் மக்கள் முகங்கொடுத்துவரும் கஷ்டங்கள் குறித்தும் மக்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்தனர்.

கல்கமுவையிலிருந்து மீகலேவவுக்குச் செல்லும் வீதியின் இரு பகுதிகளிலும் திரண்டிருந்த மக்களுடன் ஜனாதிபதி சுமுகமாக உரையாடினார்.

வேட்பாளர் அங்சக்க நவரத்ன மீகலேவ தேசிய விளையாட்டரங்கில் ஏற்பாடுசெய்திருந்த மக்கள் சந்திப்பில் பங்குபற்றிய ஜனாதிபதிக்கு அங்கு வருகை தந்திருந்த மக்கள் உற்சாக வரவேற்பளித்தனர்.

பிரதேசத்தின் வீதி மற்றும் குளங்களை புனர்நிர்மாணம் செய்து தருமாறு மக்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தனர்.

80 வயதுடைய ஒரு வயோதிபர் தனது சேமிப்பிலிருந்த 5,000 ரூபாவை கொவிட் நிதியத்திற்காக ஜனாதிபதியிடம் கையளித்தார்.

வேட்பாளர் டி.பி.ஹேரத் வாரியபொல வெவகெதர காணியில் ஏற்பாடுசெய்திருந்த மக்கள் சந்திப்பில் பங்குபற்றிய ஜனாதிபதி, அங்கு வருகை தந்திருந்த மக்களுடன் சுமுகமாக உரையாடினார்.

வேட்பாளர் குணபால ரத்னசேகர ஜனாதிபதித் தேர்தலில் முன்வைத்த "பண்டுபஸ்நுவர அபிவிருத்தி திட்டத்தை" நடைமுறைப்படுத்துவதற்கு உதவுவதாக ஹெட்டிபொல சந்தை வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மக்கள் சந்திப்பில் பங்குபற்றிய ஜனாதிபதி தெரிவித்தார். காணி உறுதிகள் மற்றும் உரிய முறையில் அளவை செய்யப்படாமை பற்றி பல மாவட்ட மக்கள் ஜனாதிபதியிடம் தெரிவித்திருந்தனர். முறையான ஆய்வொன்றை மேற்கொள்வதற்காக குழுவொன்றை நியமித்து அதற்கு தீர்வுகள் வழங்குவதாக ஜனாதிபதி இங்கு தெரிவித்தார். விவசாய சமூகத்தின் வசதிக்காக விவசாயத் திணைக்களத்தையும் நீர்ப்பாசனத் திணைக்களத்தையும் ஒன்றிணைக்குமாறு மக்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தனர்.

வேட்பாளர் தயாசிறி ஜயசேகர ஹெட்டிபொல பொது விளையாட்டரங்கில் ஏற்பாடுசெய்திருந்த மக்கள் சந்திப்பிலும் ஜனாதிபதி பங்குபற்றினார்.

அதிகாரிகளின் கவனயீனத்தின் காரணமாக அறுவடைசெய்ய முடியாதுள்ள கட்டுபொத்த ஹேனேகமவிலுள்ள சமார் 400 ஏக்கர் வயல்களை பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்துவதற்கு இடமளிக்குமாறு மக்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தனர்.

அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவும் இந்த நிகழ்வுகளில் பங்குபற்றினார்.

# அடிமை அரசியலில் இருந்து அபிவிருத்திக்காக நமக்காக நம்மில் ஒருவரை தெரிவுசெய்வோம்!

## இரத்தினபுரி மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர் சந்திரகுமார்





(அவிசாவளை )

நாம் காலா காலமாக எமது பொன்னான வாக்குகளை இதுவரை பெரும்பான்மை அரசியல்வாதிகளுக்கே வழங்கி எமது உரிமைகளை இழந்து வந்திருக்கின்றோம். அதனால் எமக்கான தேவைகள் அவர்களுக்கு பெரிதாக தென்பட்டதில்லை. அதனால் உட்கட்டமைப்பு வசதிகளில் பின்னடைந்திருக்கின்றோம். அடிமை அரசியலிலிருந்து விடுபட்டு இனியாவது அபிவிருத்தியை நோக்கி நகரவேண்டும். அதற்கு நம்மிலிருந்து நமக்காக ஒருவரை நாடாளுமன்றம் அனுப்பவேண்டும்.

கிடைத்திருக்கும் இந்த வாய்ப்பை சரியாக பயன்படுத்தி எமது தமிழ் பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்யவேண்டும் என இரத்தினபுரி மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் எம்.சந்திரகுமார் தெரிவித்தார்.

இரத்தினபுரியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தின்போது கலந்து உரையாற்றும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:

ஒரு தோட்டத் தொழிலாளியின் மகனுக்கே இன்னொரு தோட்டத் தொழிலாளியின் வாழ்கையை பற்றி சரியாக புரிந்துகொள்ள முடியும். எமது தோட்ட மக்கள் சொல்லொணாத் துயரங்களை அனுபவிக்கின்றார்கள். நாம் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து வசதி உட்பட உட்கட்டமைப்பு வசதிகளில் பின்னடைந்திருக்கின்றோம். அதனால் எமது மக்களின் தேவைகளை பூர்த்திசெய்யவே இன்று நான் அரசியலுக்குள் வந்திருக்கின்றேன். நான் ஒரு பட்டதாரி ஆசிரியர். ஆனாலும் அரசியல் அங்கீகாரம் என்ற ஒன்று அமைந்தால் மாத்திரமே எமது உரிமைகளையும் சலுகைகளையும் எமது மக்களுக்கான தேவைகளையும் முறையாக பெற்றுக்கொடுக்க முடியும்.

இரத்தினபுரி தமிழ் மக்களின் இன்னல்கள் தொடராமல் முற்றுப்பெறவேண்டுமானால் என்னைபோல் லயத்திலே பிறந்து இறப்பர் தோட்டத்திலே கஷ்டப்பட்டு படித்து பட்டதாரியான தமிழர் ஒருவர் தம் மக்களுக்கு பிரதிநிதியாக அமையவேண்டும் என்பதை சகலரும் உணரவேண்டும். தான் லயத்திலே பிறந்து படித்து ஒரு படி மேலாக பட்டதாரி ஆசிரியரானாலும் என்னை போன்று பட்டதாரிகள் உருவாகினாலும் நம் சமூகம் மேம்பட அது போதுமானதல்ல. இரத்தினபுரி மாவட்டதில் தமிழ் பொறியியலாளர், வைத்தியர், வழக்கறிஞர், ஏன் ஒரு தமிழ் கிராம உத்தியோகத்தர்கூட இன்னும் உருவாகவில்லை. இரத்தினபுரி மாவட்டத்தில் 542 கிராமசேவகர் பிரிவுகள் உள்ளன. பொரலுவென்ன, ஹபுகஸ்தன்ன, தேணாகந்த, பெட்டிகல மெதகந்த, மாதம்பை, ஹொரமுல்ல, இறக்குவானை போன்ற இடங்களில் தமிழ்- முஸ்லிம்கள் செறிந்து வாழும் இடங்களிலும் பெரும்பான்மை இனத்தவரே கிராம சேவகராக கடமையாற்றுகிறார்கள். இதற்கான அடிப்படைக் காரணங்கள் நம்மால் கல்வி கற்க முடியாமல் இல்லை. வாய்ப்புகள் குறைவாக உள்ளமையேயாகும். எமது மாவட்டத்தில் இன்னும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகிறது.

கற்றல் உபகரணங்கள் இல்லை, தமிழ் பாடசாலைகளில் பௌதீக குறைபாடு நிறையவே உள்ளது. மாற்றத்தை முதலில் நாம் பாடசாலையிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். எமது பிள்ளைகள் முறையாக படித்து உயர வளங்களை பாடசாலைகளுக்கு வழங்கவேண்டும்.

மேலும், இம்முறை உங்கள் வாக்குகளில் என்னை தெரிவுசெய்வீர்களாயின், "ஒட்டுமொத்த இரத்தினபுரி வாழ் தமிழ் பேசும் மக்களின் ஏகோபித்த குரலாக விளங்குவேன்" எனது நாடாளுமன்ற பிரவேசம் இதுவரை நாம் அனுபவித்த துயரங்களுக்கு முடிவாக அமையும். இது நமக்கான காலம்.

கிடைத்திருக்கும் வாய்ப்பை சரியாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். நாம் காலம் காலமாக எமது பொன்னான வாக்குகளை இதுவரை பெரும்பான்மை அரசியல்வாதிகளுக்கே வழங்கி எமது உரிமைகளை இழந்து வந்திருக்கின்றோம். அதனால் எமக்கான தேவைகள் அவர்களுக்கு பெரிதாக தென்பட்டதில்லை. அதனால் நான் முதலில் குறிப்பிட்டதுபோன்று இதுவரை உட்கட்டமைப்பு வசதிகளில் பின்னடைந்திருக்கின்றோம். அடிமை அரசியலிலிருந்து விடுபட்டு இனியாவது அபிவிருத்தியை நோக்கி நகரவேண்டும். அதற்கு நம்மிலிருந்து நமக்காக ஒருவரை நாடாளுமன்றம் அனுப்ப வேண்டும் - என்றார்.

# இணையத்தின் ஊடாக பண மோசடி செய்த 5 பேர் கைது!

இணையத்தின் ஊடாக வெளிநாட்டிலுள்ள தொழிலாளர்களுக்கு சலுகை வட்டி வீதத்தின் ஊடாக கடன் வழங்குவதாக கூறி பண மோசடியில் ஈடுபட்ட 5 பேர் கிருலப்பனை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

30, 39, 38 மற்றும் 46 வயதுடைய பிட்டபத்தர, நாரஹேன்பிட்ட மற்றும் வெல்லம்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கடன் வழங்குவது தொடர்பில் வெளிநாட்டிலுள்ள தொழிலாளர்களுக்கு தொலைபேசியூடாக அறிவித்து அவர்களுடைய வங்கி விபரங்களைப் பெற்று அதனூடாக ஒருவரின் கணக்கிலிருந்து 5 இலட்சம் ரூபா வீதம் மோசடி செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தன்னுடைய வங்கிக் கணக்கிலிருந்து பண மோசடி செய்யப்பட்டதாக பெண் ஒருவர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் குறித்த நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது சந்தேக நபர்களிடமிருந்து மடிக்கணினி ஒன்று, வங்கி அட்டைகள், லெமினேட் இயந்திரம் ஒன்று, போலி ரப்பர் முத்திரை 2, போலி சாரதி அனுமதிப்பத்திரங்கள் 61, அதற்காக பயன்படுத்தும் அட்டைகள் 925 மற்றும் சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரங்கள் 5 உம் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது. அத்துடன், சந்தேக நபர்கள் பயன்படுத்திய கார் மற்றும் வேன் ஒன்றும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் கிருலப்பனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இரத்தினபுரி மாவட்ட சிறுபான்மை இன மக்களுக்கு தீர்வு காணப்படாத பல பிரச்சினைகள் உள்ளன!

## ஐ.தே.க.வேட்பாளர் சட்டத்தரணி ருஷ்தி ஹபீப் தெரிவிப்பு





- இரத்தினபுரி-

கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக இரத்தினபுரி மாவட்டத்தில் சிறுபான்மைச் சமூகம் சார்பாக நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் கிடைக்கப்பெறாததால் தீர்வு காணப்படாத பல சமூகப் பிரச்சினைகளை இம்மாவட்ட தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் தொடர்ந்தும் எதிர்கொண்டு வருகின்றனர் - என இரத்தினபுரி மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் சட்டத்தரணி ருஷ்தி ஹபீப் தெரிவித்தார்.

இரத்தினபுரி சாரா வரவேற்பு மண்டபத்தில் அண்மையில் இடம்பெற்ற இரத்தினபுரி மாவட்ட முஸ்லிம் சமூக புத்திஜீவிகளுடனான சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் இங்கு கருத்து தெரிவிக்கையில்,

இரத்தினபுரி மாவட்டம் மூவின மக்களும் ஒற்றுமையுடன் வாழும் சமாதானம் நிறைந்த வளமான ஒரு மாவட்டம். எனினும் சிறுபான்மைச் சமூகம் பொருளாதார ரீதியிலும், கல்வி அபிவிருத்தியிலும் மற்றும் வேலைவாய்ப்பு உட்பட அனைத்துத் துறைகளிலும் பாரிய பின்னடைவையே எதிர்நோக்கியுள்ளது.

இம்மக்களின் வாக்குப்பலத்தின் மூலம் நாடாளுமன்றம் சென்ற சிங்களப் பிரதிநிதிகளால் சிறுபான்மையின மக்களின் பிரச்சினைகள் எதுவும் தீர்க்கப்படவில்லை.

ஆகக் குறைந்தபட்சம் இரத்தினபுரி மாவட்டத்திலுள்ள தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் நிலவிவரும் ஆசிரியர் பற்றாக் குறையையாவது நிவர்த்திசெய்ய நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வரவில்லை. இதனால் திறமைகள் பல இருந்தும் பல மாணவர்களுக்கு தாம் விரும்பும் துறையில் உயர்கல்வியை தொடர முடியாத அவல நிலையே இன்னும் தொடர்கிறது.

இதுபோன்றுதான் தோட்டத் தொழிலாளர்களாக வாழ்ந்துவரும் இரத்தினபுரி மாவட்ட தமிழ் மக்களுக்கும் பல்வேறுபட்ட பிரச்சினைகள் உள்ளன.

பெரும்பாலான தோட்டத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கு இன்னும் வீட்டுரிமைகள் வழங்கப்படவில்லை. இன்றும் 10 அடிகள் கொண்ட லயன் அறைகளில்தான் அவர்களின் குடும்ப வாழ்க்கை தொடர்கிறது. இன்னும் சில தோட்டங்களில் வசிக்கும் இம்மக்கள் பல ஆண்டுகளாக சுத்தமான குடிநீருக்காக கனவு காண்கின்றனர். சில பொது போக்குவரத்து வசதிகள் இம்மக்களுக்கு இல்லாததால் தினமும் பாடசாலைகள் செல்லும் சிறுபிள்ளைகள் மற்றும் வயோதிபர்கள் உட்பட கர்ப்பிணித் தாய்மார்கள்கூட பல மைல்கள் நடந்தே பயணிக்கின்றனர்.

எமது நாட்டின் மொத்த தேசிய உற்பத்திற்கான முக்கிய பங்காளர்களாகவுள்ள இத்தோட்ட தொழிலாளர்களின் வருமானம் மாத்திரமின்றி சுகாதாரம் உட்பட அடிப்படை சட்ட உரிமைகளை பெற்றுக்கொள்வதிலும் சிக்கல்களை இம்மக்கள் நாளாந்தம் எதிர்கொண்டு வருகின்றனர்.

எமது நாட்டின் அரசியலமைப்பின் ஊடாக தமிழ் மொழியும் அரசகரும மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளபோதிலும் இரத்தினபுரி மாவட்ட தமிழ், முஸ்லிம் மக்களுக்கு இன்னும் அந்த உரிமை பயன்படுத்துவதற்கான வாய்ப்புகள் இல்லை. மற்றும் சில சந்தர்ப்பங்களில் இனவாதம், மதவாதம் என்ற அடிப்படைகளில்கூட இம்மாவட்ட தமிழ், முஸ்லிம் மக்கள் பல்வேறு நெருக்குதல்களையும் தாக்குதல்களையும் சிந்தித்தும் வருகின்றனர்.

மேற்படி அனைத்துப் பிரச்சினைகளுக்கும் உரிய தீர்வுகள் காணப்படவேண்டும் மற்றும் சில சமூகப் பிரச்சினைகளுக்கு சட்ட ரீதியாக தீர்வுகள் காணப்பட வேண்டும்.இன்னும் சில பிரச்சினைகளுக்கு நீண்டகால திட்டங்களின் அடிப்படையில் கட்டம் கட்டமாக தீர்வுகள் காணப்படவேண்டும்.

கடந்த இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக சட்டத்துறையிலும் சமூக நல்லிணக்க செயற்பாடுகளிலும் மிக முனைப்புடன் ஈடுபட்டு வரும் என்னால் இரத்தினபுரி மாவட்ட மக்களின் பிரச்சினைகளுக்கும் இறைவனின் உதவியுடன் தீர்வு காணமுடியுமென்ற நம்பிக்கையும் தைரியமும் எனக்கிருக்கிறது

நான் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக போட்டியிட்டாலும் நான் கட்சி சார்பான அரசியல் பிரமுகர் அல்ல. நான் கட்சியை ஒருபோதும் மார்க்கமாக நினைக்கவில்லை. எனது சமூகப் பணிக்கான ஒரு ஏணியாக மாத்திரமே அதனை நான் நோக்குகிறேன். நான் அரசியல் ஊடாக பணம் உழைக்கவேண்டிய தேவையும் எனக்கில்லை. எந்த அவசியமும் இல்லை. எனக்குரிய தேர்தல் வெற்றிவாய்ப்புகள் தொடர்பில் நீண்ட ஆய்வுகளின் பின்னர்தான் போட்டியிட இணக்கம் தெரிவித்தேன்.

உங்களின் பெறுமதியான வாக்கை நீங்கள் விரும்பும் ஒருவருக்கே வழங்குங்கள். அதுவே தேர்தல் ஜனநாயகமும் ஆகும். எனினும், அதற்கு முன் நீங்கள் ஏன் அவருக்கு வாக்களிக்களிக்கிறீர்கள் என்பது பற்றியும் அவரால் உங்கள் சமூகத் தேவையை நிறைவு செய்து தர முடியுமா? அவர் அதற்கு பொருத்தமானவரா?அவர் வெற்றிபெறுவதற்கான சாத்தியம் இருக்கிறதா? என்பது தொடர்பாகவும் ஆழமாக சிந்தித்து தீர்மானம் எடுங்கள்.

அப்போதுதான் உங்கள் வாக்கு உண்மையான நேர்மையான மாற்றத்திற்கான பெறுமதியான ஒரு வாக்காக கருதப்படும். குறிப்பாக, இரத்தினபுரி மாவட்ட தமிழ் பேசும் சிறுபான்மை சமூகமாகிய நாம் எமது வாக்குகள் தொடர்பாக மிகத் தெளிவான சிந்தனையுடன் செயற்பட கடமைப்பட்டிருக்கிறோம்.

இரத்தினபுரி மாவட்டத்தின் தற்போதைய தேர்தல் கள நிலைவரங்களின் அடிப்படையில் நோக்குகின்றபோது ஐக்கிய தேசியக் கட்சி ஊடாக மாத்திரம்தான் சிறுபான்மை சமூக பிரதிநிதித்துவம் ஒன்றை அல்லது முஸ்லிம் பிரதிநிதித்துவம் ஒன்றை பெறுவதற்கான நூறு சதவீத வாய்ப்புகள் உள்ளன. பொதுஜன பெரமுனவில் எந்தவொரு சிறுபான்மை சமூக வேட்பாளரும் நிறுத்தப்பட வில்லை. மாறாக, ஐக்கிய மக்கள் சக்தியில் சிறுபான்மை சமூகம் சார்பாக இரண்டு வேட்பாளர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர். ஆனால், இந்த இருவரும் மிகச் செல்வாக்குள்ள பல முன்னாள் அமைச்சர்களையும் விட கூடுதலான விருப்பு வாக்குகளைப் பெற்றால் மாத்திரம்தான் நாடாளுமன்றம் செல்வதற்கான வாய்ப்பும் சந்தர்ப்பமும் அவர்களுக்கு இருக்கிறது.

ஆனால், நான் போட்டியிடும் ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட வேட்பாளர் பட்டியலில் எந்தவொரு செல்வாக்குமுள்ள முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் நிறுத்தப்படவில்லை.

எனினும், செல்வாக்குமிக்க ஜனநாயக சிந்தனைகொண்ட மக்களுக்கு மிகவும் பரிச்சயமான ஒரு பழைய கட்சி என்றவகையில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு குறிப்பிடத்தக்க அளவு வாக்குகள் நிச்சயம் கிடைக்கத்தான் உள்ளன. ஆனால், அதனை இரத்தினபுரி மாவட்ட சிறுபான்மை சமூகத்தினுடைய நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்திற்கான வாய்ப்பாக மாற்றிக் கொள்வது உங்கள் அனைவருடைய சமூகக் கடப்பாடும் பொறுப்புமாகும் என நான் நினைக்கிறேன்- எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் இரத்தினபுரி மாவட்ட முஸ்லிம் சமயப் பெரியார்கள், கல்விமான்கள், இரத்தினபுரி பிரதேச பள்ளிவாசல் நிர்வாகிகள் மற்றும் முஸ்லிம் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள், வர்த்தகர்கள் உட்பட இளைஞர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.





# முன்னணியல்ல அது முகநூல் முன்னணி; கூட்டமைப்பினருக்கு வகுப்பெடுக்கத் தயார்!

## விக்னேஸ்வரன் மன்னாரில் சாட்டை

கூட்டமைப்பினர் கொள்கை வழியில் பயணிக்காது சுய நல வழியை பின்பற்றிப் போய் தமிழ் மக்களின் முதல் அணி என்கின்ற அந்தஸ்தை இழந்தமையினால்தான் நாம் மாற்று அணியாகியுள்ளோம் என வடமாகாண முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை மன்னார் பொது விளையாட்டு மைதானத்தில் மன்னார் நகர சபை உறுப்பினர் எஸ்.ஆர்.குமரேஸ் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், முதலமைச்சராக பதவி ஏற்று பொது மக்களை சந்தித்து எமது மக்களுக்கு எதிராக நடைபெற்றது இனப்படுகொலைதான் என்று அதனை பகுத்து அறிந்துகொண்டபோது எத்தகைய ஒரு பெரும் பொறுப்பு என் தோள்களில் சுமத்தப்பட்டுள்ளது என்பதை நான் அப்பொழுதுதான் உணர்ந்துகொண்டேன். அந்த கடப்பாட்டை உணர்ந்து கூட்டமைப்பு நடக்க முற்படவில்லை என்பது எனக்கு மன வருத்தத்தை தந்தது. எத்தனை இடர் வந்தாலும் எமது உரிமைகள் விடயத்தில் எந்தவிதமான விட்டுக் கொடுப்புகளையோ, காட்டிக்கொடுப்புகளையோ நாம் செய்து விடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தோம். அதனால்தான் கடும் அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டபோது இனப்படுகொலை தீர்மானத்தை கைவிடவோ அல்லது பொறுப்புக்கூறல் விடயத்தில் விட்டுக் கொடுப்புகளை செய்யவோ நான் தயாராக இருக்கவில்லை. உண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடும்போது நீரோ பிடில் வாசித்தது போல்தான் நடந்து கொண்டிருந்தார்கள். பிரச்சினைகளை அப்படியே விட்டு விட்டு தமது சுய இலாப சிந்தனைகளில் இருந்தார். இப்பொழுதும் அப்படித்தான் இருக்கின்றார்கள்.

கொள்கைகள் என்பது வெறும் வாய்ப்பேச்சு பொருளாக மாறி இருந்தன. நானும் சந்தர்ப்பவாதியாக மாறி சிங்கள மக்கள் மற்றும் அரசியல்வாதிகளுடன் ஏற்கனவே இருந்த தொடர்புகள் காரணமாக நான் அவர்களுடன் இணைந்து அவர்களுக்கு ஏற்ப தாளம் போட்டு இருந்தால் அல்லது அவர்களை நெல்சன் மண்டேலாவிற்கு ஒப்பாக தூற்றி துதி பாடி இருந்தால் எமது மாகாண சபைக்கு பல மடங்கு நிதியை அவர்கள் ஒதுக்கி இருப்பார்கள்.

பல செயற்றிட்டங்களை வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்க அனுமதி வழங்கி இருப்பார்கள். ஆனால், அவ்வாறு செய்திருந்தால் தமிழ் மக்களின் பல தசாப்த கால உரிமைப் போராட்டங்களுக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தி இருப்பேன். பெரும் துரோகத்தை அதனால் நான் இழைத்திருப்பேன். அதனால் தான் நான் அத்தகைய தவறை செய்யவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மட்டுமல்ல அப்போதைய பிரதமர், ஜனாதிபதியுடன் நான் பல தடவைகள் எமது கொள்கைகள் காரணமாக முரண்பட நேர்ந்தது.

ஜனாதிபதி சிறிசேன என்னை கிளிநொச்சி இராணுவ முகாமில் மதிய உணவு உண்ண அழைத்த போது- நாங்கள் இருவரும் பயணித்துக் கொண்டிருக்கும் போது இராணுவ முகாமில் மதிய உணவை உண்ணலாம் என கூறிய போது, நான் இராணுவத்தினரை வடக்கில் இருந்து வெளியே அனுப்ப வேண்டும் என்று கூறி வருகின்றேன். நான் எப்படி அவர்கள் முகாமில் சென்று சாப்பிடுவது என்று கேட்டு அங்கு செல்ல மறுத்து விட்டேன். கொள்கையில் பற்று உள்ளவர்கள் சில விடயங்களை செய்ய மாட்டார்கள். சுயநலனுக்காக வழி தவற மாட்டார்கள்.

அவ்வாறு இல்லாமல் சுய நன்மைக்காக கூட்டமைப்பு பாதை மாறியதால் தான் எமது தேசிய கூட்டணி உருவாகியது. எனவே, நாங்கள் பிரிய வேண்டி வந்தமைக்கு காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் சுயநலம் சார்ந்த கொள்கைகள் நடவடிக்கைகள்தான். எமது தமிழ் மக்கள் தேசிய கூட்டணிக் கட்சி ஒரு நிறுவன மயப்படுத்தப்பட்ட கட்சியாக வரையறை செய்யப்பட்ட கொள்கையுடன் செயற்படுகின்றது. அதற்கான எழுத்து மூல உடன்பாட்டில் நாம் கைச்சாத்திட்டுள்ளோம்.

எம்முடைய தனிமனித உணர்வுகளோ அன்றி செயற்பாடுகளோ எதுவித தாக்கத்தையும் ஏற்படுத்தாது. மாறாக கொள்கை வழிப்பயணத்தில் நாம் தொடர்ந்து செல்வோம். எமக்கு பின்பும் இந்த கட்சி நீடித்து நிலைத்து நிற்கும் என்று எதிர்பார்க்கின்றோம். தமிழரசுக் கட்சியினரின் ஆரம்ப கால நேர்வழிப் போக்கும் வெளிப்படைத்தன்மையும் தற்போது அற்றுப் போய்விட்டது. தமிழ் மக்களை ஆளுகின்ற ஏகபோக உரிமையை கொண்டவர்கள் தாங்கள் என்ற மமதையில் தமக்கு வாக்களித்து நாடாளுமன்றத்திற்கு அனுப்பி வைத்த தமது சொந்த உறவுகளையே அவர்கள் உதறித்தள்ளி விட்டுள்ளார்கள். தாம் நினைத்தபடி அரசுக்கு முண்டு கொடுப்பதும் அரசில் இருந்து கிடைக்கப் பெறும் அற்ப சொற்ப சலுகைகளுக்காக தமது கொள்கையிலிருந்து விலகி தம் சார்பான பொருளாதார ரீதியாக வலுப்படுத்துகின்றதுமான ஒரு கூட்டமாக கூட்டமைப்பில் உள்ளவர்கள் இப்பொழுது மாறிவிட்டார்கள்.

அவர்களின் தனிப்பட்ட உதவிகளைப் பெற்றுக் கொள்ளட்டும். மாடி வீடுகள் கட்டட்டும், சொகுசு வாகனங்களில் சுற்றித் திரியட்டும் ஆனால், தமிழர்கள் இந்த நாட்டின் பூர்வீகக் குடிகள் அல்ல என்று மட்டும் கூறாது இருக்கட்டும். அவ்வாறு தான் கூறுகின்றார்கள். கூட்டமைப்பினருக்கு சரித்திர அறிவு இல்லையென்றால் என்னிடம் கேட்கட்டும். நான் அவர்களுக்கு படிப்பித்து கொடுப்பேன். ஆனால் எமது அடையாளங்களையும், வழிபாட்டுத் தலங்களையும் வரலாற்று எச்சங்களையும் அழித்துவிட்டு தமிழர்களின் தாயகம் என்ற பதத்தை நீக்கி விடலாம் என்று பகல் கனவு காண்பவர்களுடன் அவர்கள் கைகோர்த்து பயணிக்காது இருக்கட்டும்.

என் அன்பார்ந்த மக்களே எம்மை மாற்று அணி என அடையாளம் காட்டும் போது நாங்கள் கொள்கை உடையவர்கள், கொள்கையுடன் பயணிப்பவர்கள் என்று தான் அர்த்தம். கூட்டமைப்பினர் கொள்கை வழியில் பயணிக்காது சுயநல வழியை பின்பற்றிப் போய் தமிழ் மக்களின் முதல் அணி என்கின்ற அந்தஸ்தை இழந்தமையினால் தான் நாம்



மாற்று அணி ஆகியுள்ளோம். கொள்கை வழியில் பயணிக்க இன்னும் சில முதிர்ச்சி பெறாத கட்சிகள் இருக்கின்றன. அவை முதிர்ச்சியடையும்போது அவற்றிற்கும் மாற்று அணி என்று மக்கள் கூறக்கூடும். தற்போது அவர்கள் ஒரு மாற்று அணி அல்ல. முதிர்வை நோக்கி பயணிக்கும் முகப்பு நூல் முன்னணியினர்.

எனவேதான் தமிழ் மக்களின் நலன்களில் கூடிய அக்கறை கொண்ட தமிழ் மக்கள் தேசியக்கூட்டணியின் மீன் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு நாம் கேட்கின்றோம். எதிர்வரும் தேர்தலில் மீன் சின்னத்திற்கு உங்களின் வாக்குகளை வழங்குவதன் மூலம் வலுவான ஒரு கட்சியாக நாம் மாற முடியும். மேலும், கூடிய உறுப்பினர் தொகையை கொண்ட ஒரு கட்சியாக நாடாளுமன்றத்திலும் உலக அரங்கிலும் நாம் பரிணமிக்க முடியும் என்று கூறிக்கொள்கின்றேன் என்றார். இதேவேளை, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் மற்றும் சட்டத்தரணி சிறிகாந்தா ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.




## புனித சூசையப்பர் ஆலயத்தில் 31 மாணவர்களுக்கு 'முதல்நன்மை' எனும் அருட்சாதனம் வழங்கல்





(வவுனியா)

வவுனியா, வேப்பங்குளம் தூய சூசையப்பர் ஆலயத்தில் நேற்று முன்தினம் 31மாணவர்களுக்கு 'முதல்நன்மை' எனும் அருட்சாதனம் ஆலய பங்குத்தந்தை எஸ். இராஜநாயகம் தலைமையில் திருப்பலி நிகழ்வில் வழங்கப்பட்டது.

கடந்த ஜனவரி மாதம் ஆரம்பமான மாணவர்களை தயார்ப்படுத்தும் மறைக்கல்வி செயற்பாடுகள் கொரோனா நோய்த் தொற்று காரணமாக பிற்போடப்பட்டு, தற்போது நாடு சுமுகமான நிலைக்குத் திரும்பியதையடுத்து நேற்றுமுன்தினம் திருப்பலியின்போது ஒழுங்குபடுத்தப்பட்ட 31 மாணவர்களுக்கான 'முதல் திருவிருந்து' எனும் அருட்சாதனம் வழங்கப்பட்டது.

இவ்விசேட நிகழ்வில் மறை உரையை அருட்பணி சசி நிகழ்த்தியதுடன், அருட்சகோதரிகள், மறை ஆசிரியர்கள், பங்கு மக்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# நாம் வாக்களித்தவர்கள் இதுவரை சாதித்தது எதுவுமில்லை எண்ணிக்கையை விட நிலைப்பாடுடையவர்களே முக்கியம்!

## தமிழ் மக்கள் பேரவை தெரிவிப்பு

நாம் வாக்களித்து நாடாளுமன்றம் அனுப்பும் பிரதிநிதிகளின் எண்ணிக்கையால் இதுவரைகாலமும் நாம் சாதித்தது எதுவுமில்லை. எதிர்காலத்திலும் இந்த எண்ணிக்கையால் எமக்கு ஆகப்போவது எதுவும் இல்லை.

ஆனால், அங்கு ஒற்றுமையுடனும், உறுதியுடனும் தெரிவிக்கப்படும் எமது நிலைப்பாடுகளும், கருத்துகளும் முக்கியத்துவம் பெறுகின்றன. அதாவது, நாம் எத்தனை பிரதிநிதிகளை அனுப்புகின்றோம் என்பதிலும் பார்க்க என்ன நிலைப்பாடுடையவர்களை அனுப்புகின்றோம் என்பதே முக்கியத்துவமாகின்றது என தெரிவித்துள்ளது தமிழ் மக்கள் பேரவை.

யாருக்கு வாக்களிப்பது என்ற தலைப்பில், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமது நிலைப்பாட்டை தமிழ் மக்கள் பேரவை பகிரங்கப்படுத்தியுள்ளது.

அந்த அறிக்கையில், 70 வருடங்கள் கடந்தும் தொடர்ந்துகொண்டிருக்கும் எமது உரிமைப் போராட்டங்களில் நாம் சுமந்த வலிகளும், இழப்புகளும், வேதனைகளும் வார்த்தைகளால் வடிக்க முடியாதவை என்பதை யாரும் மறுக்க முடியாது. நாம் உயிர்கொடுத்து காத்து வரும் எமது அடிப்படை அபிலாஷைகள் போலிச் சலுகைகளுக்கும், பகட்டுக்கும் விலைபோகக்கூடியவை அல்ல.

நாம் வாக்களித்து நாடாளுமன்றம் அனுப்பும் பிரதிநிதிகளின் எண்ணிக்கையால் இதுவரை காலமும் நாம் சாதித்தது எதுவுமில்லை. எதிர்காலத்திலும் இந்த எண்ணிக்கையால் எமக்கு ஆகப்போவது எதுவும் இல்லை. ஆனால், அங்கு ஒற்றுமையுடனும், உறுதியுடனும் தெரிவிக்கப்படும் எமது நிலைப்பாடுகளும், கருத்துகளும் முக்கியத்துவம் பெறுகின்றன. அதாவது, நாம் எத்தனை பிரதிநிதிகளை அனுப்புகின்றோம் என்பதிலும் பார்க்க என்ன நிலைப்பாடுடையவர்களை அனுப்புகின்றோம் என்பதே முக்கியத்துவமாகின்றது.

கொள்கை ஒன்றான கட்சிகளிடையே கூட கருத்து வேற்றுமைகள் விதைக்கப்பட்டு உரமூட்டி வளர்க்கப்படுகின்றன. ஒரு கட்சிக்குள்ளேகூட ஒற்றுமையற்ற தன்மையும் சுயநலப்போக்கும் வெளிப்படையாகத் தெரிவது வேதனையானது. இந்தப் பிரிவுகள் கண்டு நாம் சோர்ந்துபோய்விட முடியாது. தேர்தல் அரசியல் கடந்து பொதுமக்களாகிய எமது ஒன்றிணைந்த அழுத்தங்கள் ஒற்றுமையான ஒரு தூய அரசியல் பாதைக்கு வித்திடும்.

எமது அபிலாஷைகள் என்ன என்பதை தமிழ் மக்கள் பேரவையினராகிய நாம் தீர்வுத்திட்டமாக எழுத்துருவில் வடித்து வெளியிட்டிருந்தும், அதன் அடிப்படைகளை இதயசுத்தியுடன் வலியுறுத்த திராணி அற்றவர்களை எமது பிரதிநிதிகளாக தெரிவுசெய்யமுடியாது. எமது பிரச்சினைகளை உணர்வுபூர்வமாக உணராதவர்களால் பிரச்சினைகளை நியாயபூர்வமாக அணுகமுடியாது.

நாம் எமது பொது நோக்கங்களை கருத்திற் கொள்ளாது சுயலாபத்திற்காக வாக்களிப்போமாக இருந்தால், நாம் தெரிவுசெய்யும் பிரதிநிதிகளும் சுயநலத்திற்காக இயங்குவதைத் தடுக்கமுடியாது போய்விடுவதுடன், அவர்கள் தெரிவிக்கும் கருத்துகளும் எமது கருத்துகளாக கொள்ளப்படும் அபாயம் இருக்கின்றது.

தமிழ் மக்கள் பேரவை
Tamil People's Council

எமது வாக்குகளை பெற்று நீங்கள் என்ன செய்தீர்கள் என்று கேட்பதற்குப் பதிலாக இனி வாக்களித்தபின் நாம் என்ன செய்யப்போகின்றோம் என்று சிந்திப்போம், செயலில் இறங்குவோம். வாக்களித்து விட்டு உறங்கிக்கொண்டிருக்க முடியாது. எங்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்படும் எமது பிரதிநிதிகளை ஒற்றுமையுடன் நெறிப்படுத்தி வழிப்படுத்தும் பாரிய பொறுப்பு பொதுமக்களாகிய எங்களுக்கு இருக்கிறது.

தற்போது மாற்றம்பெற்றுவரும் சூழ்நிலைகளால் உலக வல்லரசுகளின் நிலைப்பாடுகளில் மாற்றம் ஏற்பட்டுவருகின்றது. அவர்களின் கவனம் எம்மை நோக்கித் திரும்பும் காலம் வெகுதூரத்தில் இல்லை. அவ்வேளையிலே எமது உறுதியான ஒருமித்த நிலைப்பாடுகள் முக்கியத்துவம்பெறும்.

எனவே, எமது அபிலாஷைகளை உள்வாங்கி, புரிந்துணர்வுடன் உணர்வுபூர்வமாகவும் அறிவுபூர்வமாகவும் விடயங்களை அணுகி அதை முன்நகர்த்தக்கூடிய பிரதிநிதிகளை தெரிவுசெய்வது எமது வரலாற்றுக் கடமையாகும்.

எமது வாக்குரிமை பலத்தைக் காட்டவும், விலை போன வாக்குகளை செல்லாக்காசாக்கவும், வாக்களிப்பு வீதத்தினை அதிகரிக்க முழுமுயற்சி எடுப்போம். சரியான பிரதிநிதிகளை தெரிவுசெய்ய தவறாது சென்று வாக்களிப்பதுடன் எமது மூன்று விருப்புவாக்குகளையும் பதிவிடுவோம்.

எமக்காகத் தம்மை அர்ப்பணித்தவர்களின் பெயரால் உண்மையாகவும் ஒற்றுமை உணர்வுடனும் நேர்மையாகவும் தூய அரசியலை முன்னெடுத்து எமது நிலைப்பாடுகளை அஞ்சாது வலியுறுத்தி முன்னேறக்கூடியவர்களை எமது பிரதிநிதிகளாக தெரிவுசெய்வோம். எமக்கு தற்காலிகமாக வழங்கப்படும் சலுகைகளுக்காகவும் இலஞ்சத்திற்காகவும் எமது கடமையிலிருந்து விலகிவிட முடியாது.

தேர்தல் அரசியல் கடந்து எமது அபிலாசைகளுக்காய் ஒன்றுபட்டு உழைக்கும் ஒரு தளத்தை உருவாக்குவோம். அதற்காக ஒன்றிணைவோம்.

# பொதுச் சுகாதார பரிசோதகர்களின் அதிகாரத்தில் அரசியல் தலையீடு நாட்டை பேராபத்தில் தள்ளிவிடும்

## முன்னாள் மாகாண அமைச்சர் மருத்துவர் ப. சத்தியலிங்கம்



(வவுனியா)

இந்த நாட்டின் சுகாதாரத்துறை இதுவரையில் பலம்மிக்கதாகவே இருந்துவந்துள்ளது காரணம், அந்தத் துறையில் அரசியல் தலையீடுகள் இருந்திருக்கவில்லை. துறைசார்ந்த நிபுணர்களின் பங்களிப்புடனேயே இதுவரையில் சுகாதாரத்துறை சார்ந்த முடிவுகள் எடுக்கப்பட்டன. ஆனாலும் கொவிட்-19 நோய்க்கட்டுப்பாடு தொடர்பாக அரசாங்கத்தின் அண்மைக்கால தலையீடுகள் இலங்கையின் சுதந்திர சுகாதார சேவைகளை ஆபத்தான கட்டத்திற்குள் இட்டுச் செல்லப்போகின்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளது – என முன்னாள் வடக்கு மாகாண சுகாதார அமைச்சரும் வன்னி தேர்தல் தொகுதி நாடாளுமன்றத் தேர்தல் வேட்பாளருமாகிய மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

அவர் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தென்னாசிய நாடுகளில் இலங்கையின் சுகாதார சேவை தரம்மிக்கதாகவும் சுதந்திரமானதாகவும் இருந்துவந்துள்ளது. இதற்குக் காரணம், நாட்டில் எவ்வாறான ஆட்சிமாற்றங்கள் ஏற்பட்டாலும் சுகாதார சேவையை அவை பாதிப்பதில்லை. எனினும், கொவிட்-19 தொற்றுநோய் தொடர்பாக அண்மையில் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் பொதுச் சுகாதாரத்துறையின் முதுகெலும்பாக விளங்கும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் அதிகாரம் பற்றி தெளிவாக வரையறுக்கப்பட்டிருக்கவில்லை.

முன்னாள் மாகாண சுகாதார அமைச்சர் என்பதற்கப்பால் ஒரு மருத்துவராக - குறிப்பாக, நீண்டகாலமாக மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரியாக - பிராந்திய தொற்றுநோயியலாளராக கடமையாற்றிய எனக்கு தொற்றுநோய்க்கட்டுப்பாட்டுப் பணிகளில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் காத்திரமான பங்களிப்பு அதன் முக்கியத்துவம் பற்றி தெளிவான நிலைப்பாடு உள்ளது. கடந்த காலங்களில் வடக்கு மாகாணத்தில் ஏற்பட்ட சமுதாய தொற்று நோய்களின் தாக்கங்களின்போது பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் பங்களிப்பு அளப்பரியதாகும். குறிப்பாக, வவுனியா மாவட்டத்தில் டெங்கு ஆட்கொல்லி நோய்த்தாக்கம் ஏற்பட்டபோதும் சரி, வன்னியிலிருந்து இலட்சக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து அகதிமுகாம்களில் தங்கவைக்கப்பட்டபோதும் சரி அங்கு தொற்று நோய்கள் ஏற்படாதவண்ணம் சுகாதாரத் திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டங்களில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் அர்ப்பணிப்பான சேவை அளப்பரியதாகும்.

இலங்கையின் சுதந்திரத்துக்கு முற்பட்ட காலத்தில் பிரிட்டிஷ் ஆட்சியின்போதே பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சேவை இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாறான தொன்மையான சேவையை கவனத்திற்கொள்ளாது அவர்களுக்கான அதிகாரங்களைக் குறைப்பதானது இலங்கையின் சுதந்திர சுகாதார சேவையில் விழுந்த பாரிய அடியாகவே பார்க்கவேண்டியுள்ளது

அத்துடன், தற்போது வேகமாக பரவிவரும் கொவிட்-19 நோயின் தாக்கத்திலிருந்து மக்களை பாதுகாக்கவும் சமுதாய தொற்றாக இந்த நோய் பரவாமல் தடுக்கவும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் கோரிக்கையை இந்த அரசாங்கம் செவிசாய்த்து அவர்கள் தொடர்ந்தும் சுதந்திரமாக சுகாதார சேவையை முன்னெடுக்க அதிகாரத்தை வரையறுக்க வேண்டும் என்றுள்ளது.

# தொல்பொருள் அடிப்படையிலான நியாயப்படுத்தல்களை தவறாக பயன்படுத்துவது பரிச்சயமான ஒரு போக்காக அமைந்துள்ளது

## - பார்ள் நிறுவனம் அறிக்கை

மக்களை வெளியேற்றி சகல சமுதாயங்களையும் பாதிக்கும் காணியற்ற நிலைமையை உருவாக்குவதற்கு தொல்பொருள் அடிப்படையிலான நியாயப்படுத்தல்களை தவறாகப் பயன்படுத்துவது இலங்கையில் ஒரு பரிச்சயமான போக்காகக் காணப்படுவதாக காணி உரிமைக்கான மக்கள் கூட்டமைப்பு பார்ள் தெரிவித்துள்ளது.

கிழக்கு மாகாணத்தில் தொல்பொருள் மரபுரிமை முகாமைத்துவத்துக்கான ஜனாதிபதி செயலணி குறித்து மேற்படி காணி உரிமைக்கான மக்கள் கூட்டமைப்பினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இந்த கிழக்கு மாகாண செயலணியை உருவாக்கியமை நிறைவேற்று அதிகாரத்தை சட்ட உரிமையின்றிப் பயன்படுத்தியமையாகும் என்பதுடன், இது ஜனநாயக நிறுவனங்களைப் புறக்கணிக்கின்ற செயலுமாகும்.

அரச நிறுவனங்கள் எதிர்நோக்கும் குறைபாடுகள் அல்லது சவால்கள் பொது நிறுவனங்களுக்கு இயலுமான நிலைமைகளை உருவாக்குவதன் மூலம் தீர்க்கப்படவேண்டுமேயன்றி அவற்றை தேவைக்கு மேற்பட்டதாக ஆக்குவதால் தீர்க்கப்படலாகாது.

தொல்பொருள் அடிப்படையிலான நியாயப்படுத்தல்களை தவறாகப் பயன்படுத்துவது இலங்கையில் ஒரு பரிச்சயமான போக்காகக் காணப்படும் பல சந்தர்ப்பங்களை ஆவணப்படுத்தியுள்ளது.

காணி ஆளுகை நிர்வாகம் நியாயமானதாகவும் நீதியானதாகவும் இருக்க வேண்டும். நமது நிறுவனத்தினால் நாடு முழுவதும் நடத்தப்பட்ட பரந்த கலந்தாலோசிப்பைத் தொடர்ந்து வெளியிடப்பட்ட மக்களின் காணி, பொலிஸ் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை நினைவுபடுத்துகின்றது.

**பரிந்துரை**

சிறுபான்மைச் சமுதாயங்கள் வரலாற்று ரீதியாகப் பயன்படுத்திவரும் காணிகளிலிருந்து அவர்கள் பிரிக்கப்படலாகாது.

சிறுபான்மையினரை இடம்பெயர்ப்பதற்காக காட்டுயிர்களைப் பாதுகாத்தல் என்றும் வனப்போர்வையைப் பாதுகாத்தல் என்றும் போலியான தொல்லியல் சான்றுகளைக் காட்டுவது நிறுத்தப்படவேண்டும்.

இனத்துவ சமயப் பன்மைவாதத்தை நிலைகுலையச் செய்கின்ற காணி மீதான தனியுரிமைக் கோரிக்கைகளை வலுப்படுத்துவதற்காக தொல்லியலும் வரலாறும் துஷ்பிரயோகம் செய்யப்படுவதை நிறுத்த அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

செயலணி பொது நிதியை வீணடித்து, செய்த வேலையையே மீண்டும் செய்வித்து, இலங்கையின் தொல்பொருள் அபிவிருத்தியினுள் அரசியல் பக்கச்சார்பை ஏற்படுத்துகின்றது.

தொல்பொருள் போன்ற விடயங்களை இராணுவமயமாக்குவதானது இப்பரப்பில் இயங்கிவரும் அரச நிறுவனங்களின் தகைமையைக் கீழறுக்குகின்றது.

செயலணியில் பெண்களின் பிரதிநிதித்துவமோ அல்லது இனத்துவ சமயச் சிறுபான்மையினரின் பிரதிநிதித்துவமோ இல்லை.

செயலணியின் உறுப்பாண்மையை நோக்குகையில், சிறுபான்மையினரின் நலன்களைக் காவுகொடுத்து சிங்கள பௌத்த நலன்களை முன்னுரிமைப்படுத்துகின்றமையையே அது சுட்டிநிற்கின்றது.

# தவிசாளரின் முயற்சியில் வாழைச்சேனை வைத்தியசாலைக்கு நீர்த்தாங்கி அன்பளிப்பு



வாழைச்சேனை ஆதார வைத்தியசாலை அத்தியட்சகரின் வேண்டுகோளின் பேரில் கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் யூ.எல்.அஹமட் லெப்பையின் உடனடி முயற்சியினால் மிகவும் அவசியத் தேவையாகக் காணப்பட்ட குடிநீர்த்தாங்கி வழங்கப்பட்டது. புதிதாகப் பொறுப்பேற்ற தவிசாளர் யூ.எல்.அஹமட் லெப்பை வாழைச்சேனை ஆதார வைத்தியசாலைக்கு கள விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

இதன்போது அங்கு நிலவும் குறைபாடுகள் தொடர்பில் கேட்டறிந்துகொண்டதுடன், தன்னால் முடிந்தவைகளை விரைவாகச் செய்து தருவதாகவும் குறிப்பிட்டிருந்தார். குறித்த விஜயத்தின்போது, வைத்தியசாலை அத்தியட்சகர் மிகவும் அவசியத் தேவையாகவுள்ள குடிநீர்த்தாங்கியொன்றைப் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்தார்.

நீர்த்தாங்கியின் அவசியத்தை உணர்ந்த தவிசாளர் முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநரும் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளருமான கலாநிதி ஹிஸ்புல்லாஹ்வின் கவனத்திற்குக் கொண்டுசென்றதையடுத்து, அவரது உதவிமூலம் சுமார் ஆயிரம் லீற்றர் நீர் கொள்ளளவுள்ள நீர்த்தாங்கி நேற்று அன்பளிப்புச் செய்யப்பட்டது.

உடனடியாகச் செயற்பட்ட தவிசாளருக்கும் உதவியை வழங்கிய முன்னாள் ஆளுநருக்கும் வைத்தியசாலை அத்தியட்சகர் நன்றி தெரிவித்தார்.




# திசைமாறிச்செல்லும் நமது இளைஞர்களை நல்வழிப்படுத்தவேண்டிய தேவை உள்ளது

## மருதமுனையில் தேசிய காங்கிரஸ் தலைவர் அதாஉல்லா




(மருதமுனை)

இந்த நாட்டில் அனைத்து மக்களும் எவ்வாறு வாழவேண்டும் என்கின்ற நல்ல எண்ணங்களையும, சிந்தனைகளையும் அனுபவரீதியாக உணர்ந்தவர்கள் இந்த மருதமுனை மக்கள். இவர்கள் தங்களுக்கான ஓர் உள்ளூராட்சி சபையை உணர்ந்த மக்களாக இருக்கின்றார்கள் - என தேசிய காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஏ.எல்.எம்.அதாஉல்லா தெரிவித்தார்.

தேசிய காங்கிரஸ் கட்சியில் போட்டியிடும் மருதமுனை வேட்பாளர் சட்டத்தரணி ஏ.எல்.எம்.றிபாஸை ஆதரித்து மருதமுனையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எம்.எல்ஜுனைட் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் தேசிய காங்கிரஸ் வேட்பாளர்கள் பலர் கலந்துகொண்டனர். இங்கு ஏ.எல்.எம்.அதாஉல்லா மேலும் உரையாற்றுகையில் தெரிவித்தாவது;

ஒருகாலத்தில் தங்களுக்கான உள்ளூராட்சியொன்றை வைத்துக்கொண்டு கரைவாகு வடக்கு என்று ஒரு பெயரிட்டு மசூர்மௌலான போன்றோரை மூத்த தலைவராக ஏற்றுக்கொண்டு தலைமைத்துவம் வகுத்த ஊர் இந்த மருதமுனை.

இம்மக்கள் அன்று புரிந்துகொள்ளாமல் இருக்கவில்லை. நமது தலைமை மர்ஹூம் அஷ்ரப் உருவாக்கிய கட்சி. அந்தக் கட்சியை வைத்தே நம்மை திசைமாற்றிப் போனதால் நாம் எல்லோரும் பெட்டி கழன்ற கோச்சிகளாக இருந்தோம்.வேறு ஒரு பிரச்சினையும் இருக்கவில்லை.

எழும்புவதாக இருந்தால் மருதமுனையினூடாக எழும்பவேண்டும். இந்த மாவட்டத்தினுடைய அரசியல் தலைமைகள் தொடர்பில் - கிழக்கு மாகாணம் தொடர்பில் - இலங்கையில் வாழ்கின்ற முஸ்லிம்கள் தொடர்பில் சிங்கள மக்கள் தொடர்பில் மருதமுனை மக்கள் ஆழ்ந்த அனுபவம் உள்ளவர்கள்.

சுனாமியால் நமது பிராந்தியம் பாதிக்கப்பட்டபோது மனிதநேயத்தைக் கண்டு தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள் என்பதற்கப்பால் தமிழர்களும், முஸ்லிம்களும் தமிழர்களை முஸ்லிம்களும், முஸ்லிம்களைத் தமிழர்களும் இரண்டுபேரையும் கிறிஸ்தவர்களை குரவர்களை ஒன்றாக இணைத்து பெருமை சேர்த்த மண் எமது பிராந்தியம்.

இருபது ஆண்டுகளுக்குப் பின் எமது பிரார்த்தனை பலித்திருக்கிறது. இந்த வரலாற்று விழாவுக்கு எனது உடன் பிறப்புகள் திரண்டிருக்கிறார்கள். நமது மக்களை வழிநடத்துவதற்கு உண்மையான நல்ல தலைமைத்துவம் வேண்டும். இளைஞர்களை நல்ல அரசியல் பக்குவம் உள்ளவர்களாக உருவாக்கவேண்டும், எதிர்கால அரசியல் ஆழமானதாக அமையவேண்டும்.

மர்ஹூம் அஷ்ரப் மரணித்து இருபது வருடங்கள் கடந்தும் நமது பிள்ளைகள் தலைமைத்துவப் பயிற்சிகளைப் பெறவில்லை. மாறாக, காதுகளிலே தேவையற்ற விழக்கூடாத துவேஷங்கள் பரப்பப்பட்டு நாம் கசந்துபோயிருக்கிறோம்; கண்களை விழிக்க முடியாமல் இருக்கிறோம். முஸ்லிம்கள் பயங்கரவாதிகள் என்று முத்திரை குத்தப்பட்டிருக்கின்றோம்.

வரலாற்றில் இருக்கக்கூடாத பதிவு அது. இலங்கை வரலாற்றில் முஸ்லிம்களுக்கு இருக்கின்ற கௌரவமான வரலாறுகளும், வழித்தோன்றல்களும் அழிக்கப்பட்டு இந்த நூற்றண்டிலே முஸ்லிம்கள் பயங்கரவாதிகள் என்று நம்மவர்களைக் கொண்டுசெல்லக்கூடியவாறு நம்மவர்களை அரசியல்ரீதியாக இலாபங்களுக்காக நீண்டகாலம் ஏமாற்றினார்கள்.

ஆகவே, எதிர்காலம் இந்த நாடு எப்படி இருக்கப்போகின்றது என்பதை எங்களால் பார்க்கமுடியாததாக இருக்கும். எனவே, எதிர்காலத்தில் எமது தலைமைகள் புடம்போடப்பட வேண்டும். இளைஞர்கள் புடம்போடப்படவேண்டும் என்பதற்காக நான் இங்கு வந்தேன் -என்றார்.

# என்னையே அதிகமானோர் விமர்சிக்கின்றனர் அதுவே எனது வெற்றியை உறுதிசெய்கின்றது

## -தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர் சாணக்கியன்

( செங்கலடி )

என்னை முழுமையாக நம்பி வாக்களியுங்கள், என் இறுதி மூச்சு உள்ளவரை இலங்கைத் தமிழரசுக் கட்சியிலேயே பயணிப்பேன் எனத் தெரிவித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடும் இராசமாணிக்கம் சாணக்கியன், கடைசித் தமிழன் இந்த நாட்டில் வாழும்வரை இந்த நாடு தமிழனுக்கு சொந்தமானது என்பேன், இது சிங்கள - பௌத்த நாடு என்பதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டேன் என்றும் கூறினார்.

எனது கரங்கள் சுத்தமானவை, இரத்தக் கறை படிந்த கரங்கள் உள்ளவர்கள் என்னை விமர்சிக்கக்கூடாது. சுத்தமான இரத்தக்கறை படியாத கரங்கள் உள்ளவர்கள் என்னை விமர்சியுங்கள் சரியானதாக இருந்தால் அதனை நான் ஏற்றுக்கொள்வேன் என்றும் அவர் கூறினார்.

மட்டக்களப்பிலுள்ள தனியார் விடுதியொன்றில் கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து தெரிவிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு கருத்து தெரிவிக்கையில்,

குறுகிய அரசியல் இலாபத்திற்காக என்னை விமர்சித்து இணையதளங்களிலும் சமூக ஊடகங்களிலும் பிரசாரம் செய்கிறார்கள். என்னுடைய தாயின் பெயர் குமாரி தேவிகா. அவருடைய தந்தை பழனியப்பாபிள்ளை பாலகிருஸ்ணன். அவர் யாழ்ப்பாணம் மானிப்பாயைச் சேர்ந்தவர். எனது அம்மாவின் அம்மா போலின் டயஸ். அவர் போர்த்துக்கேயர். என்னுடைய நிறத்துக்குக் காரணம் அவர்தான். இந்த நாட்டின் சட்டத்தின்படி எனது தாய் இலங்கைத் தமிழர்.

அரசியலுக்காக தேர்தலில் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக ஒருவருடைய பிறப்பைப் பற்றி கேவலமாக பேசுவது கேவலமான செயலாகும். தேர்தலில் வெற்றிபெற வேண்டுமென்றால் நீங்கள் செயற்படுத்தவுள்ள திட்டங்களை




மக்களிடம் கூறி வாக்குகளைப் பெற்றுக்கொள்ளுங்கள். என்னைப்பற்றி ஒரு பொய் கூறும்போது உங்களைப்பற்றி பல உண்மைகள் வெளிவரும். கண்ணாடி வீட்டுக்குள் இருந்து யாரும் கல்லெறிய வேண்டாம்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி இளைஞனொருவனுக்கு தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் வழங்கியது தவறா? தமிழரசுக் கட்சியின் சார்பில் இளைஞன் நாடாளுமன்றம் செல்லக் கூடாதா? எனது கரங்கள் சுத்தமானவை. இரத்தக்கறை படிந்த கரங்களல்ல. எனது செயற்பாடுகள் சரியாக இருந்தால் மக்கள் என்னை ஏற்றுக்கொள்வார்கள்.

எமது இனத்தின் உரிமைக்காக என்றுமே குரலெழுப்புவேன். என்னை முழுமையாக நம்புங்கள் என் இறுதி மூச்சுவரை இலங்கைத் தமிழரசுக் கட்சியிலே பயணிப்பேன். கடைசித் தமிழன் இந்த நாட்டில் வாழும்வரை இந்த நாடு தமிழனுக்குச் சொந்தமானது. இது சிங்கள - பௌத்த நாடு என எனது கட்சியும் ஏற்றுக்கொள்ளாது, நானும் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டேன்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 304 வேட்பாளர்கள் போட்டியிட்டாலும் அதிகமான மேடைகளில் என்னைத்தான் விமர்சனம் செய்கிறார்கள். இதனை அவதானிக்கும்போது என்னுடைய வெற்றி உறுதிசெய்யப்பட்டுள்ளது.

நடைபெறவுள்ள தேர்தலில் தமிழ் மக்கள் அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் இந்த அரசாங்கத்தின் செயற்றிட்டத்தை எதிர்க்கின்ற வாக்குகளாகவே அமைய வேண்டும். தமிழ் மக்களின் உரிமையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் மாத்திரமே பெற்றுக்கொடுக்க முடியும். 2015இல் நடைபெற்ற தேர்தலில் 6,000 – 7,000 வாக்குகளினால் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை இழந்தோம். இம்முறை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் நான்கு உறுப்பினர்கள் நாடாளுமன்றம் செல்ல வாக்களியுங்கள்" என்றார்.

## பொத்துவில் பிரதேசத்தில்

# மக்களுக்கான குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் திறந்துவைப்பு



( திருக்கோவில் )

ஜனாதிபதி செயலகத்தின் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வரும் சிறுநீரக நோய்த் தடுப்பு செயலணியின் திட்டத்தின் கீழ் பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவில் இலங்கை கடற்படையினரினால் குடிநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மூன்று நிர்மாணிக்கப்பட்டு மக்களின் பாவனைக்காக கையளிக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வுகள் கடற்படையினரின் ஏற்பாட்டில் பொத்துவில் பிரதேசத்தில் இடம்பெற்று இருந்தன.

இச்சுத்திகரிப்பு நிலையங்களை நிர்மாணிப்பதற்கான நிதி ஜனாதிபதி செயலணிக் குழுவின் ஊடாக குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் ஒன்றிற்காக 13 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், இந்த மூன்று குடிநீர் சுத்திகரிப்புக் கட்டடங்களும் கடற்படையினரின் பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்டிருந்தன.

இத்திட்டத்தின் ஊடாக பொத்துவில் சர்வோதயபுரம் அல்மினா பாடசாலை, பொத்துவில் முகுதுமகா விகாரை மற்றும் கோமாரி செல்வபுரம் ஆகிய மூன்று இடங்களில் ஞாயிறன்று திறந்து வைக்கப்பட்டன .

இந்நிகழ்வுகளில் கிழக்குப் பிராந்திய கடற்படை கட்டளைத் தளபதி , பொத்துவில் பிரதேச செயலாளர் ஆர்.திரவியராஜ், கடற்படையின் அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொது மக்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

# கடத்தப்பட்ட இளைஞன் படுகாயங்களுடன் கண்டுபிடிப்பு

## ஏறாவூரில் சம்பவம்

(செங்கலடி)

முகத்தை பசளைப் பையைக் கொண்டு மறைத்து முச்சக்கரவண்டிவில் இளைஞனொருவரை கடத்திச் சென்று தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் பற்றி ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டுள்ளது.

தாக்குதலில் படுகாயமடைந்த இளைஞன் மீட்கப்பட்ட நிலையில், மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்ப்பித்துள்ளதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

ஏறாவூர் மீராகேணி ஸம்ஸம் கிராமத்தில் வசிக்கும் முஹம்மது சலீம் முஹம்மது அஸீம் (வயது - 24) என்ற இளைஞனே தாக்குதலுக்குள்ளாகி படுகாயமடைள்ளார்.

ஏறாவூர் பொலிஸ் பிரிவு மீராகேணியில் இடம்பெற்றுள்ள இச்சம்பவம்பற்றி தாக்கப்பட்ட இளைஞனின் தந்தை வெள்ளத்தம்பி முஹம்மது சலீம் (வயது - 51) விபரிக்கையில்,

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 9 மணியளவில் மோட்டார் சைக்கிளில் சென்ற எனது மகன் இரவாகியும் வீடு திரும்பாதது கண்டு சனிக்கிழமை அதிகாலை 2 மணிக்கு ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தேன். பின்னர் எனது மகன் சனிக்கிழமை அதிகாலை படுகாயங்களுடன் மீட்கப்பட்டார்.

மீட்கப்பட்டவர் பொலிஸில் தெரிவித்த வாக்குமூலத்தின்படி தான் மீராகேணி ஆர்.டி.எஸ் வீதியூடாக வெள்ளிக்கிழமை இரவு 9 மணியளவில் மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது இனந்தெரியாத நபர்கள் முச்சக்கரவண்டியொன்றில் வந்து உடனடியாக தனது முகத்தில் பசளைப் பையைப் போட்டு மறைத்து தன்னை மறைவான ஓர் இடத்திற்கு முச்சக்கர வண்டியில் கடத்திச்சென்று தாக்கியதாகத் தெரிவித்துள்ளார்.

கடத்தியவர்களை தன்னால் அடையாளம் காணமுடியாதுள்ள போதிலும் தன்னைத் தாக்கிய அரசியல் கட்சியொன்றைச் சேர்ந்தவர்களின் பெயர் விவரம் தனக்கு நன்கு தெரியும் என்றும் வாக்குமூலமளித்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து வெளியில் தெரியப்படுத்தினால் உனது குடும்பமே அழிக்கப்படும் என்று தன்னைத் தாக்கியவர்கள் எச்சரித்ததாகவும் அஸீம் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

# காணாமலாக்கப்பட்ட உறவுகளை நாம் தேடிக்கொண்டிருக்கின்றோம் அரசாங்கமோ விகாரைகள் அமைக்க இடம் தேடுகிறது

## தமிழரசுக் கட்சி திருமலை வேட்பாளர் ஜீவரூபன்

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் யுத்தம் மௌனிக்கப்பட்டபோது தமிழ் இளைஞர்களின் வாழ்வும் பாதுகாப்பும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிடமே சுமத்தப்பட்டது. நாங்கள் உறவுகளைத் தேடிக்கொண்டிருக்கிறோம்.

இவ்வாறு இலங்கை தமிழரசுக் கட்சி திருகோணமலை வேட்பாளர் க.ஜீவரூபன் தெரிவித்தார். இலங்கை தமிழரசுக் கட்சி திருகோணமலை இளைஞர் அணியினர் ஏற்பாடு செய்த பரப்புரைக் கூட்டம் கடந்த சனிக்கிழமை மாலை இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இளைஞர் அணி தலைவர் சி.தர்சன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் ஏனைய வேட்பாளர்களும் கலந்துகொண்டனர். வேட்பாளர் க.ஜீவரூபன் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

யுத்தத்தில் காணாமலாக்கப்பட்ட உறவுகளை நாம் தேடிக்கொண்டிருக்கிறோம். ஆனால், அரசாங்கம் திருகோணமலை மாவட்டத்தில் இல்லாத 70 பௌத்த விகாரைகளை அமைக்க இடம் தேடிக்கொண்டிருக்கிறது. தமிழ்த் தேசியத்தை விட்டு நாம் வெளியே போகப்போகிறோம். வழி மாறிச் செல்லும் இளைஞர்கள் தடம் மாறிச் செல்லாமல் வழிகாட்டவேண்டிய பாரிய பணி எம்மைச் சார்ந்தது. வேலைச்சந்தையில் தரமான கல்வியோடு தகைமைகளோடு நாம் செல்ல வேண்டும். அதற்காக இளைஞர்கள் உங்களை வளப்படுத்த வேண்டும். அரச நியமனங்களை மாத்திரம் நாம் நம்பியிருக்கக் கூடாது.

வருமானத்தைப் பெற்றுத் தரும் பல தொழில்கள் இருக்கின்றன. நாம் சுயதொழில்களில் ஈடுபட வேண்டும். வடக்கு, கிழக்கு மாகாண தமிழ் இளைஞர்களை குறிவைத்து போதைப்பொருட்கள் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. இது விடயத்தில் நாம் கவனமாக இருக்கவேண்டும். இளம் சந்ததியினரை பாதுகாத்தேயாகவேண்டும். போதைப்பொருள் விடயத்தை நாம் மிகக் கவனமாக கையாளவேண்டும் என்றார்.

மற்றொரு இளம் வேட்பாளரான ப.நித்தியானந்தம், 37 வருடங்களுக்கு முன்னால் இதே நாளில் எமது தமிழ்த் தலைவர்கள் உட்பட 53 பேர் வெலிக்கடை சிறையில் படுகொலை செய்யப்பட்டார்கள். இச்சம்பவம் எம்மனதை தொடர்ந்து நெருடிக்கொண்டிருக்கிறது. இந்நிலையில், என்னால் தேர்தல் பிரசார உரையாற்ற முடியாதுள்ளது எனக்கூறி அமர்ந்தார்.

அச்சிடல் முறைமை மற்றும் விநியோக முறைமை முற்றிலும் சுகாதார தன்மைமிக்கது. 'தமிழன்' பத்திரிகை உங்கள் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியே தினமும் உங்களை வந்தடைகிறது.



# கல்முனையை கலவர பூமியாக மாற்றும் செயற்பாடுகளில் கருணா ஈடுபடுகிறார்

## மருதமுனை கூட்டத்தில் ஹாரீஸ் குற்றச்சாட்டு

( சாய்ந்தமருது)

கல்முனையை கலவர பூமியாக மாற்றும் செயற்பாடுகளில் கருணா ஈடுபட்டு வருகின்றார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் திகாமடுல்ல மாவட்ட வேட்பாளரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹாரீஸ் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் திகாமடுல்ல மாவட்ட வேட்பாளர்களை ஆதரித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மருதமுனை மத்திய குழு ஏற்பாடு செய்திருந்த தேர்தல் பிரசார பொதுக் கூட்டம் மருதமுனை கடற்கரை வெளியரங்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

கருணா அம்மான் எமது கல்முனை மண்ணுக்கு வந்து நின்றுகொண்டு முஸ்லிம்களை மிகவும் கீழ்த்தரமாக விமர்சித்துவருகின்றார். முஸ்லிம்கள் வந்தேறு குடிகள் எனவும் சிங்கப்பூரிலிருந்து வந்தவர்கள் எனவும் குறிப்பிடும் அவர், கல்முனை மண்ணில் முஸ்லிம்களுக்கு எந்த உரிமையும் கிடையாது



எனவும் சூளுரைக்கின்றார்.

கடைசியில் இப்போது முஸ்லிம்கள் ஜப்பான் குஞ்சு போன்று குழந்தைகள் பெத்துத் தள்ளுவதாக அவர் கூறியுள்ளார். இதன் மூலம் தமிழ் மக்களை மாத்திரமல்ல, பௌத்த பிக்குகளையும் முஸ்லிம்களுக்கெதிராக தூண்டி விடுவதற்கு கருணா முயற்சிக்கின்றார் என்றே கருதவேண்டியுள்ளது. அவ்வாறென்றால் இந்நாட்டு முஸ்லிம்கள் பிள்ளை பெறுவதற்கும் சுதந்திரம் இல்லையா? என்று கேட்க விரும்புகின்றேன்.

கல்முனையில் இயங்கும் தமிழ் இளைஞர் சேனாவின் அனுசரணையில் இங்கு வந்து தேர்தலில் குதித்துள்ள கருணா, தமிழ் மக்களும் முஸ்லிம்களும் ஒற்றுமையாகவும் நிம்மதியாகவும் வாழ்கின்ற இந்த கல்முனை மண்ணை கலவர பூமியாக மாற்றுவதற்கே முனைப்புக் காட்டி வருகின்றார். கல்முனை முஸ்லிம்களின் பொருளாதாரம், கல்வி, சமூகக் கட்டமைப்பு என்று எல்லாவற்றையும் சிதைத்து, சீரழிக்கும் திட்டத்துனேயே அவர் இங்கு களமிறங்கியுள்ளார் - என்றார்.

இக்கூட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் திகாமடுல்ல மாவட்ட வேட்பாளர்களான முன்னாள் இராஜாங்க அமைச்சர் பைசால் காசிம், முன்னாள் எம்.பி.க்களான எம்.ஐ.எம்.மன்சூர், ஏ.எல்.எம்.நஸீர், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் ஏ.எல்.தவம் மற்றும் அப்துல் வாசித் ஆகியோருடன் கட்சியின் தவிசாளர் அப்துல் மஜீத், கல்முனை மாநகர பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர், மாநகர சபை உறுப்பினர்களான ஏ.ஆர்.எம்.அமீர், எம்.எஸ்.உமர் அலி, எம்.எஸ்.எம்.ஹாரிஸ் (நவாஸ்), மு.கா. பிரதிப் பொருளாளர் ஏ.சி.எஹியாகான் உள்ளிட்டோரும் உரையாற்றினர்.

# பிரதேச சபை உறுப்பினர் அமீர் அலியுடன் இணைவு

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபை உறுப்பினர் ஐ.எல்.பதுர்தீன் முன்னாள் இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற வேட்பாளருமான எம்.எஸ்.எஸ்.அமீர் அலியுடன் இணைந்துகொண்டார்.

வாழைச்சேனை - செம்மண்ணோடை பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் வைத்தே பிரதேச சபை உறுப்பினர் அமீர் அலிக்கு ஆதரவு தெரிவித்து இணைந்து கொண்டார். இவர், கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சார்பாக சுயேட்சைக் குழுவில் மீராவோடை மேற்கு வட்டாரத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது .



# கல்முனைக்கென சமூக தகவல் நிலையம் ஆரம்பிப்பு

கல்முனை பிரதேசத்திற்கான சமூக தகவல் நிலையமொன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது .

முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி செயல் முன்னணியின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்ட சர்வமத சமய சம்மேளனத்தினால் இந்நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சர்வமத சமய சம்மேளனத்தின் ஊடக சந்திப்பொன்று நேற்று முன்தினம் அம்பாறை மாவட்டம் மருதமுனை பகுதியில் இடம்பெற்றது

இந்நிகழ்வில் பெண்களுக்கான வன்முறை தொடர்பில் முஸ்லிம் பெண்கள் ஆராய்ச்சி



செயல் முன்னணியின் மருதமுனை நிலைய முகாமையாளர் கே.நிஷாந்தினி, சமகால பிரச்சினை தொடர்பில் முன்னணியின் இணைப்பாளர் யு.எல்.ஹபீலா, சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் கல்முனை அஸ்-ஸுஹாறா வித்தியாலய அதிபர் எம்.எச்.எஸ்.ஆர்.மஜீதியா, தகவல் சட்டமூல அறிவாக்கம் பற்றி விரிவுரையாளர் அன்ஸார் மௌலானா, அனர்த்த விழிப்புணர்வு தொடர்பில் ஓய்வுநிலை அதிபர் சந்திரலிங்கம், எதிர்கால செயற்பாடுகள் குறித்து இஸ்லாமாபாத் அதிபர் ஏ.ஜீ.எம்.றிஸாத் ஆகியோரும் அறிக்கை சமர்ப்பித்து உரையாற்றினர்.

# பிள்ளையான் மீதான வழக்கு ஒக்டோபர் வரை ஒத்திவைப்பு

(செங்கலடி)

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தனை 19.10.2020 திகதிவரை மீண்டும் விளக்க மறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட மேல் நீதிமன்ற நீதிமன்ற நீதிபதி என்.சிறீநிதி உத்தரவிட்டார்.



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் 25.12.2005 அன்று மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் நடைபெற்ற நத்தார் பிறப்பு நள்ளிரவு ஆராதனையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

இச்சம்பவம் தொடர்பில் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்), தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் முன்னாள் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மாகாண சபை உறுப்பினருமான பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஸ்ணானந்தராஜா, கஜன் மாமா எனப்படும் ரெங்கசாமி கனகநாயகம், இராணுவ புலனாய்வு உத்தியோகத்தர் மீராலெப்பை கலீல், முன்னாள் இராணுவ சிப்பாயான மதுசிங்ஹ (வினோத்) ஆகியோர் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இச்சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணை நேற்று திங்கட்கிழமை மட்டக்களப்பு மாவட்ட மேல் நீதிமன்ற நீதிமன்ற நீதிபதி என்.சிறீநிதி முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இவ்வழக்கை எதிர்வரும் ஒக்டோபர் 19 ஆம் திகதி வரை ஒத்திவைப்பதாக நீதிபதி உத்தரவிட்டார்.




# திருமலை ரோட்டரி கழக புதிய தலைவர் பதவியேற்பு

திருகோணமலை ரோட்டரி கழகத்தின் புதிய தலைவர் பதவியேற்பு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை டைக் வீதியிலுள்ள ரோட்டரி இல்லத்தில் நடைபெற்றது. இதன்படி திருகோணமலை ரோட்டரி கழகத்தின் 42ஆவது புதிய தலைவராக சுரேஷ் சுப்ரமணியம் பதவியேற்றுக்கொண்டார்.

2019 - 2020 ஆம் வருடத்திற்கான தலைவர் உதயராஜன் தனது கடமை பொறுப்புகளை புதிய தலைவர் சுரேஷ் சுப்பிரமணியத்திடம் வைபவ ரீதியாக கையளித்தார். இந்த நிகழ்வில் இலங்கை மத்திய வங்கியின் கிழக்கு பிராந்திய முகாமையாளர் பிரபாகரன் மற்றும் இலங்கை வங்கியின் கிழக்கு மாகாண உதவி பொது முகாமையாளர் திருமதி குமுதினி ஜோகரட்னம் ஆகியோர் புதிய அங்கத்தவர்களாக இணைத்துக் கொள்ளப்பட்டனர்.

இலங்கை நிதியியல் ஆணைக்குழுவின் பணிப்பாளர் பி.மகேந்திரராஜா இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார் மட்டக்களப்பு ரோட்டரி உதவி ஆணையாளர் பி.பார்த்திபன் கௌரவ அதிதியாக கலந்துகொண்டார். 41ஆவது தலைவராக இருந்த இருதயராஜன் தனது சேவைக் காலத்தில் தன்னால் ஆற்றப்பட்ட பணிகளுக்கு ஒத்துழைப்பும் ஊக்கமும் வழங்கிய கழக அங்கத்தவர்களுக்கு நினைவுப்பரிசுகள் வழங்கி கௌரவித்தார். திருகோணமலையில் அல்லலுறும் மக்களுக்கான மனிதாபிமான பணிகளை முன்னெடுத்துவரும் ஒரு தொண்டு நிறுவனமாக ரோட்டரி கழகம் செயற்பட்டு வருகின்றது.




இந்நிகழ்வின்போது சுமார் இரண்டு இலட்சம் ரூபா பெறுமதியான கொவிட் வைரஸ் தனிநபர் சுகாதார உபகரணங்கள் ரோட்டரி கழகத்தினால் திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக மருத்துவர் எஸ்.சௌந்தரராஜனிடம் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




# பழையவர்களை புறந்தள்ளி புதிய அணியை உருவாக்குங்கள்

## - த. ம. வி. பு. கட்சியின் வேட்பாளர் ஜெயவாணிதாசன்

மக்களை ஏமாற்றியதன் காரணமாக மக்கள் அரசியல்வாதிகள் என்றாலே வெறுப்போடு இருக்கிறார்கள். நீங்கள் அவ்வாறு அரசியல்வாதிகளிடம் கோபம் இருந்தால் பழையவர்களைப் புறந்தள்ளி ஒரு புதிய அணியை உருவாக்குங்கள் - என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளரான காளிதாஸ் ஜெயவாணி தாசன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீங்கள் அரசியல்வாதிகளை வெறுக்கலாம். அரசியல் கட்சிகளை வெறுக்கலாம். ஆனால், அரசியலை ஒருபோதும் வெறுக்கக்கூடாது. எந்த இனம் அரசியலை வெறுக்கிறதோ அந்த இனம் ஒரு பாதகமான நிலைக்குச் செல்லக்கூடும்.

மாற்று இனத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு ஐந்து வருடத்தில் மிகப்பெரிய வேலைத்திட்டங்களை செய்துகொண்டிருக்கிறார்கள். அந்தவகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஒப்பிடும்போது அவர்களுடைய செயற்பாடு கண்டுகொள்ள முடியாத செயற்பாடாக இருக்கிறது. இதுதான் உண்மையான யதார்த்தம்.

தொல்பொருள் ஆராய்ச்சி சம்பந்தமாக பேச வேண்டுமென்றால் கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக, மட்டக்களப்பு மாவட்டத்தில் 624 இடங்கள் தொல்பொருள் ஆராய்ச்சிக்காக இணங்காணப்பட்ட இடங்களாக இருக்கிறது.

அதில் முதல் 100 இடங்களை தொல்பொருள் சம்பந்தமான ஆராய்ச்சிகளில் ஈடுபடலாம் என்று தரத்தில் எடுத்திருக்கிறார்கள். அந்தவகையில் வேற்றுசேனை, தாந்தாமலை இப்படி 100



இடங்களை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். வேற்றுசேனையில் தொல்பொருள் ஆராய்ச்சி சம்பந்தமாக சென்றபோது மிகப்பெரிய பிரச்சினையொன்று ஏற்பட்டது. ஆனால், நீங்கள் யதார்த்தபூர்வமாக சில விடயங்களை யோசிக்க வேண்டும். ஒவ்வொரு தேர்தல் காலங்களிலும் இனவாத கருத்துகளைத் தூண்டி எமது மக்களை இனவாதத்திற்குள் தள்ளி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் எமது மக்களுடைய வாக்குகளைப் பெற்று செல்வதுதான் வரலாறாக இருக்கிறது.

கடைசியாக நடந்த தொல்பொருள் சம்பந்தமான பிரச்சினைகளுக்கு நீதிமன்றத்தினால் தடைவிதிக்கப்பட்டுள்ளது. அந்த இடத்திற்குள் யாரும் செல்லமுடியாது. சில அரசியல்வாதிகளின் பெயர்கள் குறிப்பிடப்பட்டு அந்த இடத்திற்குச் செல்ல முடியாததாகவும் அந்த இடத்திற்கு மக்கள் கூட செல்ல முடியாததாகவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றத்தினால் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டவுடன் இவர்கள் என்ன நடவடிக்கை எடுத்தார்கள். ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. தொல்பொருள் சம்பந்தமான பிரச்சினை ஏற்பட்டது. அதன்பிறகு நீதிமன்ற தடையுத்தரவு ஏற்பட்டது. ஆனால், தலைவர்களோ தங்களுடைய வேலைகளை செய்துகொண்டிருக்கின்றனர். தங்களது கடமை முடிந்தது என்று இருக்கின்றார்கள்.

அரசியல் அதிகாரத்தை சரியான வகையில் பயன்படுத்துவதன் மூலமாகத்தான் இவற்றுக்கான தீர்வை நாங்கள் பெற்றுக்கொள்ளலாமே தவிர, இதை தவிர்த்து நாங்கள் எந்தவொரு வகையிலும் பெற்றுக்கொள்ள முடியாது.

தொடர்ச்சியாக ஒவ்வொரு ஐந்து வருட காலங்களுக்கு இடையில் வந்து மக்களை ஏமாற்றிக்கொண்டு செல்கிறார்களே தவிர, மக்களுடைய பிரச்சினைகளை தீர்ப்பதற்கு இவர்கள் எந்தவொரு நடவடிக்கையும் எடுப்பதில்லை.

தலைவர் சிவனேசதுரை சந்திரகாந்தன் அவர்களுடைய காலத்தில் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

தொடர்ச்சியாக நாங்கள் எமது மக்களை சந்தித்து வருகிறோம். நமது மக்கள் அரசியலை, அரசியல்வாதிகளை வெறுத்து நிற்கிறார்கள். தொடர்ச்சியாக இந்த அரசியல்வாதிகள் மக்களை ஏமாற்றியதன் காரணமாக மக்கள் அரசியலில் விருப்பமற்று அரசியல்வாதிகள் என்றாலே வெறுப்போடு இருக்கிறார்கள்.

நீங்கள் அரசியல்வாதிகளிடம் கோபம் இருந்தால் பழையவர்களைப் புறந்தள்ளி ஒரு புதிய அணியை உருவாக்குங்கள்.

அந்தவகையில் மக்கள் இவர்களுக்கு தகுந்த பாடம் கற்பிப்பார்கள். இவர்கள் எது சொன்னாலும் மக்கள் ஏற்றுக்கொள்ளப் போவதுமில்லை. இவர்கள் வெற்றிபெற்று அமைச்சுப் பதவியை எடுக்கலாம் என்று எண்ணினாலும் அவர்களை வெற்றிபெற மக்கள் விட மாட்டார்கள் - என்றார்.

# ஐந்து வீரர்களை வெளியேற்றிய இங்கிலாந்து கிரிக்கெட் சபை



சுற்றுலா மேற்கிந்திய தீவுகள் மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கிடையில் மென்செஸ்டரில் நடைபெற்றுவரும் மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து கிரிக்கெட் சபையானது உயிர்-பாதுகாப்பு வலயத்திலிருந்து ஐந்து வீரர்களை விடுவித்துள்ளது.

கொரோனா வைரஸ் தாக்கத்துக்குப் பின்னர் முதல் முறையாக கடந்த 8ஆம் திகதி 117 நாட்களின் பின்னர் இங்கிலாந்து கிரிக்கெட் சபையின் முயற்சியினால் இங்கிலாந்து மற்றும் மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையில் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் மூலமாக சர்வதேச கிரிக்கெட் போட்டி மீண்டும் ஆரம்பமானது.

கொரோனா வைரஸ் சவாலுக்கு மத்தியில் ஆரம்பித்த குறித்த தொடரின்போது வீரர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுவிடக்கூடாது என்பதற்காக உயிர்-பாதுகாப்பு வலயம் **(Bio-Secure Bubble)** உருவாக்கப்பட்டது. இந்த வலயத்துக்குள் இருக்கும் வீரர்கள் உள்ளிட்ட அனைவரும் சட்டதிட்டங்களை கட்டாயம் கடைப்பிடிக்கவேண்டும்.

இதில் இங்கிலாந்து அணியின் வேகப்பந்துவீச்சாளர் ஜொப்ரா ஆர்ச்சர் குறித்த உயிர்-பாதுகாப்பு வவயத்தை விட்டு வெளியேறியதால் இரண்டாவது டெஸ்ட் போட்டிக்கான குழாமிலிருந்து வெளியேற்றப்பட்டு தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தற்போது இறுதி டெஸ்ட் போட்டி நடைபெற்றுவரும் நிலையில், போட்டியில் விளையாடாத டான் லோரன்ஸ், கிரேக் ஓவர்ட்ன், ஒல்லி ரொபின்சன் மற்றும் ஒல்லி ஸ்டோன் ஆகியோரை இங்கிலாந்து கிரிக்கெட் சபை உயிர்-பாதுகாப்பு வலயத்திலிருந்து விடுவித்துள்ளது. மேலும், அயர்லாந்து தொடருக்கான இங்கிலாந்து ஒருநாள் முகாமுக்கு செல்வதனால் ஜோ டென்லியும் உயிர்-பாதுகாப்பு வலயத்திலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.



# “கங்குலி இலங்கை கிரிக்கெட் சபைத் தலைவராக இருந்தாலும் அவருக்கு கிரிக்கெட் மீதுள்ள ஈடுபாடு மாற்றமடையாது”

## – ஐ.சி.சி. தலைவர் பதவிக்கு கங்குலியை பரிந்துரைக்கும் சங்கக்கார

வெற்றிடமாக நிலவிவரும் ஐ.சி.சி. எனப்படும் சர்வதேச கிரிக்கெட் பேரவையினுடைய தலைவர் பதவிக்கு இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் சௌரவ் கங்குலி சிறந்த தெரிவாக இருப்பார் என இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவரும் புகழ்பெற்ற துடுப்பாட்ட வீரருமான குமார் சங்கக்கார தெரிவித்தார்.

கிரிக்கெட் தொடர்பிலான அறிவு, நிர்வாகம் தொடர்பிலான அனுபவம் மற்றும் கங்குலியினுடைய சர்வதேச கிரிக்கெட் அனுபவம் ஆகியன ஐ.சி.சி. தலைவர் பதவிக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என குமார் சங்கக்கார சுட்டிக்காட்டினார்.

ஐ.சி.சி.யினுடைய தலைவர் பதவி தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள குமார் சங்கக்கார இவ்வாறு தெரிவித்தார். “கங்குலியால் சரியான மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என நான் நினைக்கிறேன். அவருடைய கிரிக்கெட் திறமைக்கு மாத்திரமல்லாமல் அவருடைய விவேகமான மூளை என்பவற்றுக்கு நான் மிகப்பெரிய இரசிகன். கங்குலியின் மனதில் உணர்வுபூர்வமாக கிரிக்கெட்டின் மீது ஈடுபாடு உள்ளது. அதனால் அவர் இந்திய கிரிக்கெட் சபை, இலங்கை கிரிக்கெட் சபை அல்லது வேறு கிரிக்கெட் சபைகள் உட்பட ஐ.சி.சி.இன் தலைவராக இருந்தாலும் அவருக்கு கிரிக்கெட் மீதுள்ள ஈடுபாடு மாற்றமடையாது.” என தெரிவித்தார்.

மேலும் தெரிவித்த சங்கக்கார, “பதவிக்கு வரும் ஒருவரின் மனநிலை சர்வதேச கிரிக்கெட்டை அடிப்படையாகக்கொண்டதாக இருக்கவேண்டும். அவருக்கு சாதகமான இடத்தையோ அல்லது அவர் வந்த இடத்தையோ பார்க்கமுடியாது. தான் ஒரு கிரிக்கெட் வீரர் என்பதை அறிந்துவைத்து அதனை விளையாடும் நாடுகளுக்கு உதவவேண்டும். அந்தவகையில் கங்குலி தலைவர் பதவிக்கு பொருத்தமானவர்” என சங்கக்கார தெரிவித்தார்.




# இந்த ஆண்டு நடைபெறவுள்ள எந்தவித போட்டிகளிலும் பங்கேற்கப்போவதில்லை – சமந்தா

இந்த ஆண்டு நடைபெறவுள்ள அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடர் உட்பட இந்த ஆண்டு நடைபெறவுள்ள எந்தவித டென்னிஸ் போட்டிகளிலும் பங்கேற்கப்போவதில்லை என அவுஸ்திரேலிய டென்னிஸ் வீராங்கனையும் 2011 அமெரிக்க ஓபன் டென்னிஸ் வெற்றியாளருமான சமந்தா ஸ்டோசுர் குறிப்பிட்டுள்ளார்.

1984 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியாவின் பிரிஸ்பேனில் பிறந்த சமந்தா ஸ்டோசுர், அண்மையில் ஓரினச்சேர்க்கை மூலம் லிஸ் ஆஸ்ட்லிங் என்ற பெண்ணுடன் இணைந்தார். இந்நிலையில், கடந்த மாதம் இவர்களுக்கு பெண் குழந்தை பிறந்தது. இதன் அடிப்படையில் குழந்தையை அருகிலிருந்து கவனிக்க வேண்டு என்பதனால் இந்த ஆண்டு நடைபெறவுள்ள எந்தவித டென்னிஸ் போட்டிகளிலும் பங்கேற்கப்போவதில்லை என சமந்தா ஸ்டோசுர் தெரிவித்தார்.

மேலும், தற்போது கொரோனா வைரஸ் சூழலில் நிலவும் நடைமுறை சிக்கல்களை தவிர்ப்பதற்காகவும் இவ் வருடம் மீதமுள்ள காலப்பகுதியில் தான் ஓய்வு எடுக்க முடிவு செய்ததாக சமந்தா ஸ்டோசுர் தெரிவித்தார். அத்துடன், அடுத்த ஆண்டு மீண்டும் களம் திரும்புவேன் எனவும் சமந்தா ஸ்டோசுர் தெரிவித்தார்.





# தடுமாறும் மேற்கிந்திய தீவுகள்..; வெற்றியின் விளிம்பில் இங்கிலாந்து

இங்கிலாந்து அணியுடனான மூன்றாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி தடுமாறி வருகிறது. 399 ஓட்டங்களை வெற்றியிலக்காகக்கொண்டு துடுப்பெடுத்தாடிவரும் மேற்கிந்திய தீவுகள் அணி மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் வெறும் 10 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை இழந்து தடுமாறி வருகிறது.

முன்னர் நடைபெற்ற முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் இரு அணிகளும் தலா ஒவ்வொரு போட்டிகளில் வெற்றிபெற்றிருந்த நிலையில், வெற்றியாளரை தீர்மானிப்பதற்கான இறுதிப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமானது. போட்டியில் நாணயசுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்திய தீவுகள் அணி களத்தடுப்பை தெரிவுசெய்தது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 369 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. பதிலுக்கு முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்திய தீவுகள் அணி 197 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது. அதனடிப்படையில் 172 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி அபார துடுப்பாட்டத்துடன் 226 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளை இழந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்திக்கொண்டது.

இதன்பிரகாரம் மேற்கிந்திய தீவுகள் அணியின் வெற்றி இலக்காக 399 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டது. குறித்த இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிவரும் மேற்கிந்திய தீவுகள் அணி மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் ஆறு ஓவர்களுக்குள் வெறும் 10 ஓட்டங்களை பெற்று 2 விக்கெட்டுகளை இழந்து தடுமாறி வருகிறது.

மேற்கிந்திய தீவுகள் அணிக்கு இங்கிலாந்து அணியின் வேகப்பந்துவீச்சாளர் ஸ்டுவர்ட் ப்ரோட் பாரிய சவாலாக விளங்குகிறார். முதல் இன்னிங்ஸில் 6 விக்கெட்டுகளை பதம்பார்த்த அவர் இரண்டாவது இன்னிங்ஸில் முதல் இரண்டு விக்கெட்டுகளையும் பதம்பார்த்துள்ளார்.

# இந்தியாவிலுள்ள யாரையும் பென் ஸ்டோக்ஸுடன் ஒப்பிட முடியாது

## – கவுதம் கம்பீர் புகழாரம்



மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் சிறப்பாக தனது பங்களிப்பை வழங்கிய இங்கிலாந்து அணியின் சகலதுறை வீரர் பென் ஸ்டோக்ஸ் தொடர்பில் இந்திய அணியின் முன்னாள் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் கவுதம் கம்பீர் தனது கருத்துகளைத் தெரிவித்தார்.

“இந்தியாவில் இந்த நேரத்தில் யாரையும் நீங்கள் பென் ஸ்டோக்ஸுடன் ஒப்பிட முடியாது. நிச்சயமாக இல்லை. டெஸ்ட் கிரிக்கெட்டில் அவர் என்ன செய்தார், ஒருநாள் கிரிக்கெட்டில் அவர் என்ன செய்தார், இருபதுக்கு இருபது கிரிக்கெட்டில் என்ன செய்தார் என்பது யாவரும் அறிந்ததே” எனக் குறிப்பிட்டார்.

மேலும் தெரிவித்த கம்பீர், “இந்தியாவில் மட்டுமில்லை, தற்பொழுதுள்ள சர்வதேச வீரர்களை கூட பென் ஸ்டோக்ஸுடன் ஒப்பிட முடியாது” என்ற தொனிப்பட பென் ஸ்டோக்ஸ் பற்றி கவுதம் கம்பீர் புகழ்ந்து கூறியுள்ளார்.



# லயோனல் மெஸ்ஸி பார்சிலோனா கழகத்தை விட்டு வெளியேறமாட்டார்

## – ஜோசப் மரியா பார்தோம் நம்பிக்கை

பிரபல காற்பந்தாட்ட கழகங்களில் ஒன்றான பார்சிலோனா கழகத்திற்காக விளையாடிவரும் ஆர்ஜென்டினாவைச் சேர்ந்த நட்சத்திர வீரர் லயோனல் மெஸ்ஸி குறித்த பார்சிலோனா கழகத்தை விட்டு வெளியேறமாட்டார் என பார்சிலோனா கழகத்தின் தலைவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

பார்சிலோனா கழகத்தைவிட்டு நட்சத்திர வீரர் லயோனல் மெஸ்ஸி விலகுவதாக தகவல்கள் வெளியாகிவந்த நிலையில், அதற்கு பதிலடி கொடுக்கும் முகமாக அக்கழகத்தின் தலைவர் ஜோசப் மரியா பார்தோம் மீண்டும் தெளிவுபடுத்தினார்.

இது குறித்து தெரிவித்த அவர், “ஓய்வு பெறும்வரை பார்சிலோனா கழகத்திற்காக தொடர்ந்து விளையாடுவதே எனது விருப்பம் என மெஸ்ஸி பலமுறை கூறிவிட்டார். எனவே, வீரர்களுக்காக ஒப்பந்தம் நீடிப்பதில் அவர் கையெழுத்திடுவார் என்பதில் சந்தேகமில்லை” என ஜோசப் மரியா பார்தோம் நம்பிக்கை வெளியிட்டார்.



# சீத்துவக்கேடு 32



காரைக்கவி
கந்தையா பத்மானந்தன்

ஒரு மனுசனுக்கு முக்கியமா மூண்டு சிக்கல்கள் அதாவது, மலச் சிக்கல், மனச் சிக்கல், மணச் சிக்கல் இருக்கப்படாது. அப்பதான் அவனால வாழ்க்கையில முன்னேற முடியும் எண்டு அப்பு சொல்லுவார். அதிலும் உந்த மலச் சிக்கல் கனபேருக்கு எப்பவும் சிக்கலாத்தான் இருக்கும். சிலருக்கு விடிய எழும்பின உடன ஒரு சுருட்டு இல்லாட்டில் பீடி சிகரட் பத்தவேணும். இன்னும் சிலருக்கு தேத்தண்ணி கீத்தன்னியை கோப்பியை கீப்பியை குடிக்க வேணும். அப்பதான் ஒரு பிரச்சினையும் இல்லாமல் வயிற்றால போகும் எண்டு சொல்லுவினம் எண்டுவார்.

இப்பிடி உதுகளைப் பாவிச்சும் கூட நேரக் கணக்கா பனையை ஒரு சுத்து சுத்தி வாறவையும் இருக்கினம். இப்பவும் உங்க கன இளந்தாரிப் பெடியள் போனும் கையுமா கக்கூசுக்கை போனால் அவங்கள் லேசில வெளியில வரமாட்டாங்கள். உப்பிடியான ஆக்களுக்கு தொடர்ந்து கஞ்சியைக் குடுத்தால் அதில இருக்கிற நார்ச்சத்து நல்ல மலமிளக்கியாக வேலை செய்து மலச்சிக்கலை நிப்பாட்டும் எண்டுவார்.



அதுமட்டுமில்லை. உந்த கஞ்சியில இருக்கிற மாச்சத்து எங்கட வயித்துக்கு நன்மை தாற பாக்டீரியாக்களின் வளர்ச்சியைத் தூண்டி சமிபாட்டைச் சீராக்கும். அதால சமியாக்குணம் இருக்கிற நாலு வீட்டுக்கு கேக்கிறமாதிரி ட்ராக்டர் கல்லுப் பறிக்கேக்கை வாற சத்தம் மாதிரி ஏவறை விடுகிறவை நெடுக கஞ்சி குடிச்சா கெதியா சுகம் வரும்.

கோடை காலத்தில எங்கட உடம்பு நல்லா வேர்க்கும், நாக்கும் வறளும். அப்பிடியான நேரத்தில அரிசிக் கஞ்சித் தெளிதண்ணி குடிச்சா அதால வாற நீரிழப்புக்கு நல்லம். அதேமாதிரி வயித்தால போறவைக்கும் அதிலும் குறிப்பா, குழந்தையளுக்கும் கிழடு கட்டையளுக்கும் சிறந்த சாப்பாடு கஞ்சித் தண்ணிதான், கஞ்சித் தண்ணி வயிற்றுப்போக்கை நல்லா கட்டுப்படுத்தும் எண்டு அப்பு சொல்லுவார்.

வடிச்ச கஞ்சி, தோலுக்கும் தலை மயிருக்கு மிச்சம் நல்லம் எண்டு ஆச்சி சொல்லுவா. முந்தி நாங்கள் முதல்நாள் வடிச்ச கஞ்சியை ஒரு சட்டியிலை வைச்சு அடுத்தநாள் காலமை தலையில வைச்சு மேல் முழுக்கத் தடவி நல்லா ஊற விட்டுத் தோய்வம். ஆச்சி இப்பிடி கஞ்சி வைச்சு தோயிறது உடம்புக்கு நல்ல குளுமை. அதோட பொம்பிளைப் பிள்ளையளுக்கு தோல் பளபளப்பா வரும். தலைமயிரும் நல்ல பட்டுப் போல வரும். முகமும் பொலியும் எண்டுவா.

அதேமாதிரி எந்த அம்மாள் வருத்தம் வந்த ஆக்களும் வருத்தம் மாறிவர முதலில் மஞ்சளும் வேப்பம் இலைத்துளிரும் அரைச்சுத் தலைக்கு தோய்வினம். பிறகு ஒருநாள் கழிச்சு பழங்கஞ்சி வைச்சுத் தோய்வினம். அதுக்குப்பிறகு ஒருநாள் கழிச்சு தயிரும், பிறகு ஒருநாள் கழிச்சு நல்லெண்ணெயும் வைச்சுத் தோய்வினம். இதால உடம்புச்சூடு குறைஞ்சு அம்மாள் வருத்தத்தால வாற பின்விளைவுகளும் இல்லாமல் போகும் எண்டு ஆச்சி சொல்லுவா.

இப்ப என்னெண்டால், எங்கட மோட்டுச் சனம் நாகரீகம் மெத்திப்போய் உந்தக் கண்டறியாத சம்போ கொண்டிசனர் எண்டு வாங்கி வைச்சு காசைக் கரியாக்கினம். அதோட உடம்பையும் கெடுக்கினம் எண்டுவா. மலர் வேலிப் பொட்டுக்குள்ளாலை எட்டி எட்டி கதைகேக்கை எப்பவும் எச்சில் பறக்கும். உதால முந்தி என்ரை முகம் முழுக்க சரியான தேமல் கிடக்கும். உதுக்கு ஆச்சி என்ன செய்வா எண்டால், அரிசி அவியேக்கை வாற தவிட்டுநுரையை எடுத்து முகத்திலை தேச்சு விடுவா தேமல் இருந்த இடத்திலையும் நிக்காது ஓடிப்போடும்.

இப்பெல்லாம் ஆக்கள் உந்த ஹோட்டல்வழிய ஸ்டார்டர் எண்டு என்னமோ கண்டதுகள் எல்லாத்தையும் சாப்பாட்டுக்கு முதல் சாப்பிடுகினம். ஆனால், முந்தி எங்கட ஸ்டார்டர் உந்தக் கஞ்சிதான். அதுகும் கஞ்சியோட கொஞ்சம் நற்சீரகம் சேத்துக் குடிச்சா நல்லா பசிக்கும். அதோட என்னத்தைச் சாப்பிட்டாலும் கல்லைச் சாப்பிட்டாலும் கூட டக்கெண்டு சமிக்கும் எண்டு ஆச்சி சொல்லுவா.

அதோட உந்த சித்திரை வெக்கைக்கு நல்லா வேனக்குரு உடம்பு முழுக்க அள்ளி எறியும். அப்பிடி வந்தால் ஆக்கள் நெடுக சொறிவினம். அதிலும் முதுகு சொறிய சீப்பு, ஏப்பைக் காம்பு, சுள்ளித்தடி, அடி மட்டம் எண்டு கண்டதாலையும் சொறிவினம். இப்பிடி சொறிய சொறிய புண்ணாக்கும் தோல் எல்லாம் உரிஞ்சு கழட்டின பாம்புச் செட்டை மாதிரி இருக்கும். இப்பிடியானவைக்கு கஞ்சியிலை துணியை நனைச்சு ஒத்தணம் குடுக்க ரெண்டொரு நாளிலை வேனக்குரு காணாமல் போயிடும் எண்டுவார் அப்பு.

இப்ப அல்சீமர் எண்ட ஞாபக மறதி நோய்க்கு கஞ்சி நல்லம் எண்டு விஞ்ஞானியள் சொல்லினம். நான் நினைக்கிறன் உந்த கஞ்சி டெய்லி குடிக்கிறதாலதான் எங்கட அப்பு ஆச்சிமார் இப்பவும் பழைய கதையள் சம்பவங்கள் படிச்ச பாடங்கள் எல்லாத்தையும் அறளை பெயராமல் நல்ல ஞாபகமா வைச்சிருக்கினம் போல.

உந்த ஞாபக சக்தி குறைவாலதான் இப்ப எங்கட பெடி பெட்டை கனக்க சோதினை பெயில் பண்ணுதுகள். அதால அதுகளுக்கு கஞ்சி குடுத்தா அதுகளின்ரை ஞாபக சக்தி நல்லா இருக்கும். அதேமாதிரி ஞாபக மறதியால கஷ்ரப்படுகிற மற்றவைக்கும் கூட நல்லா கஞ்சி ஊத்திறது நல்லது எண்டு நினைக்கிறன்.

விடியக் காலமை ஈஸ்ட் அது இது எண்டு கண்டதையும் போட்டு செய்த பாண் பணிஸ் எண்டு காவல் நிண்டு வாங்கித் திண்டு உடம்பும் பெருத்து, வயித்துக் கோளாறு, வாய்வுக் கோளாறு, சுகர் பிரச்சினை, கொலஸ்ட்ரோல் பிரச்சினை, அந்தப் பிரச்சினை இந்தப் பிரச்சினை எண்டு ஒப்பாரி வைக்கிறவை உந்தச் சாப்பாடுகளை விட்டுப்போட்டு கஞ்சிக்கு மாறினால் எல்லா வருத்தமும் கண்காணாத இடத்துக்கு ஓடிப் போடும்.





ஆர் என்னத்தைச் சொன்னாலும் எப்பிடிச் சொன்னாலும் உந்த மினிபஸ்ஸுக்கை ஆக்களை அமத்தி வைச்சிருக்கிற மாதிரி பிரசர் குக்கர், ரைஸ் குக்கரிலை அரிசியை போட்டு அமத்தி வைச்சு அவிக்கிற ஆக்களுக்கு கஞ்சியின்ரை முக்கியம் விளங்காது.

அதிலும் என்ன காலமை சாப்பிட்டனி எண்டு ஆரும் கேட்டால் நான் கஞ்சி குடிச்சனான் எண்டதும் என்னை ஒருமாதிரி இளக்காரமா பாக்கிறவையை இழுத்து அறைய வேணும் போல இருக்கும். கஞ்சி ஒரு மனுசனுக்கு இவ்வளவு முக்கியமானது எண்டதாலதான் எங்கட கோயில் வழியை சித்திரைக் கஞ்சி, ஆடிக் கஞ்சி எண்டு கஞ்சி காச்சி ஊத்திற வழக்கம் இருக்கெண்ட அடிப்படையும் இவைக்குத் தெரியாது... ***(தொடரும்)***



# "இழந்த நேரம் திரும்ப வராது: கடந்து செல்வதே சிறந்தது"



"இழந்த பணத்தை மீட்டுவிடலாம், இழந்த புகழை மீட்டுவிடலாம். இழந்த நேரம் ஒருபோதும் திரும்ப வராது" – இவ்வாறு இசைப்புயல் ஏ.ஆர்.ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

மறைந்த பொாலிவுட் நடிகர் சுஷாந்த் சிங் நடிப்பில் உருவாகியிருக்கும் 'தில் பெச்சாரே' என்ற திரைப்படம் சனியன்று வெளியானது. இப்படத்திற்கு ஏ.ஆர். ரஹ்மான் இசையமைத்துள்ளார்.

நீண்ட இடைவெளிக்குப் பின்னர் பொலிவுட் படத்தில் இசை அமைத்தது குறித்து பேட்டியளித்த ஏ.ஆர்.ரஹ்மான கூறியதாவது:–

"பொலிவுட்டில் என்னை பணியாற்றவிடாமல் தடுக்க ஒரு கும்பல் வேலை செய்கிறது. நல்ல படங்களை எப்போதும் நான் தவிர்ப்பதே இல்லை. ஆனால், என்னோடு கருத்து வேறுபாடு கொண்ட ஒரு கும்பல் தவறான செய்திகளை பரப்பி வருகிறது என்று நினைக்கிறேன்.

'தில் பெச்சாரா' படத்துக்கு இசையமைக்க இயக்குநர் முகேஷ் சாப்ரா என்னிடம் வந்தார். இரண்டு நாட்களில் அவரிடம் நான்கு பாடல்களை கொடுத்தேன். அப்போது அவர் என்னிடம், "பலர் என்னை உங்களிடம் போகவேண்டாம் என்று கூறினார்கள். அவர்கள் ஏதேதோ கதைகளை சொல்கிறார்கள்" என்று கூறினார். அப்போதுதான் எனக்குப் புரிந்தது. அவர்களுக்கே தெரியாமல் அவர்கள் இந்தத் தவறை செய்துகொண்டிருக்கிறார்கள் என்று.

**பரவாயில்லை. எனக்கு விதியின் மீது நம்பிக்கை இருக்கிறது. அனைத்தும் இறைவனிடமிருந்தே வருகிறது என்று நம்புபவன் நான். எனக்கு வரும் படங்களுக்கு நான் இசையமைக்கிறேன். அனைவரையுமே நான் வரவேற்கிறேன்.**

– இவ்வாறு ஏ.ஆர். ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு கூறிய ரஹ்மானுக்கு சினிமா உலகம் ஆதரவு தெரிவித்துவருகிறது. சேகர் கபூர் "பொலிவுட் உங்களை கையாண்டதை விட அதிகமான திறமை உள்ளதை நிரூபித்து விட்டீர்கள்" என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் ரஹ்மான்,

**"இழந்த பணத்தை மீட்டுவிடலாம், இழந்த புகழை மீட்டுவிடலாம், ஆனால், நமது வாழ்க்கையில் இழந்த முக்கியமான நேரத்தை ஒருபோதும் திரும்பப் பெறமுடியாது. அமைதி! இதிலிருந்து நகர்ந்து செல்ல வேண்டும். செய்வதற்கு இன்னும் சிறந்த விடயங்கள் உள்ளன"**

– என்று தனது டுவிட்டரில் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.



# ஐ.நா.வையும் விடவில்லை

கொரோனா என்னும் கொள்ளை நோய் உலகம் முழுவதையும் ஆட்டிப்படைத்து வருகிறது. ஊரடங்கை தளர்வு செய்த அமெரிக்கா மீண்டும் ஊரடங்கை அமுல்படுத்தவேண்டிய நிலைக்கு கொரோனா கோரத்தாண்டவம் ஆடிவருகிறது.

ஐ.நா. பொதுச்சபைக் கூட்டம் உலகத் தலைவர்களின் நேரடி பங்கேற்பில்லாமல் செபடிம்பரில் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதுவே வரலாற்றில் முதன்முறை. ஆண்டுதோறும் நியூயோர்க் நகரத்தில் ஐ.நா. பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும். இதில் 193 உறுப்புநாடுகளின் தலைவர்கள் பங்கேற்று உலகுக்கு உரையாற்றுவார்கள். ஒருவாரத்துக்கும் மேல் கோலாகலமாக இந்தக் கூட்டம் நடைபெறுவது வழக்கம்.

ஆயிரக்கணக்கானோர் இதில் பங்கேற்பது வழக்கம். அதிலும் இந்த ஆண்டு ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தின் 75ஆவது ஆண்டு. செப்டெம்பர் 15ஆம் திகதி பொதுச் சபைக் கூட்டம் தொடங்கவேண்டும். ஆனால், இந்த சிறப்புவாய்ந்த கொண்டாட்டத்தை தடைசெய்யும் வகையில் கொரோனா தனது கொடிய முகத்தைக் காட்டி அச்சுறுத்தி வருகிறது.

கொரோனா தாக்கத்தில் நியூயோர்க் முதலிடம் வகிப்பதால் ஐ.நா. பொதுச் சபை அரங்கு அமைந்துள்ள அப்பகுதியில் யாரையும் அனுமதிப்பதில்லை. எனவே, இந்த ஆண்டு பொதுச் சபைக் கூட்டத்தில் உலகத் தலைவர்கள் யாரையும் நேரடியாக பங்கேற்க செய்யாமல் வீடியோ மூலம் அவர்களது உரையை உலகுக்கு ஒளிபரப்பு செய்வது என்று தீர்மானித்துள்ளது.

அனைத்து உறுப்புநாடுகள், பார்வையாளர் நாடுகள், ஐரோப்பிய கூட்டமைப்பு போன்றவை தங்கள் தலைவர், துணை தலைவர், இளவரசர் ஆகியோரின் உரையை முன்கூட்டியே பதிவுசெய்து அனுப்பிவைக்க கேட்டுக்கொண்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் கடந்த மார்ச் மாதம் முதலே ஐ.நா. பொதுச் சபை அரங்கில் செய்யப்பட்டு வந்துள்ளதாக தெரியவந்துள்ளது. இந்நிலையில், ஐ.நா.வில் கடந்த 20ஆம் திகதி நடந்த மறுதிறப்பின்போது அதிகபட்சமாக 400 பேரை அரங்கில் அனுமதிக்க முடிவு செய்துள்ளது. அதேபோன்று 10 முதல் 40 சதவீத மக்களை அனுமதிக்கவும் தீர்மானித்துள்ளது.

ஐ.நா.வின் சிறப்புமிக்க 75ஆவது ஆண்டு பொதுச் சபைக் கூட்டத்தைக் கொண்டாடவிடாமல் கொரோனா அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளமை அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

அதேபோன்று சிறப்பு பிரகடனக் கூட்டத்தில் பங்கேற்று உரை நிகழ்த்த முடியவில்லையே என்ற ஆதங்கம் உறுப்புநாட்டு தலைவர்களுக்கும் எழுந்துள்ளது.

உலகத் தலைவர்கள் நேரடியாக பங்கேற்கும்போது பல்வேறு பேச்சுவார்த்தைகள் நடக்கும். இரு நாட்டுக்கிடையே ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும்.

இதற்கான வாய்ப்புகள் இந்த ஆண்டு ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் இல்லை என்பது கூடுதல் வருத்தம்.

ஒவ்வொரு நாட்டின் சார்பிலும் பிரதிநிதிகள் பங்கேற்கலாம் என்ற அறிவிப்பு ஆறுதலை தருகிறது. இருந்தாலும் கொரோனா ஐ.நா. கூட்டத்தையும் விட்டுவைக்கவில்லை என்பதே இந்த ஆண்டின் வரலாற்றுச் சோகம் என்பது குறிப்பிடத்தக்கது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7